635

மாத வெளியீடு

சக்தி



அறிவிப்பு

ஸௌத் இந்தியா பிக்சர்ஸ்

சந்தோஷ சமாசாரம்!

★

எங்களது காரியாலயத்தை சென்னை ஜென ரல் பாட்டர்ஸ் ரோட், 'பாரத் பில்டிங்ஸி'ல் செப்டம்பர் 4உ வியாழக்கிழமை யன்று ஏற் படுத்தியிருக்கிறோம் என்ற சந்தோஷச் செய் தியைத் தமிழ் மக்களுக்கு அறிவிக்கிறோம்.

எங்களது டிஸ்ட்ரிபியூஷன் ஸ்தாபனத்தின் மூலம் பிலிம் தொழிலுக்குச் சிறந்த தொண்டு புரிவதே எங்கள் நோக்கம்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா ப்ரொட்யூ ஸர்கள், டிஸ்ட்ரிபியூட்டர்கள் மற்றும் பிலிம் தொழிலில் ஈடுபட்டுள்ள ஸகலருடைய ஆதர வையும் ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.

★

THE SOUTH INDIA PICTURES

'BHARATH BUILDINGS'

GENERAL PATTERS ROAD : : MOUNT ROAD, MADRAS

முதலாவது
பர்மியப்படம்
சந்தமலா
தமிழ் டைட்டிலுடன்
PREMIER
மாந்தலே காட்டில்
யானை, கரடி, மலைப்
பாம்பு முதலியவைகளுடன்
தயாரிக்கப்பெற்றது. பர்மிய
நடனம், சங்கீதம், விளையாட்டு
முதலியவைகள் நிறைந்த
படம்
டாக்கு மெண்டரி பிலிம்ஸ், லிமிடெட்,
இராயப்பேட்டை
மதறாஸ்

அருமை சகோதரிகளே !

சில மூலிகைகள் மற்றும் உலோகங்களில் வருஷக்கணக்காக விஞ்ஞான ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட்ட "குமாரி" (Regd.) பரிசுத்தமான அபாயமற்ற மருந்து. சில மணி நேரங்களில் போக்கை யளிக்கவல்லது. மாதக்கணக்காக நின்றுபோயிருந்தாலும் தடைபட்டிருந்தாலும் 3 அல்லது 4 மாத கர்ப்பமாய் இருந்தாலும் ஸ்திரீகளின் இதர கோளாறுகளானாலும் நிவர்த்திக்கிறது. விவரங்கள் இரகசியமாக வைத்திருக்க உத்தரவாதம். விலை ரூ. 3/- (தபால் பாக்கிங் உள்பட). வெளிநாட்டு நேயர்கள் ரூ. 3/8. (தபால் பாக்கிங் உள்பட) முன்பணமாக அனுப்பவேண்டும். கடிதங்கள் ஆங்கிலத்தில்.

Mrs. P. DEVEE, F.D.S., (Gold Medalist)
9-3, Chanditola (Russa) Tollygunge
CALCUTTA

THE LILY BISCUIT CO.
CALCUTTA

பல ரகங்களில் கிடைக்கும்

எப்போதும் புதிதாகவும் ருசிகரமாயுமுள்ள
ஒவ்வொரு ரகமும் பிரத்யோகமாகத் தயாரிக்கப்பட்டது

ஸோல் ஏஜண்டுகள் :

S. VISWANADHAM & CO.,
44, BUNDER STREET, MADRAS

அறிவிப்பு

நாங்கள் எல்லாவிதமான எலக்ட்ரிக் ரிப்பேர்களும், வயரிங்குகளும், செய்து கொடுப்பதோடு ரேடியோக்களும் ரிப்பேர் செய்து தரப்படுமென்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்

ELECTRICAL SERVICES
29, Gopathy Narayanasamy Road
THYAGARAYANAGAR
MADRAS

Phone: 88398

அசோகா சுகந்த பாக்குத்தூள்

ரிஜிஸ்டர் நெ. 1506

புது மலர் 1

மகாத்மா காந்தி

உலகிற் சிறந்த 63 அறிஞர்கள் தங்களுடைய அறிவுத் திறனைக்கொண்டு முடிவு செய்திருப்பவைகளை இந்த நூலினுல் தெரிந்து கொள்ளலாம்.

ஆங்கிலத்தில் தொகுத்தது	தமிழில் மொழிபெயர்த்தது
ஸர். ராதாகிருஷ்ணன் எம். ஏ.	''ஜோதி'' ஆசிரியர் வே. சாமிநாத சர்மா

சுமார் 675 பக்கங்கள்!

விலை ரூ. 3.

இந்தியா, பர்மாவிற்கு தபாற் செலவு 0-7-0

புது மலர் 2 — மாஜினி எழுதிய

மனிதன் கடமை

''சுதந்திரமில்லாத நாட்டில், லௌகிக வாழ்க்கையைச் சீர்திருத்த முயற்சிப்பது, நுனிமரத்திலிருந்து அடி மரத்தை வெட்டுவதாகும்'' என்று வெறும் வார்த்தைகளால் மட்டும் கூருமல் தன் அனுபவத்தினுலும் உரைக்கிருன் மாஜினி. அவன் எழுதிய நூல்களில் சிறந்தது இந்த நூல். அவனுடைய சரித்திரமும் சேர்ந்தது. 400 பக்கங்கள்.

விலை ரூ. 2

இந்தியா, பர்மாவிற்கு தபாற் செலவு 0-5-0

சக்தி காரியாலயம், சென்னை

உங்களுடைய அறிவுப் பொக்கிஷத்தில் இந்த நூல்கள் இருக்கின்றனவா?

16 MAR 1942
MADRAS

சக்தி மலர்கள்

	ரூ.	அ.
1. இனி நாம் செய்ய வேண்டுவது யாது?	0	12
2. உலகம் சுற்றும் தமிழன்	0	12
3. நிர்மலகுமாரி	0	12
4. அசலா [கிருஹதாஹ்]	1	8
5. சிறை அனுபவங்கள்	0	12
6. கூண்டுக்கிளி	1	0
7. ஆ,பேரிச்க	1	0
8. டால்ஸ்டாய் சிறு கதைகள் (பாகம் 1)	1	0
9. டால்ஸ்டாய் சிறு கதைகள் (பாகம் 2)	1	0

நவயுக புது வெளியீடுகள்

	ரூ.	அ.
திருச்சி ஜெயில்	1	12
மகாராஷ்டிர ஜீவன் உதயம்	1	12
ரஜபுத்திர ஆதிக்கத்தின் அஸ்தமனம்	1	12
வினோபா பாவேயும் அவர் சிந்தனைகளும்	1	12
அமெரிக்காவின் அறைகூவல்	1	12
பெண்	1	12
கிரஹதாகம் I	1	12
ஷை II	1	12
தற்காலத் தமிழ் இலக்கியம்	1	8
இந்தியாவும் பொதுநல சமுதாயமும்	1	8
ஸ்டாலின்	1	4
அற்புத உலகம்	1	0
ஆங்கிலக் கவிதை மலர்கள்	1	0
ஷை பரிசுப் பதிப்பு	1	8
மாதவி	0	12
மேஹர்-உன்னிஸா	0	8
அடிவானத்துக்கு அப்பால்	0	6
அவன் அமரன் [கம்பனைப் பற்றிய நாடகம்]	0	4

எங்களிடம் எல்லாத் தமிழ் புத்தகங்களும் கிடைக்கும்

சக்தி காரியாலயம்

P. O. Box No. 1361

367, எஸ்பிளனேட், சென்னை

பர்மாவில் நமது
கிளைக் காரியாலயம்

பர்மாவில் உள்ள 'சக்தி' நேயர்களின் சௌகரியத்தை உத்தேசித்து, சக்தியின் கிளைக் காரியாலயத்தை நத்தலினில் ஏற்படுத்தியிருக்கிறோம். எங்களுக்குப் புத்தக ஆர்டர்கள் கொடுப்போரும் சந்தாச் செலுத்துவோரும் கிளைக் காரியாலயத்திலேயே செய்துகொள்ளலாம்.

சக்தி கிளைக் காரியாலயம்
NATTALIN
THARRAWADDY DT.

சந்தா விகிதம்

உள் நாடு

வருடச் சந்தா	... ரூ.	3	0	0
6 மாதம்	... ,,	2	0	0
தனிப்பிரதி	... ,,	0	4	0

☆

பர்மா

வருடச் சந்தா	... ரூ.	4	0	0
6 மாதம்	... ,,	2	4	0

☆

மலேயா

வருடச் சந்தா	... ரூ.	5	0	0
6 மாதம்	... ,,	2	12	0

சிலோன் 25 சதம்

மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபாற் செலவு சேர்த்து அனுப்ப வேண்டும்.

☆

அறிக்கை

சந்தாப் பாக்கி உள்ளவர்கள் தங்கள் சந்தாக்களை அனுப்புவதுடன், பத்திரிகை விஷயமாகத் தகவல் எழுதும்போது சந்தா நம்பரைக் குறித்தனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

☆

நமது பிரதிநிதி

நமது பிரதிநிதி திரு. ரா. பாலசுப்ரமண்யம், 'சக்தி'யின் அபிவிருத்தியை நாடி, தமிழ் நாடெங்கும் சுற்றுப் பிரயாணஞ் செய்து வருவதால், அங்கங்கே உள்ள நண்பர்கள், அவருக்கு ஒத்தாசை புரிந்து இயன்ற ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர்,
சக்தி காரியாலயம், சென்னை

பொருள் அடக்கம்

தமிழனும் தமிழ்ப் பாட்டும் ... 97
காலச் சுழல் ... 98
உல்லாசப் பேச்சு ... 99
மீனோட்டம் (கதை)
லா. ச. ராமாமிருதம் ... 100
பறித்த பூக்கள் 103
வெளிநாட்டில் சினிமாத் தொழில்
ஏ. கே. செட்டியார் ... 105
காக்கிநாடாவில் தமிழ் சங்கீதம்
டி. கே. சிதம்பரநாத முதலியார் ... 109
பிரிந்த காதலன் (பாட்டு)
'பூ' ... 111
காந்தி வாக்கு ... 112
மகாத்மா காந்தி
'ஸரஸி' ... 113
காந்தித் தாத்தா (பாட்டு)
சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 115
ஒரு தும்மல்
மு. அருணாசலம் ... 116
பர்மாவின் புது வாழ்வு
'ஸஞ்சாரி' ... 118
'பொழுது போகல்லியே
வ. ரா. ... 119
பர்மாவின் கலைச் செல்வம் (படங்கள்) ... 120
வேலையில்லாத் திண்டாட்டம்
லியோ டால்ஸ்டாய் ... 123
ராணி வேலுநாச்சியார் (கதை)
சுவாமி சுத்தானந்த பாரதியார் ... 125
ரமணியின் தலைவலி
எஸ். சுப்பிரமணியன் ... 127
இதுதான் முஸ்லீம் லீக்
எட்வர்டு தாம்ஸன் ... 129
சிறையில் தலைவர்கள்
டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் ... 131
ஜமீந்தாரிணி
ஆர். ஷண்முகசுந்தரம் ... 133
சித்திரமும் சிறு கதையும்
ஸாது டி. எல். வாஸ்வானி ... 136
தொந்தி கரைப்பது எப்படி ?
திருவேதி ... 137
கத்தி மழை (கதை)
'உல்லாசி' ... 138
புத்தக உலகம் ... 141
பாலர் கதை : திருட்டும் துக்கமும்
'நீலா' ... 143
,, பாட்டு : மழைக்குப்பின்
'பெ. தூரன்' ... 144
ஒலியும் நிழலும் ...

சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து போலிகவே!

மலர்: ௫ இதழ் ௩ விஷு—புரட்டாசி

தமிழனும் தமிழ்ப் பாட்டும்

சங்கீதமென்பது ஒருகாலத்திலே 'தேவலோகத்துக் கன்னிகை'யாக இருந்திருக்கலாம்; மனிதர்களிலே மேல் தளத்துக்கெழுந்ததொரு சிறு கோஷ்டியின் ஏகதேச இன்ப சாதனமாகவும் இருந்திருக்கலாம். காலம் மாறி வருகிறது. சர்வ கலைகளும் போக சாதனங்களும், 'ஜனநாயக'ப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றன. ஞானக் கலைகள் வேறே; போகக் கலைகள் வேறே. ஞானக் கலைகளை வேண்டுமானால், சகல ஜனங்களுக்கும் எட்டாமல் ஒதுக்கி வைத்திருக்க, அவசியம் ஏற்படலாம். போகக் கலைகளை இனி அப்படிச் செய்ய முடியாது. இன்று, கர்னடக சங்கீதம் சம்பந்தமாக, தமிழ்ப் பாட்டு விவாதம் நடக்கிறதே அதை, இந்த முக்கியக் கொள்கையை உறை கல்லாகக் கொண்டுதான் ஆராயவேண்டும்.

தமிழ் மக்களின் முன்னிலையிலே, தமிழ்ப் பாடகர்கள், தமிழிலே பாடவேண்டும் என்று ஒரு யோசனையைச் சில தமிழன்பர்கள் கூறுகிறார்கள். இதைச் சிலர் எதிர்க்கிறார்கள். பிரமாத வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன. இங்கே நாம் மூன்று விஷயங்களைக் கவனிக்கவேண்டும்: (1) தமிழர் தமிழ்ப்பாட்டுப் பாடவேண்டும் என்ற யோசனை வந்ததற்குக் காரணம் என்ன? அது சரியா, தவறா? (2) இந்த யோசனையை உடனே நிறைவேற்ற முடியுமா? முடியாதென்றால், என்ன கஷ்டங்கள் உண்டு? (3) தமிழ்ப்பாட்டு வேண்டுமென்ற யோசனை சரியென்றால், அதை நிறைவேற்றுவதில் உள்ள கஷ்டங்களை எப்படியாவது சமாளித்துத்தானே ஆகவேண்டும்? அதற்கு வழியுண்டா?

இந்த மூன்று கேள்விகளையும் தனித் தனியாகக் கவனிப்போம்:

(1) இன்று தமிழ்ப் பாட்டுக் கச்சேரிகளிலே, முழுக்க முழுக்க வேறு பாஷைப் பாடல்களையே பாடுகிறார்கள். அடிப்படையாய் நோக்கும்போது, இது தமிழுக்கு இழுக்காகும்; தமிழனின் தன்மதிப்புக்குப் பங்கமாகும். இந்த ஒரே காரணம் போதும், தமிழிலே தமிழ்ப் பாட்டு வேண்டும் என்று வற்புறுத்துவதற்கு. ஆனால், இதற்குச் சில எதிர் வாதங்கள் சொல்லுகிறார்கள். சங்கீதத்துக்குப் பாஷைக் கட்டுப்பாடெல்லாம் கூடாது என்பது ஒரு வாதம். இது வாஸ்தவமானால், வேறு பாஷைகள் மட்டில் அதை என் கட்டுப் படுத்திக் கொண்டிருக்க வேண்டும்? நமது பாஷை ஸாகித்யங்கள் தான் வரட்டுமே? தமிழ் மொழி, சங்கீதத்துக்கு ஏற்றதல்ல என்று, முழு மோசமான, திடுக்கிடத்தக்க வாதத்தையும் சிலர் கூசாமல் சொல்லுகிறார்கள். அப்படியானால், தமிழுக்குப் பொருந்தாத ஒரு கலை, தமிழனுக்கு வேண்டவே வேண்டாம் என்றுதான் கூறத் தோன்றுகிறது. ஆனால் உண்மை அது அல்ல. தமிழ் மிக இனிமையான பாஷை. தமிழனின் செவி, சங்கீதத்தைப் பருகத் தக்க பக்குவம் பெற்றதென்றால், அந்தப் பக்குவம் அவனது பாஷைக்கும் சொந்தமாய்த்தானிருக்க முடியும். பாஷை, ஜீவனுடையது. ஒரு ஜனங்களின் வாழ்க்கைக்கும் கலாசாரங்களுக்கும் மறைமுகமானதொரு வேர், பாஷைதான். ஒரு பாஷைக்கு ஒவ்வாததொரு கலை, அந்த ஜனங்களுக்கும் பொருந்தாதென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிடலாம். அதிலும், சங்கீதம் போன்ற கலையில், நாதசுகம் மட்டிலும் அல்ல, மொழியின்பமும் உணர்ச்சிகளைக் கிளறுகிறது. உயர்தரமான நாதசுகத்தை மட்டிலும் பருகுவது, மிகுந்த சங்கீதப் பயிற்சி நிறைந்த சிலருக்கு மட்டில் சாத்தியமாக இருக்கலாம். மொழி இன்பத்தையும் கலக்கும் போதுதான், சங்கீதப் பயிற்சியற்ற சாமான்யருங் கூட, அதை அனுபவிக்க இயல்கிறது.

(2) ஆனால், தமிழ்ப் பாட்டு யோசனையை உடனே பரிபூர்ணமாய் நிறைவேற்றுவதில் சில சிரமங்கள் இருப்பதை, நாம் ஒப்புக்கொள்கிறோம். கர்நாடக சங்கீதம், தற்பொழுதுள்ள நிலையில், தெலுங்கு பாஷையைச் சுற்றியே பெரும்பாலும் வளர்ந்திருக்கிறது. பதங்களும் மற்றுமுள்ள பாடல்களுமாக, ஆயிரக்கணக்கான பாட்டுக்கள் தமிழிலே இருப்பது வாஸ்தவம். ஆனால், சங்கீதக் கலையையே ஜீவனாய்க் கருதி, முறையே கீதங்கள், வர்ணங்கள், கிருதிகள் முதலிய வற்றை, பல்வேறு ராக ஸ்வரூபங்களையும் தாளக் கட்டுக்களையும் உள் அடக்கித் தயாரித்த ஸாஹித்யங்கள் தமிழிலே இல்லையென்று ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். எந்தக் கலைக்கும் அதன் ஐதீகம் ஒரு மூலதனமாகும். புதிய மாறுதல்களைச் செய்யும் போது, அந்த ஐதீகத்தைப் பாழ்

படுத்தாமல் அவற்றைச் செய்து முடிப்பதே வளர்ச்சிக்கு மார்க்கமாகும். தியாகையர்வாள், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், மஹா வைத்தினதையர் போன்ற ஸாஹித்ய மேதைகளின், 'சங்கீத ஆசு' களை நாம் இழக்கலாகாது. கர்நாடக சங்கீதத்தைக் காப்பாற்றி, தமிழ்ப் பாடல் மாறுதலையும் செய்ய வேண்டுமென்றால், ஒரு புறத்தில் முறையாய்ச் சங்கீதம் பயில, கையில் உள்ள பிற மொழி ஸாஹித்யங்களை உபயோகித்துக் கொண்ட வண்ணமே, மறு புறம் அதிகமதிகமாய்த் தமிழ் ஸாஹித்யங்கள் சிருஷ்டியாகி, அவற்றுக்கு ஆதரவும் கிடைத்து வரவேண்டும். 'ஐயோ! கர்நாடக சங்கீதம் போய்விடுமே!' என்று யாரும் கவலைப்பட வேண்டாம். கர்நாடக சங்கீதத்தைக் காப்பாற்றும் வழி, அது அந்தண்டை இந்தண்டை போகாமல் எல்லை கட்டி முனையடித்துத் தொழுவத்தில் கட்டி வைப்பதல்ல; அதன் அந்நிய பாஷை விலங்கைத் தரித்து, கால உணர்ச்சியை தழுவி, சுயேச்சையாய் வளரவிடுவதே வழியாகும்.

(3) இந்த உபத்திரவம் எல்லாம் எதற்கு? வீண் தொல்லையல்லவா? பேசாமல் இருந்தபடியே இருக்கட்டுமே என்று சிலர் வேதாந்தம் பேசக் கூடும். எந்தத் துறையிலும் சரி, இருக்கும் நிலைமையை மாற்றுவதென்றால், வாழ்வும் வளர்ச்சியும் வேண்டுமென்றால், இதே உபத்திரவம்தான். சுயராஜ்ய முயற்சி எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது? விட்டுவிடலாமா? தியாகங்களைச் செய்ய வேண்டும்; கஷ்டங்களைக் கடக்கவேண்டும் - அப்போதுதான் முன்னேற முடியும்.

தமிழனுக்குத் தமிழ்ப்பாட்டு வேண்டுமென்றால், இனி அதை யாரும் எதிர்த்துப் பயனில்லை. அதிலே பரஸ்பரம், கெட்ட நோக்கங்கள் கற்பித்துக் கொண்டு, விஷமங்கள் செய்வதும் நியாயமல்ல. கால நதி பெருக்கெடுத்து வருகிறது: சங்கீதக் கலைஞர் அதிலே மூழ்கி மறைய வேண்டாம்; மூழ்கிக் குளித்தெழுந்து, முன்னினும் சிறப்பாய் வெளி வர வழி தேடுவதே அறிவுடைமையாகும்.

★ காலச்சுழல் ★

காந்தி ஜயந்தி

அக்டோபர் ௴ 2௳ இந்தியாவின் சரித்திரத்திலே—ஏன், உலக சரித்திரத்திலேயே—மகா புனிதமான தினமாகும். அது மகாத்மா காந்தி பிறந்த நாள். காந்தி ஓர் அபூர்வ புருஷன்; ஆயிரம் ஆண்டுகளுக்கொரு முறை தோன்றும் ஒரு மகான். அவரை இந்தியத் தேசியம் தனது அரசியல் வழி காட்டியாகப் பெற்றிருப்பது இந்தியாவின் பாக்கியம்; உலகத்துக்கு கிடைத்திருக்கும் பெரியதொரு சந்தர்ப்பம். காந்தி வெறும் அரசியல்வாதியல்ல; வெறும் மகானுமல்ல. மனித வாழ்க்கையை அப்படி 'கம்பார்ட்மெண்டு'களாகப் பிரிக்க முடியுமா? காந்தியின் வாழ்க்கை ஒரு மகோன்னத லட்சியத்தைத் தாங்கி நிற்கும் தத்துவமாகும். காந்தி ஜயந்தியை, ஜாதி மத நிறபேதங்களையும் அரசியல் சமூகப் பொருளாதார வேற்றுமைகளையும் மறந்து, நாம் என்றென்றும் கொண்டாடிவரக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வருஷமும் கொண்டாடுவோம். காந்தி நீடூழி வாழ்க!

லீக் குளறல்

லீக்கிலே ஜின்னா வெற்றி பெற்று விட்டார் என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், அவர் கட்டளைப்படி, ஸர் சிக்கந்தர், கனம். பஸ்லுல் ஹக், கனம். ஸாதுல்லா ஆகிய மூவரும் தற்காப்புக் கவுன்ஸிலிலிருந்து விலகிவிட்டார்களல்லவா? ஆனால், கூர்ந்து கவனித்தால், ஜின்னாவின் வெற்றி வெறும் கானல் நீர் என்று புலனாகும். கனம். பஸ்லுல் ஹக், ஜனாப் ஜின்னாவை வம்புக் கிழுத்திருக்கிறார். லீக்கிலே ஒரு பெரிய குடும்பக் கலகத்தை அவர் உண்டாக்காமல் விடமாட்டார்போல் இருக்கிறது. ஸர் சிக்கந்தரும் அதேபோல் தத்தளிப்பதாகவே கருதவேண்டியிருக்கிறது. ஸர் சிக்கந்தர் போகிற வழியேதான் சாதுல்லா போவார். ஆகையால், கூடிய சீக்கிரம் காயிதே அஜம் ஒரு பக்கத்திலும், மூன்று முஸ்லீம் பிரதமர்கள் மறு பக்கத்திலுமாக நின்று, ஒரு போராட்டம் நடக்கத்தான் போகிறதெனத் தோன்றுகிறது.

இலங்கைப் பேச்சு

இந்தோ - இலங்கைப் பேச்சுக்களில் ஏதோ சமரசமான முடிவுகள் ஏற்பட்டதாக, ஒரு செய்தி வந்தது. விவரங்கள் வெளியாக வில்லை. என்றாலும், எத்தனையோ நாளாய் முடியாத காரியம் முடிந்ததே என்று சந்தோஷித்தோம். ஆயினும், பின்வரும் பத்திரிகை ஹேஷ்யங்களைப் பார்க்கும் போது, பயமாயிருக்கிறது. இலங்கையில், மற்றொரு 'பர்மா' தான் சிருஷ்டிக்கப் படுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. மொத்தத்தில், பர்மா, இலங்கை இந்நாடுகள், தாங்களும் இந்தியாவும் சுதந்திர மடையும் வரையில், இந்தியர் குடியேற்றப் பிரச்னையை ஒத்திப் போடவேண்டுமென்று மகாத்மா கூறிய யோசனைதான் நியாயமாகும். அதற்குள்ளே இந்தப் பிரச்னையைக் கிளறுவது, இந்தியாவுக்கும் இந்தப் பக்கத்து நாடுகளுக்கும் மனக் கசப்பை வளர்க்கத்தான் வளர்க்கும். யாருக்கும் லாபமில்லை. இருந்தாலும் ஒப்பந்த விவரங்கள் என்னதான் என்பதைக் காத்திருந்து பார்ப்போம்.

ருஷ்ய யுத்தம்

தெற்கே கீவ் நகரம் விழுந்து விட்டது. ஒடெஸாத் துறைமுகம் அபாய நிலையிலிருக்கிறது. லெனின் கிராட் நகரும் ஆபத்தான நிலையிலிருக்கிறது. ஆகையால், ருஷிய யுத்தம் சற்று நெருக்கடியான கட்டத்தை அடைந்திருப்பது உண்மைதான். ஆயினும், இது வரையில் மிக வீரமாய்ப் போராடி வந்த ருஷிய மக்கள், சுலபத்தில் வீழ்ந்துவிட மாட்டார்கள். மேலும், பிரிட்டனின் போர் இன்று ருஷியாவில்தான் நடக்கிறதென்று சொல்ல வேண்டும். ஆதலால், ருஷியாவுக்கு டாங்கி முதலிய ஆயுதங்களையும் பிற சாதனங்களையும் அதிக மதிகமாய் பிரிட்டன் உதவ முன் வந்துள்ளது. பிரிட்டிஷ், அமெரிக்க உதவிகளை இந்தச் சரியான தருணத்தில் ருஷியா பூர்ணமாய்ப் பெற்று, இறுதியிலே வெற்றியடையுமென்றே நம்புகிறோம்.

உல்லாசப் பேச்சு — 'ரதி'

பாலைவன அற்புதம்

மேற்குப் பாலைவனப் பிரதேசத்திலே பெரும் பெரும் அற்புதங்கள் நிகழப் போகின்றனவாம். "இந்த அதிசயங்களைக் கண்கொட்டாமல் கவனித்துக் கொண்டிருங்கள்" என்று பாலைவனப் பக்கங்களிலிருந்து நிருபர்கள் தந்திமேல் தந்தி கொடுக்கிறார்கள்.

மணலைக் கயிறாகத் திரிக்கிறவர்களெல்லாம் ஒருவேளை அங்கே போகிறார்களோ என்னவோ?

* * *

ராஜனும் சமையலும்

டாக்டர் ராஜன் சென்ற வாரம் விடுதலையானார். இவருக்குச் சமையலுக்காகப் பதினைந்து நாட்கள் அதிகாரிகளால் தண்டனை 'வஜா' செய்யப்பட்டதாம்.

டாக்டருக்குச் சமையல் விஷயத்தில் எப்போதுமே அக்கரை உண்டு. லண்டனில், காந்திஜீ வந்ததையும் கவனியாமல் உக்ராண அறையிலேயே காரியத்தைக் கவனித்துக் கொண்டிருந்தவரல்லவா? அப்படிப்பட்டவருக்கு இன்னும் பதினைந்து நாள் அதிகமாகக்கூட 'வஜா' செய்திருக்கலாம்.

* * *

ஜின்னா மறந்தாரா?

ஜின்னா சாஹேபுக்கு, போன இடத்திலெல்லாம் இப்போது கறுப்புக்கொடி மரியாதை நடக்கிறதாம்.

ஜின்னா ஒரு சமயம் மற்றொருவரைப்பற்றி, "கறுப்புக்கொடி காட்டப்படுவதால், பிரஸ்தாப கனவானுக்கு எவ்வளவு மரியாதை கிடைக்கிறதென்பது தெரிகிறதல்லவா? இது தெரிந்தும் ஊருக்குள் பிரவேசிக்கலாமா?" என்று கூறியிருக்கிறார். இப்போது தம் உபதேசப்படியே ஜின்னா நடக்கலாமே!

* * *

ஏன் நிறுத்தினார் ஹிட்லர்?

குளிர்காலக் கஷ்ட நிவாரணத்துக்காக ஹிட்லர் ஒரு பிரசங்கம் செய்யப் போவதாகச் செய்தி வந்தது. ஆனால், ஹிட்லர் பேச்சை ஒத்திப் போட்டுவிட்டார்.

சுடச்சுடப் பேசுவதால், குளிர் எல்லாம் மறைந்துவிடும் என்று எண்ணியிருந்தாரோ, என்னவோ. அந்த எண்ணம் இப்போது மாறிவிட்டதாக்கும்!

* * *

செயற்கை நெய்

செயற்கை நெய் அதிகமாகப் பரவுவதைத் தடுக்க வேண்டுமென்று, ஐக்கிய மாகாணத்தில் குர்ஜா என்னுமிடத்தில் சில நிபுணர்கள் கூடி, வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள்.

இதை ஹோட்டல்காரர்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்கிறதாகக் கேள்வி. "என்னத்தையோ நெய்யின்னு போட்டுட்டு என் பிராணனை வாங்கறான். நான் என்ன ஸார் செய்யறது?" என்று என் ஹோட்டல்காரரும் தயங்காது சொல்கிறார்!

* * *

சிறையிலே நாடகாசிரியர்

பிரபல காங்கிரஸ்காரர் ஒருவர், சிறைச்சாலையில் நாடகம் எழுதிக் கொண்டிருந்தாராம். கலைச் சுவை நிரம்பிய நாடகந்தான். ஆனால் பக்கத்து அறையில் இரண்டு அதிகாரிகள், "பாருங்கள், இவர்கள் நாடகம் நடத்துவதை" என்று பேசிக் கொண்டார்களாம்.

"என் காதில் விழுந்தது நிஜம் தானா? அல்லது அதுவும் நாடகந் தானா?" என்று இந்த நாடகாசிரியர் தம்மையே கேட்டுக்கொண்டிருக்கலாம்.

* * *

தொப்பியிலே ரகஸ்யம்!

சத்தாரி நவாப் உஸ்மானியா சர்வ கலாசாலையில் பிரசங்கம் செய்யும் போது, "இந்துக் கலையும் இஸ்லாமியக் கலையும் இங்கே ஒன்றுபட்டிருக்கிறதைக் காண்கிறேன்" என்று கூறினார். ஆனால் "அது என்றைக்கும் ஒன்றுபட முடியாது. ஒன்றுபடப் போவதில்லை" என்று ஜின்னா சொல்லிக் கொண்டிருக்கிறார்.

காரணம் ஜனப் ஜின்னாவின் வெள்ளைக்காரத் தொப்பியிலே இருக்குமோ?

* * *

சவர்க்காருக்குத் திருப்தியா?

சவர்க்காரைப்பற்றி யார் என்ன சொன்னாலும் அவர் 'புத்திசாலி' என்பதை மட்டும் எல்லோரும் ஒப்புக் கொண்டு தான் தீருவார்கள். தமக்கு ரூஸ்வெல்ட் நேராகப் பதிலளிக்கா விட்டாலும், தம்முடைய கடிதத்தைக் கண்டு தான் உலகத்துக்குச் சர்ச்சில் ஒரு பிரசங்கம் செய்தார் என்று, சவர்க்கார் தயங்காது சொல்கிறார்.

சர்ச்சில் என்ன பிரசங்கம் செய்தார் என்றால், "இந்தியாவுக்கு நாமம்" என்று தான். எப்படியானாலென்ன, சவர்க்கார் கேள்விக்குப் பதில் கிடைத்து விட்டதல்லவா? அதை விட என்ன வேண்டும் அவருக்கு?

கதாநாயகன் ஆகிறீரா?

சீமையிலே ஒரு புதிய தொழில் ஆரம்பமாகியிருக்கிறது. அதாவது யாரை வேண்டுமானாலும் ஒரு கதாநாயகன் ஆக்கி விடுவதற்காக ஒரு கம்பெனி தொடங்கப்பட்டிருக்கிறது!

அந்தக் கம்பெனியின் விளம்பரம் இதுதான்: "நீங்கள் ஒரு கதா பாத்திரம் ஆக விருப்பமா?—அப்படியானால், உடனே உங்கள் போட்டோப் படம் ஒன்றை அனுப்புங்கள்; அல்லது, உங்களுடைய அங்க அடையாள லட்சணங்களை விவரமாய் எழுதியனுப்புங்கள். உங்களுக்குப் பிடித்தமான விளையாட்டு என்ன, நீங்கள் செய்யும் தொழில் யாது என்ற விவரமும் தெரிவியுங்கள். கூடவே ஒரு பவுன் பணம் அனுப்ப மறக்க வேண்டாம். உங்களை ஒரு கதாநாயகன் அல்லது நாயகி ஆக்கிய அசல் சிறு கதையொன்றை முதல்தரக் கதாசிரியர் ஒருவரைக் கொண்டு எழுதச் செய்து, வெகு சீக்கிரம் தபால் மூலம் அனுப்புகிறோம்."

சிறு கதை :

மீனோட்டம்

[லா. ச. ராமாமிருதம்]

பல வருஷங் கழித்து, அதே ஆற்றங்கரை, அதே மீன்கள், அதே பெண்—ஆனல், என்ன உள்ள மாறுதல்!....

“ஏய், நீ என்ன பார்ப்பாரப் பெண்ணுயிருக்கையா, நீ!—அதுவும் கோவில் பூஜை செய்யற குடும்பமாவா இருக்கே? மீன் பிடிக்கிறையே, மீன்!!—”

“போடா, கையாலாகாட்டா, வாயை மூடிக்கோயேன்—நீ மாத்திரம் பார்ப்பானில்லேயோ! பிடிக்க வகையில்லேயாம், அஹங்காரத்தைப் பாரு—”

எனக்கு ஆத்திரம் பொங்கிற்று.

“நிறுத்துடி—வாயை மூடு—ரொம்ப ரொம்ப நீட்டி நீட்டிப் பேசறையே—மணியாட்றவன் பெண்ணே—”

“சரிதானப்பா, ரொம்ப ரொம்ப அலண்டு போயிடாதே—உங்கப்பா உத்யோகம் பண்ணினல்—உங்காத்து மட்டோடே—”

எனக்கு வெறி உச்சந்தலைக்கேறிவிட்டது.

“என்னடி ஒங்கப்பன், எங்கப்பன் இன்னு பேசறே? பல்லை ஒடைச்சுப் புடுவேன்—” என்று சொல்லிக்கொண்டே, முதுகில் ஒன்று வைத்துவிட்டேன். அவ்வளவுதான். ஆற்றங்கரையில் ஓங்கி நிற்கும் மணற்குன்றுகளிடையில் அவள் அழுகை நல்ல சப்தசுத்தத்துடன் ஒலிக்க ஆரம்பித்துவிட்டது.

அவளை அடித்ததுதான் தாமதம். என்னை வாதித்த வெறியும் தணிந்துவிட்டது. அசடுவழிந்த முகத்துடன், வெயிலில் மின் துண்டுகள் போல் வயிற்றைப் புரட்டிப் புரட்டித் துள்ளும் அந்தச் சிறு மீன்களைப் பார்த்துக்கொண்டு நின்றேன். என் மனதில் எண்ணுத எண்ணங்களெல்லாம் ஓடத் தலைப்பட்டு விட்டன.

“சீ, என்ன காரியம் செய்தோம்! கேவலம், இந்த மீனை அவளைப்போல் பிடிக்க நமக்குத் தெரியவில்லை என்கிற ஆங்காரத்தில், அவளைத் தொட்டு அடித்தோமே!—இந்த மீனை நாம் என்ன சாப்பிடப் போருேமா, வீட்டுக்குக் கொண்டு போய்—இதைப் பிடிச்சால் என்ன, பிடிக்காவிட்டால் என்ன? விளையாட்டாய் வந்து விளையா முடிஞ்சுதே!—அதுவும் நாளைக்கு ஊருக்குப் போகப் போகிறேம், போகிற போக்கில் கங்காவோடு சண்டை போட்டுண்டா போகணும்! அப்போ, நான் ஊரிலே இருந்தா, இந்தச் சண்டை நினைப்பு வந்தால், எவ்வளவு சங்கடமாயிருக்கும்! இப்படிப் பிழியப் பிழிய அழுருளே, இந்தக் குரல் தானே, ராத்ரி நான் தூங்கறப்போ, என் கனவிலே கேட்கும்! அப்போ, ரொம்பக் கஷ்டமாயிருக்குமே, நான் என்ன செய்வேன்!!”

துக்ககரமான யோசனையின் பரவசானந்தம் எனக்கு அப்பொழுது புதிது. அந்த சுகத்தில், நான் என்னை மறந்தேன். கங்காவை மறந்தேன். எல்லாம் மறந்து, என்னில் லயித்துவிட்டேன். அதனல், கங்கா என்னைத் திடீரென்று கட்டியணைத்ததும், எனக்குத் ‘திக்’கென்றது.

“ஏன் என்னிடம் வராய், மறுபடியும்?” என்றேன்.

“பின்னே நீ—இ—இ—யும் அழறையே—எ—எ—நான்தான் அழுதா—அ—அ—ல்—” என்று விக்கினள், துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டு.

அப்பொழுதுதான் எனக்கே தெரிந்தது என் கன்னம் நனைந்திருப்பது—எனக்கு வெட்கமாய்ப் போய்விட்டது.

“சரி வா, ஆத்துக்குப் போகலாம்—” என்றேன், பேச்சை மாற்ற.

“அதெல்லாம் முடியாது—உனக்கு மீன் பிடிக்கக் கற்றுக் கொடுத்துட்டுத்தான்—பார், உன் கை என் கையைவிட நன்னுயிருக்கு—நீ என்னைவிட நன்னுப் பிடிப்பாய்—”

“சரிதான் வாயேன்—”

“ஊ-ஹூம்—இடுப்பு வேஷ்டியை அவிழ்த்துப் போடு தண்ணு மேலே—பார், துணிமேலே எவ்வளவுமீன் குஞ்சு வரது—நாலுமுனையும் ஒண்ணுச்சேர்—அப்படித்தான்—அகப்பட்டுண்டதையா நாலு—தொட்டுப்பார்—இந்தத் துணிக்குள்ளே இருக்கறதை விட்டுப் பிடி—அது பழகினதும்—ஓடற தண்ணுலேயே பிடிக்கலாம்—இது மாதிரி—”

தண்ணீரில் வாய்போல் விரிந்து வேகமாய்ச் சென்ற அவள் விரல்கள் ‘சடக்’கென மூடின. கட்டை விரலுக்கும் சுட்டு விரலுக்குமிடையில், தண்ணீரில் ஒரு சிறு கலவரம் உண்டாயிற்று.

“டேய்—டேய்—தொட்டுப் பாரேன்—என்று கங்கா கத்தினள் சிரித்துக்கொண்டே. மீன் செதில் குறு குறு வென்றது. அடுத்தடுத்து வரும் எங்கள் சிரிப்பு மணற்குன்றுகள் வரை உயர்ந்து அவைகளில் ஒளிந்தன.

* * *

மறுபடியும் அவ்வூற்று நீர்க்கரையோரந்தான்; அதே மணற்குன்றுகள்தான். எத்தனையோ காலடிகள் அமிழ்ந்து கலைந்தும், சற்றும் மாருத அதே மணல்தான். அதோ தூரத்தில் காணும் ஊரைச் சுற்றிய தோப்பில், சில புது மரங்கள் வளர்ந்திருந்தன—பழைய மரங்கள் பட்டிருந்தன—அவ்வளவுதான்—வேறொரு வித்யாசமுமில்லை. கிராமாந்திரங்களில் கால வித்யாசம் அதிகம் தெரிவதில்லை. பட்டணத்தில், நேற்றுப் போய் இன்று வருவதற்குள், ஒரே புரட்டல்.

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஊருக்கு வருகிறேன். ஆனிமாதம். வெயில் பட்டை வாங்குகிறது. செருப்புப் போடவில்லை. உள்ள கால்களிரண்டும் கீழே பதியாமல் தவிக்க ஆரம்பித்து விட்டன. காலை அலம்பிக் கொள்ளலாம் என்று கால்வாயில் இறங்கினேன்.

எதிர்க்கரையில் ஒரு சிறு கூட்டம். கலியாணக் கோலம். மஞ்

சள் தெறித்த துணிகள் வெயிலில் பளீர் பளீர் என்றன. பாலிகை கொட்ட வந்தவர்கள்போலும்.

"டேய், டேய்—உன்னைத் தானே, உன் பேர்—சுருக்க வாயில் வரல்லையே!—"

கங்காவின் தகப்பனார்தான், சந்தேகமில்லை. உடம்பு முன்னைவிடச் சற்று ஒடுக்கம். ஆனால் அவர் தான்.

அப்படியே கடந்து அக்கரையடைந்தேன். எல்லோரும் அன்புடன் வரவேற்றார்கள்.

"ஏண்டா, இன்னம் இரண்டு நாள் முன்னமே வரப்படாதோ!"

"பத்திரிகைகூட அனுப்பிச்சோமே, தவறாமல்—தவிர, தபால் கூடத் தனியா எழுதினோமே—!"

"இல்லை மாமா, எனக்கு வந்து சேர்ந்திருக்காது—அந்த விலாசத்தில் நான் இல்லை—அந்த ஊரிலேயே இல்லை இப்போது—இது யார், கங்காவா? ஏது அடையாளமே தெரியவில்லையே!—"

ஏன் தெரியும்—இன்னும் நாலு வருஷம் பொறுத்து வா!—"

கங்கா, கால்கட்டை விரலால், மணலைக் கிளறிக்கொண்டே, கீழ் நோக்கிய பார்வையுடனே 'சுறுக்'கென ஒரு கண்கணை தொடுத்து வெற்றிப் புன்னகை புரிந்தாள். என் மனத்தில் ஏன் முள் தைக்கிறது? ஏன் அவளைக் காணக்காண, மனதில் ஒரு வேகமும் ஆங்காரமும் உண்டாகின்றன? அவளைக் காணச் சகியாமல், கலியாணப் பிள்ளையின் பக்கம் திரும்பினேன்.

ஆனாலும், இந்தக் கரிக்கட்டையைக் கட்டிக்கொண்டதற்கு இவருக்கு இவ்வளவு ஆணவம் வேண்டியதில்லை. வாய்க் காவியைப் பார்த்தால், சக்கையாய்ப் புகையிலை தீட்டுவான் போலிருக்கிறது.

"என் மருமான்"—கடலூரிலே தனியாக் கோவிலில் பூஜை பண்ணிக் கொண்டிருந்தான்—பெண்ணைக் கொடுத்து வீட்டோடே வெச்சுக்கலாம்னு தீர்மானிச்சுப்பிட்டேன். அவனுக்கும் பெற்றவாளில்லை—நமக்கும் புத்திர பாக்கியமில்லை என்னு பகவான் வெச்சுப்பிட்டான்—எனக்கும் வயசாயிடுத்து. இங்கே கோவில் பூஜைக்கும் எனக்குக் கொள்ளி போடறத்துக்கும் ஒருத்தன் வேணுமில்லையா?—" என்றார் கங்காவின் தகப்பனார்.

"என்ன மாமா, கலியாண சமயத்திலே இப்படியெல்லாம் பேசலாமா?—"

"அதுவும் ஒரு கலியாணந்தாண்டா—சரி, வாங்கோ போகலாம்—"

மத்தியானமெல்லாம் நான் ஜோலியாய்ப் பக்கத்தூருக்குப் போயிருந்தேன். சாயந்திரம்தான் திரும்பிவந்தேன். கலியாணப் பெண்ணே காப்பி கொண்டு வந்து விசிபலகையில் வைத்தாள்.

"கொஞ்சம் ஒழிந்திருக்கிறாப் போலிருக்கிறது!—" என்றேன்.

வெற்றிப் புன்னகையுடன் பின்னிடைந்தாள். இத்தனை தடபுடலுக்கும் காரணியாயிருப்பதன் இறுமாப்பு!—

"ரொம்ப அவசரமோ! எல்லாம் பழைய கங்காதானே! வெட்கமோ?"

சிரித்தாள், பின்னலில் கட்டியிருக்கும் தாழம்பூவை முகர்ந்து கொண்டே.

"இதோ பார், உனக்குக் கலியாணப் பரிசு வாங்கி வந்திருக்கிறேன்—" என்று கையிலிருந்த பொட்டணத்தைப் பிரித்து, சாமானைப் பலகையின் மேல் வைத்தேன்.

வெள்ளியில் வெற்றிலைப் பெட்டி; மீன் உருவத்தில் நிருமாணம். இரு கண்களையும் உள்குடைந்து, ஒரு குழியில் பாக்கு, மற்றொன்றில் சுண்ணாம்பு. குழிகளின் மூடிகளின்பேரில் நீலக்கற்கள் புதைத்திருந்தன. அவைதான் மீனின் கண்கள். முதுகைத் திறந்தால் வெற்றிலை வைத்துக்கொள்ள இடம். மீன் வெகு களையாய்ப் பாய்ச்சலில் நின்றது.

அவள் கண்கள் மலர்ந்தன. சிரித்துக்கொண்டே அதைத் தடவ ஆரம்பித்தாள். அவளுடைய உதடுகள் செக்கச் செவேலெனப் பளபளத்தன.

திடீரென்று என்னை அவள் ஒரு கேள்வி கேட்டாள்.

"மீன் பிடிக்கக் கத்துண்டாச்சா?" என்றாள். அவள் கண்களில் குறும்பு கூத்தாடியது.

என் இதய நோவு விண்விண் எனத் தெறித்தது. சமாளித்துக் கொண்டு—"ஊ—ஹூம்—என்ன இருந்தாலும் உன் சாமர்த்தியம் வருமா?—தவிர, பட்டணத்தில் எங்கே மீன் பிடிக்கிறது? எங்கேயும் குழாய்தான். சமுத்திரம் இருக்கிறது. ஆனால் அங்கே உன் மாதிரி கையால் பிடிக்கமுடியாது—வலையோ தூண்டிலோதான் போடவேணும்—வேணுமானால் நண்டு பிடிக்கலாம், கூவம்-நதியும் பக்கிங்ஹாம் கால்வாயுமிருக்கிறது—நிறையச் சேறு எடுக்கலாம்—"

"ஏன், பார்த்தசாரதி கோயில் குளம் இருக்காமே! அதிலே—"

"பாசிதான் மிதக்கும்—இடையிடையில் பிரேதமும் மிதக்கும்—"

அவள் முகம் 'சடக்'கென மாறியது. என் வார்த்தையில் ஏன் இவ்வளவு வெடிப்பு? எனக்குப் புரியவில்லை. சமயமில்லா சமயத்தில், என் வாயில் ஏன் இந்தச் சம்பந்தமில்லாத அசம்பாவித வார்த்தை? எனக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று. என் மார்நோவு பொறுக்க முடியவில்லை. பந்துபோல், சுருட்டிச் சுருட்டி யடைத்தது... பொறுக்க முடியவில்லை......

* *

மீண்டும் அதே பொரியும் மணல்தான். ஜீவனற்று, பிரேதம் போல் நீலம் பூரித்த ஆகாயம். தூரத்தில் கானலில் ஊர்த்தோப்பு நடுங்கியது. காலைவேளையிலேயே, கடுமையான வெயிலில் என் கண்கள் இருண்டன. தவிர, பசி காதை யடைத்தது. வெறும் வயிற்றுடன் காலையில் பன்னிரண்டு மைல் நடந்து வந்திருக்கிறேன். காலணா இட்டிலி வாங்குவதற்குக் கூடக் கையில் வழியில்லை. க்ஷவரம் செய்து இரண்டு மாதங்கள் ஆகியிருக்கும்.

எல்லாம் அதொரு காலம்—இதொரு காலம்......

அக்ரஹாரத்துக்குப் போனால், பழைய சினேகித்தை வைத்துக் கொண்டு ஒரு வாரம் தள்ளலாம். என் பிழைப்பு அப்படியாகிவிட்டது.

எல்லாம் அதொரு காலம்.

இதொரு காலம்......

ஒரு கை தண்ணீர் குடித்து விட்டுப் போகலாம் என்று கால்வாயில் இறங்கினேன்.

நான் இறங்கிய கரைப் பக்கத்தில் நெருப்பைக் குளிப்பாட்டிய நிறத்தில் ஒருவர் குளித்துக்கொண்டிருந்தார். தோய்க்கிற கல்லின் மேல் துணியைக் கும்மி வைத்திருந்தார். கரையில் ஒரு பொடி மட்டை, விபூதி சம்புடம், பட்டைப் புகையிலை, காய்ந்துபோன வெற்றிலை நாலைந்து, இரண்டு கொட்டைப் பாக்குகள்—எல்லாம் அவர் சொத்து.

எதிர்க்கரையில் ஒரு ஸ்திரீ ஸ்நானம் செய்துகொண்டிருந்தாள். அவள் முகம் பழகிய முகமாயிருந்தது.

என் கையிலெடுத்த தண்ணீர், என்னை யறியாமல் விரல்களின் வழியே வழிந்தது. ஆம், அவளேதான். ஆனால், அவளா இவள்?

பச்சையிலேயே பட்டுப்போனாற் போன்று வற்றி இளைத்த உடல். தோற்றத்திலேயே ஒரு தனி அசதி. சோகம் தேங்கிய முகம். இவ்விடத்து நினைவு அற்று இருந்தன அவள் கண்கள். அந்தப் பழைய துறுதுறுப்பு எங்கே ஓடியது? இவளுக்கு இத்தனை கிழத்தனம் எங்கிருந்து வந்தது?

திகைப்புடன் அவளையே நோக்கி நின்றேன், என்னை மறந்து. அவள் இன்னும் என்னைப் பார்க்கவில்லை. அவள் புடவை முன்றானை, தண்ணீரில் விழுந்து காற்று உள் புகுந்து படர்ந்து பொங்கியது. அதைக் கண்டதும் சடக்கென்று அவளது முகத்தில் ஒரு புன்னகை பாய்ந்தோடியது. அவள் முகத்தில் பழைய இளமையின் கனவைக் கண்டேன். வாய்போல் அவள் விரல்கள் விரிந்து, தண்ணீரைக் கிழித்து நீந்தின.

'ஏ, பிணமே, நீ என்ன பார்ப்பாரப் பெண்ணா யிருக்கையா நீ—! அதுவும் கோவில்பூஜை செய்யற குடும்பமாவா இருக்கை? மீன் பிடிக்கிறையே, மீன்?—'

கர்ண கடூரமான அந்தத் தொனி, என் பக்கலிலிருந்து திடீரென்று கிளம்பியதும், எனக்கே தூக்கி வாரிப் போட்டது. அந்தக் கறுப்புப் பிராம்மணன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. பற்களை நற நறவெனக் கடித்து, இன்னும் என்னென்னவோ உளறினன். ஆனால், அவளைத் தான் பார்க்கச் சஹிக்கவில்லை. அவள் உடல், கைகள் எல்லாம் வெலவெலத்து விட்டன. ஏதோ பழகிய சப்தத்தைக் கேட்டுவிட்டு அதைத் தேடுவதுபோல் சுற்று முற்றும் அவள் கண்கள், பதறித் தேடின. ஆனால் ஒருவருமில்லை. எதிரில் அவள் புருஷனும், ஒரு நாடோடிப் பயலும்தான். இதற்குள் அவள் முகம் வெளுத்து நீலம் பூரித்துவிட்டது. அவசரம் அவசரமாய் எதையோ கண்டு தப்பி ஓடுவதுபோல், புடவையைச் சுற்றிக்கொண்டு, சொட்டச் சொட்டக் கரையேறி, மணல் மேட்டின் பின்புறம் மறைந்தாள்....

இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம், அவள் கணவன், அவளைத் திட்டிக்கொண்டே அவ்விடம் விட்டு அகன்றான்.

நான் திக்பிரமை பிடித்து அங்கேயே சற்று நேரம் உட்கார்ந்திருந்தேன், வேகும் வெயிலில் கால்வாய்த் தண்ணீரை விறைத்துப் பார்த்துக்கொண்டு. அந்த மீன்கள்—மனித வர்க்கம் வாழ்ந்தால் என்ன, வீழ்ந்தால் என்ன அவைகளுக்குக் கவலை? இரக்கமற்ற ஆனந்தத்துடன் மின் துண்டுகள் போல, வெள்ளி வயிற்றைப் புரட்டிப் புரட்டித் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன.

நான் அக்ரஹாரத்துள் புகவில்லை. வயிற்றில் ஈரத்துணியைப் போட்டுக்கொண்டு, ரயிலடிக்கு விரைந்தோடினேன்; ஏதோ ஒரு குற்றவாளியைப்போல, அவசர அவசரமாய் ஓடினேன். காரணம் எனக்கே தெரியவில்லை.

எல்லாம் சுயநலமே!

பிரசித்திபெற்ற அமெரிக்கக் குடியரசுத் தலைவரான ஆபிரகாம் லிங்கன், சாதாரண வக்கீல் தொழில் புரிந்துகொண்டிருந்த காலம். அவரும் அவருடைய தொழில் கூட்டாளியான ஹெண்டனும் சகதி ரஸ்தாவிலே, கொட்டும் மழையிலே, வேதாந்த விஷயமான ஒரு தர்க்கம் செய்துகொண்டு, ஒரு வண்டியில் சென்றார்கள்.

சுயநலமில்லாமல் மனிதன் எந்தக் காரியத்தையாவது செய்வதுண்டா? இது ஒரு கேள்வி. "உண்டு" என்றார் ஹெண்டன். "இல்லவே யில்லை" என்றார் லிங்கன்.

இந்தச் சமயத்தில், ரயில்வே வேலியில் மாட்டிக்கொண்ட ஒரு பன்றி, உயிருக்கு மன்றாடிக் கூச்சல் போட்டுக்கொண்டிருந்தது.

லிங்கன் 'சட்'டென்று குதித்தார். ஓடிப்போய்ப் பன்றியை விடுவித்தார். சொட்டச் சொட்ட மழையிலே நனைந்தவராய்த் திரும்பி வந்து வண்டியிலே ஏறிக்கொண்டார்.

"இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்? உங்கள் வாதமெல்லாம் பொய்யாகி விட்டது. உங்கள் செயல் என் கட்சியை நிரூபித்து விட்டது. நீங்கள் செய்தது சுயநலமற்ற காரிய மல்லவா?" என்று கேட்டார் ஹெண்டன்.

"இல்லை. நான் செய்தது முற்றிலும் சுயநலமான காரியமே. இந்தப் பன்றியை இப்போது விடுவித்திராவிட்டால், இன்று ராத்திரி எனக்குத் துளிக்கூடத் தூக்கம் வராது; இதன் ஓலம் என் கனவிலே எதிரொலி செய்யும். நான் விடுவிக்காவிட்டாலும், அது தப்பித்துச் சென்றிருக்கலாம்; என்றாலும், அது எனக்குத் தெரியாதாகையால், என் அவஸ்தைமட்டிலும் தீராது. ஆகையால், என் கட்சிதான் ஜயித்தது" என்று பதிலளித்தார் லிங்கன்!

* * *

தேனீயானது, புஷ்பத்தின் உள்ளே இருக்கும் தேனை அடையாமல் இதழ்களுக்கு வெளியே இருக்கும் வரையில், ரீங்காரம் பண்ணிக்கொண்டு பூவைச் சுற்றிச் சுற்றி வரும்; ஆனால் பூவுக்குள் நுழைந்து விட்டால், அமிருதத்தைச் சப்தம் செய்யாமல் குடிக்கிறது. கொள்கைகளையும் சித்தாந்தங்களையும்பற்றி ஒருவன் சண்டையிடும் வரையில் அவன் உண்மைப் பக்தியாகிய அமிருதத்தைச் சுவை பார்க்கமாட்டான். ஆனால் அவன் அதை வாஸ்தவத்தில் ருசிபார்ப்பானானல், வெகு சாந்தனாய் மனச்சமாதான முடையவனாவான்.

—ஸ்ரீ பரமஹம்ஸர்.

பறித்த பூக்கள்

மகாமகக் குள விற்பனை : இந்த ரஸமான கதையை 'ராஷ்டிர வாணி'யில் 'காற்றாடி' எழுதியிருக்கிறார் :

கோபாலையர் என்ற ஒருவர் சுப்பையர் என்ற தம் நண்பருக்கு மகாமகக் குளத்தை இனம் சாஸனம் செய்து கொடுத்தாரென்று கும்பகோணத்தில் ஒரு கதை சொல்லுவார்கள். இது நிஜமான சம்பவமா அல்லது கற்பனையா என்று எனக்குத் தெரியாது. அந்தக் கோபாலையர் மிகவும் விஷமக்காரப் பேர்வழி. யாரையாவது வம்புக் கிழுப்பதும் கோர்ட்டுக்குப் போவதும் அவருடைய தினசரி மாமூல் வேலைகளில் ஒன்று.

ஒரு சமயம் மகாமகக் குளத்தை சுப்பையருக்கு இனம் சாஸனம் செய்யும் தஸ்தாவேஜு ஒன்றை, அந்தக் கோபாலையர் கும்பகோணம் சப்ரிஜிஸ்டிராரிடம் கொண்டு போய்க் கொடுத்தாராம். ரிஜிஸ்டிரார் திடுக்கிட்டுப் போய்விட்டார்: "மகாமகக் குளத்தை நீர் சாஸனம் செய்யவாவதுங் காணும்! உமக்கு எது உரிமை?" என்று கோபாலையரை, அவர் கேட்டார்.

"ஸ்வாமி, நீர் பண்ணும் உத்யோகம் என்னவென்பது ஞாபகமிருக்கட்டும். நீர் 'ஈயடிச்சான் காப்பி' வேலை செய்யும் ஸப்-ரிஜிஸ்டிராரே யொழிய, ஸிவில் ஜட்ஜி அல்ல. உரிமைகளைப் பற்றிப் பேச வேண்டியது ஸிவில் கோர்ட்டில் தான். ஸ்டாம்பு சரியா யிருக்கிறதா வென்று பார்த்து ரிஜிஸ்டர் செய்யும்" என்று அவரைக் கோபாலையர் மிரட்டினாராம்!

* *

பெட்ரோல் பாட்டு: யுத்தத்தால் பல தமாஷ்கள் முளைத்திருக்கின்றன. அதன் எதிரொலியாய், இங்கே கிளம்பியிருக்கும் இந்த விகடம் 'ஈழகேசரி'யில் 'பாட்டைசாரி'யின் எழுத்தாகும் :

'பெட்ரோல்' கட்டுப்பாடு கிராமங்களிலுள்ள வண்டிக்காரர்களிடையே பெரிய குதூகலத்தை உண்டாக்கிவிட்டது. சென்ற வாரம் வண்டிக்கார வயிரமுத்து என்பவர் 'கிடுகு' ஏற்றிக்கொண்டு போவதைக் கண்டேன். வாலை முறுக்கி வண்டியை ஓட்டிச் சென்றவர், சட்டென்று மீசையை ஒரு புறம் ஒதுக்கிவிட்டுக் கொண்டு பாடத் தொடங்கினார். அசலான பாட்டு :

பெட்ரோல் கட்டுப் பாடாமடி
தங்கமே தங்கம்—நம்ம
கட்டை வண்டி உருளுதடி
தங்கமே தங்கம்!

* *

'ரவை' என்றால்........: சங்கீத வித்வான் ஸ்ரீ தண்டபாணி தேசிகர் தமது சிறு வயதில், பிடில் வித்வான் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளையிடம் சிட்சை சொல்லிக்கொண்டு வந்தாராம். அப்போது நடந்த ஒரு தமாஷை, ஸ்ரீ தேசிகர், **'ஹநுமா'**னில் எழுதியுள்ளார் :

ஒரு நாள் ஸ்ரீ பிள்ளையவர்கள் என்னிடம் எட்டணாவைக் கொடுத்து, "ரவை வாங்கிக் கொண்டு வா, தம்பி" என்று கூறினார். அவர் வாங்கிவரச் சொன்னது கோதுமை ரவை. ஆனால், எங்கள் ஊர் (திருச்செங்காட்டங்குடி)ப் பக்கத்தில் கோதுமை ரவையை 'ரவா' என்றும், கோலிக் குண்டுகளை 'ரவை' என்றும் சொல்லுவது வழக்கம். ஆதலால், ஸ்ரீ பிள்ளையவர்கள் 'ரவை' என்று சொன்னதால், "எதற்காக எட்டணவுக்குக் கோலிக் குண்டுகள் வாங்கிவரச் சொல்கிறார்" என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டே, கடைவீதியினின்று ஒரு பொட்டணம் நிறையக் கோலிக்குண்டுகளை வாங்கிக் கொண்டுவந்து கொடுத்தேன்! ஸ்ரீ பிள்ளையவர்கள் வெகு நாள் வரையில் இந்தச் சம்பவத்தைச் சொல்லிச் சொல்லிச் சிரிப்பதுண்டு.

ஓடுஹவுஸ் தப்பினார்: இந்த ருசிகரமான தகவல் 'ஹிந்துஸ்தா'னில் காணப்படுகிறது :

யாழ்ப்பாணம் செயின்ட் பாட்ரிக்ஸ் கல்லூரிப் புத்தகாலயத்தில், ஓடுஹவுஸ் என்ற பிரபல பிரிட்டிஷ் நாவலாசிரியரின் வர்ணப் படமொன்றிருக்கிறது. ஸ்ரீ ஓடுஹவுஸ் பெரிய ஹாஸ்ய எழுத்தாளர். பிரிட்டிஷ் இலக்கியத்துக்கு அழகு செய்பவர். சமீபத்தில் அவர் ஜெர்மானியரோடு சேர்ந்து பெர்லின் ரேடியோ மூலம் அமெரிக்காவுக்கு ஒலி பரப்பி வருவதாகச் செய்தி. இதனை முன்னிட்டு அவரது படத்தை ஏன் எடுத்துவிடக் கூடாது என்பது பற்றி, மேற்படி கல்லூரியில் ஒரு வாதம் நடைபெற்றது. கல்லூரித் தலைவர் தலைமை தாங்க, எழு ஆசிரியர்கள் வாதத்தில் கலந்துகொண்டார்கள். பலர் படத்தை அகற்றிவிட வேண்டுமென்றார்கள். கடைசியில் பாஸ்தியாம் பிள்ளை, படத்தை எடுக்கக் கூடாது என்பதற்குக் காரணம் கூறினார்: "தற்போது ஒலிபரப்புபவர் ஓடுஹவுஸ் தான் என்று எப்படிச் சொல்ல முடியும்? அவர் பெயரால் வேறொருவர் பேசக் கூடாதா? நாஜியர் என்ன சூழ்ச்சிதான் செய்யமாட்டார்கள்? ஒருகால் ஓடுஹவுஸே பேசினாரென்றாலும், நாஜியர் வற்புறுத்தலினால் தானே பேசுகிறார்? ஆகவே அவரை எப்படிக் குறை சொல்வது? என்ன மனப்பான்மையோடு அவர் பேசுகிறாரோ?" என்று வினவினார். கடைசியில் மெஜாரிட்டியார் ஆதரிக்க, பாஸ்தியாம் பிள்ளையின் கட்சி வென்றது. படம் அகற்றப்படவில்லை. தப்பினார் ஓடுஹவுஸ்!

* *

நவராத்திரி: 'ராஜம்' இவ்விவரத்தை 'ஆனந்தவிகட'னில் எழுதியுள்ளார் :

நவராத்திரியை வடக்கே எல்லாம் எப்படி எப்படியோ கொண்டாடுகிறார்கள்.

காசிப் பக்கத்தில் ராம் லீலா உத்ஸவம் கொண்டாடுகிறார்கள். ராம நாடகம் போடுகிறார்கள்; ராவணன் மாதிரி பெரிதாகச் சொக்கப்பானை கட்டி அதைக் கொளுத்துகிறார்கள்.

மஹாராஷ்டிர தேசத்தில் சக்தி பூஜை பலமாகச் செய்கிறார்கள். தீபாவளிக்கு நாம் 'கங்கா ஸ்நானம் ஆச்சா?' என்று பந்துக்களையும் நண்பர்களையும் விசாரிக்கிறோமல்லவா? அது மாதிரி விஜயதசமியன்று அங்கே ஒருத்தரையொருத்தர் போய்ப் பார்த்து விசாரித்துவிட்டு வருவார்களாம்.

வங்காளத்தில் வேறு தினுசாகக் கொண்டாடுகிறார்கள். நாம் பிள்ளையார் சதுர்த்திக்கு மண் விக்கிரகம் செய்கிறோமே அதே மாதிரி துர்க்கா விக்ரகம் செய்து பூஜை செய்வார்கள். கடைசியில் விஜயதசமி யன்று மேளதாளத்துடன் அதை எடுத்துக்கொண்டு போய் ஆற்றில் போடுவார்கள்.

இந்தத் தொந்தரவு எல்லாம் நமக்குக் கிடையாது. கொலு வைத்துவிட்டுத் தமாஷாக இருக்க வேண்டியதுதான்.

* *

கர்நாடக சங்கீதம் 'கல்கி'யில் 'கர்நாடகம்' கூறுகிறார்:

'கர்நாடக சங்கீதம்' என்பது எந்த நாட்டுக் குரியது? தமிழ் நாட்டுக்குத்தான் உரியது என்பதில் சந்தேகமே யில்லை. சிலப்பதிகார காலத்துக்கு முன்னிலிருந்து இரண்டாயிரம் வருஷமாகத் தமிழ் நாட்டில் தலைமுறை தலைமுறையாய் வளர்ந்த சங்கீதந்தான் கர்நாடக சங்கீதம். 'தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்' என்று தமிழையும் இசையையும் சேர்த்து வளர்த்த பெரியார்கள் இந் நாட்டில்தான் வாழ்ந்தனர்.

ஆந்திர நாட்டிலோ, கன்னட தேசத்திலோ இன்று இந்த சங்கீதம் மேன்மை யடைந்திருக்கவில்லை; தமிழ் நாட்டிலே தான் உன்னத மடைந் திருக்கிறது. கர்நாடக சங்கீதம் தமிழ் சங்கீதமே என்பதற்கு இதுவே அத்தாட்சி. பின் 'கர்நாடக சங்கீதம்' என்று ஏன் பெயர் வந்ததென்றால், பாரத நாட்டுக்கு 'இந்தியா' என்று பெயர் வந்ததுபோல் தான். கிரேக்கர்கள் பாரத தேசத்துக்குள் நுழைந்ததும் முதலில் ஸிந்து நதியைக் கண்டார்கள்; தேசத்துக்கே 'ஸிந்து' என்று பெயர் வைத்தார்கள். அது 'இந்தியா' என்று மருவி வழங்குகிறது. அதுபோலவே வட நாட்டார், தெற்கத்தி சங்கீதத்தைக் குறிப்பிடும்போது, தங்களுக்குச் சமீபத்திலுள்ள கர்நாடகதேசத்தின் பெயரால் குறிப்பிட்டார்கள். அதனால் தான் கர்நாடக சங்கீதம் என்று பெயர் வந்தது.

* *

சமையலறையே பாடசாலை: நமது குழந்தைகளின் முதல் பாடசாலை சமைய லறையே என்று 'பாரதமணி'யில் ஸ்ரீமதி 'குகப்ரியை' எழுதுகிறார். அதற்கு அவர் கூறும் ஓர் உதாரணம்:

நாவலாசிரியர் மாதவையாவைப் பற்றித் தமிழ்நாட்டில் எல்லோருக்குமே தெரிந் திருக்கும். அவருடைய பத்மாவதி சரித்திரம் என்னும் கற்பனை மிக அற்புதமானது. அதில் சாவித்திரி என்றொரு பெண். அவளுக்குப் படிக்கத் தெரியாது. தங்கமான குணம். பரம சாது. அதி அற்புதமாய்ப் பேசுவாள்.

ஒரு சமயம் அவள் தமையனுடன் பட்டணத்திலிருந்து ஒரு நண்பன் வந்திருந்தான். "சாவித்ரி எந்தப் பள்ளிக்கூடத்தில் படித்தாள்?" என்றான் அவன். தமையன் அவன் கைகளைப் பற்றித் தரதரவென்று இழுத்துக்கொண்டு சமைய லறைக்குள் நுழைந்தான். சமைய லறையின் ஒழுங்கைக் கண்டு திகைத்துப் போனான் பட்டணத்தான். "பார்த்தாயா? இதுதான் சாவித்ரியின் பள்ளிக்கூடம். இந்தக் கற் சட்டி பானைகள் தான் அவளுடைய பாட புத்தகம். நாம் காலையில் சாப்பிட்டோமே, அதுதான் அவள் தேர்ச்சி பெற்றுக் கற்பனை செய்த கவி" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் தமையன்.

இது வெறும் கற்பனையல்ல. உண்மையில் சமைய லறை ஒரு சிறந்த கலாசாலை.

* *

தொழில் அழிந்த காரணம்: டாக்டர் ஜே. ஸி. குமரப்பா ஒரு சமயம் திருவாங்கூர் சென் றிருந்தார். அங்கே கோரைப் பாய் முடைபவர்களைக் கண்டார். அப்போது நடந்த இந்த ருசிகரமான நிகழ்ச்சியை, 'கலைமக'ளில் ஸ்ரீ குமரப்பா எழுதியுள்ளார்:

அங்கிருக்கும் பாய் முடைபவர்களில் மிகப் பெரியவன் என்னையும் நண்பர் இருவரையும் அழைத்துச் சென்று பாய் முடையும் வகைகளைக் காண்பித்து, இத் தொழிலை எவ்விதம் மறுபடி முன்னுக்குக் கொண்டு வருவதென்று என்னைக் கேட்டான். அதற்கு விடை அச் சமயம் எனக்குத் தெரியவில்லை. பிறகு, நாங்கள் உட்காருவதற் கென்று தனது வீட்டுத் தாழ்வாரத்தில் அவன் ஆஸனங்களை விரித்தான். இரண்டு பக்கமும் விரித்திருக்கும் கோரைப் பாய்களில் என் நண்பர்களை உட்காரச் சொல்லி, நடுவி லிருக்கும் ஜப்பான்பாயை எனக்குக் காண்பித்தான். அதைக் கண்டதும் நான் பிரமித்து அவனை நோக்கி, "உனது தொழிலின் அழிவுக்குக் காரணம் இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது. அதற்குக் காரணம் உனது மனப் பான்மையே" என்றேன். அவனுக்கு விளங்கவில்லை. அந்த விகாரமான ஜப்பான் பாயை விரிப்பதனால் எனக்கு அதிக கௌரவம் அளிப்பதாக அவன் எண்ணினான். "இவ்விதம் உன்னுடைய பாயை விட இந்தப் பாய் உயர்ந்ததென்று நீயே எண்ணினால், மற்றவர்களும் அவ்விதமே நினைத்து உன்னுடைய பாயை வாங்காமல் அவைகளை வாங்குவதில் தவறு என்ன? உன் தொழில் ஏன் அழியாமல் இருக்கும்? உன்னுடைய தொழிலுக்கு நீ மதிப்புக் கொடுத்து அந்நிய நாட்டுப் பாயை வாங்காமல் இருந்தால் தான், பிறரும் உன்னுடைய பாயை வாங்கி உன்னுடைய தொழிலை ஆதரிப்பார்கள்" என்றேன்.

ராபர்ட் இங்கர்ஸால் என்ற நாஸ்திகர், ஒரு நண்பரின் வீட்டிலுள்ள மிக அழகான பூகோள 'குளோப்' ஒன்றைக் கண்டார். "இது யார் செய்தது?" என்று ஆச்சரியத்துடன் அந்த நண்பரை இவர் கேட்டார்.

"செய்யவாவது! ஒருவரும் செய்யவில்லை. தானாக உற்பவித்தது" என்றார் நண்பர்!

"எச். எம். வி." ரிகார்டுகளில் நாரத கானம்

No. 18132 { சொல்லு குழந்தாய் & மங்களமும்

No. 18133 { தேவியைப் பூஜை & அக்னி யென்று

ஸ்ரீமதி ஸுப்புலக்ஷ்மி பாடியவை

எல்லா "எச்.எம்.வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

தந்தி: "GOODWILL" த. பெ. நெ. 113 டெலிபோன்: 2724

ஸௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்

80, செம்புதாஸ் தெரு, ஜியார்ஜ் டவுன், சென்னை

பிராஞ்சுகள்

கல்கத்தா, காரைக்குடி, கோயமுத்தூர், திருச்சினாப்பள்ளி

எம்மிடம் திரணை, சதுரம், பட்டா, இரும்புத் தகடு, கலாய்த்தகடு, கர்டர், கலாய்ப் பைப்பு, கலாய்க் கம்பி, ஆணி வகைகள், பெயிண்டு, சிமெண்டு முதலிய எல்லா விதமான, இரும்பு சாமான்களும் கட்டிட சாமான்களும் கிடைக்கும்.

சினிமா பிடிப்பதற்கு வேண்டிய 2000 பவர் முதல் 5000 பவர் வரையில் பிரகாசமான பல்புகளும் அதைச் சேர்ந்த லைட் பிட்டிங்குகளும்

எலெக்டிரிக் வொயரிங் சாமான்கள், வொயர், பல்பு, விசிறி, எலெக்டிரிக் மோட்டார், பம்பு முதலிய எல்லா எலெக்டிரிக் சாமான்களும் கைவசமிருக்கின்றன.

Sole Distributors for Madras Presidency and States

BLOOD VITA

பிளட் விட்டா என்பது கல்கத்தா மெடிகல் ரிசர்ச் லபாரட்டரியில் டாக்டர் அத்யக்ஷ மாதூர் பாபு என்பவரால் தயாரிக்கப்பட்ட உயர்ந்த இரத்த விருத்தி டானிக். 8 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 1/4

*

ASCU WOOD PRESERVATIVE [ஆஸ்கூ]

இது மரப்பலகை, உத்தரம், விட்டம், டெலிபோன், எலெக்டிரிக் கம்பங்கள் முதலிய எல்லாவிதமான மரச் சாமான்களும் உளு, கறையான், மண் இவைகளால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கென்று, இந்திய சர்க்கார் காட்டு இலாகா ஆபீஸராக இருந்த டாக்டர் காமேசம் அவர்களால் கண்டு பிடிக்கப்பெற்ற, ஒரு ரசாயனப் பொருள். உபயோகப்படுத்தும் முறை இவைகளுக்கு, நேரிலோ, கடிதமெழுதியோ தெரிந்து கொள்ளலாம். ஜில்லா ஏஜண்டுகள் தேவை.

பிராடியூஸ் டிபார்ட்டுமெண்ட்

நெ. 207, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்

டெலிபோன் நெ. 2991.

கிராம்பு, மிளகாய், பூண்டு, கொத்தமல்லி, சணல், சூடம் முதலிய மளிகை சாமான்கள் மொத்த வியாபாரம்

உங்களுக்குத் தேவையான எல்லா சாமான்களுக்கும் கடிதம் எழுதக் கோருகிறோம்

ஹாலிவுட் எங்கே—மற்ற நாடுகளின் சினிமாத் தொழில் எங்கே? இந்த ஆச்சரியத்தைப் பாருங்கள்:

வெளிநாட்டில் சினிமாத் தொழில்—

ஏ. கே. செட்டியார்

போட்டோ எடுப்பதையும் ஸினிமாப் படம் பிடிப்பதையும் 1935-ஆம்ஞு வரையில் ஒரு பொழுதுபோக்காகவே நான் பழகி வந்தேன். ஸினிமாக் கலையை ஒரு தொழிலாக மேற்கொள்ள, அந்த வருஷந்தான் தீர்மானித்தேன். ஜப்பானுக்குப் போனேன்; டோக்கியோவிலுள்ள **இம்பீரியல் ஆர்ட் காலேஜில்** பயிற்சி பெற்றேன். ஜப்பானில் ஸினிமாத் தொழில் புரிவோரில் பெரும்பாலோரும் இங்கே பயிற்சி பெற்றவர்கள்.

டோக்கியோவிலுள்ள பி. ஸி. எல். ஸ்டூடியோவில், அமெரிக்கப் பயிற்சி பெற்ற ஒரு ஜப்பானியக் காமிராமான் இருந்தார். அவருக்குக் கீழே வேலை செய்யும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

ஜப்பான்

ஜப்பான் பூராவிலும் இரண்டே இரண்டு பெரிய ஸ்டூடியோக்கள்தான் உண்டு. ஒன்று, டோக்கியோவிலுள்ள **பி. ஸி. எல். ஸ்டூடியோ**; மற்றது, ஆப்ஞு. காமிராமான்களில் நூற்றுக்குப் பத்துப் பேர் அமெரிக்காவில் பயிற்சி பெற்றவர்கள். சராசரி ஒரு பிலிமின் நீளம் 10,000 அடி. ஒரு நல்ல படம் தயாரிக்க, 50,000 என், அதாவது சுமார் 40,000 ரூபாய்க்குமேல் செலவாகாது. பொதுவாக ஜப்பானியப் படங்கள் நன்றாயிருக்கின்றன. இந்தியாவைப்போல், 'நட்சத்'திரங்களுக்கு மிதமிஞ்சிய சம்பளம் ஜப்பானில் கிடையாது.

புராணம், சமூகம் இருவிதப் படங்களையும் ஜப்பானிய ஸ்டூடியோக்கள் தயாரிக்கின்றன. ஜப்பானிய 'நட்சத்திர'ங்கள் மிக்க சிரமப்பட்டு உழைக்கிறார்கள்; நாள் ஒன்றுக்கு 16-மணி நேரம்கூடச் சில சமயம் உழைக்கிறார்கள்.

பெரும்பாலான ஜப்பானிய ஸினிமாத் தியேட்டர்களில் ஒரே ஒரு வகுப்புத்தான் உண்டு. மிகச் சில தியேட்டர்களில் மட்டில் இரண்டு வகுப்புக்கள் இருக்கின்றன. பொதுவாக, தொடர்ச்சியாய்ப் படங்கள் காட்டுகிறார்கள். ஒவ்வொரு புரோகிராமிலும் இரண்டு படங்கள். அயல் நாட்டுப் படங்களில், அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ் இந்த நாடுகளின் படங்களிடம் ஜனங்களுக்கு அதிகப் பிரியம் இருக்கிறது.

அமெரிக்கா

ஐக்கிய அமெரிக்காவிலோ, அந்த நாட்டின் மிகப் பெரிய தொழில்களில் இரண்டாவது ஸ்தானம் பெற்றிருப்பது ஸினிமாத் தொழில்தான். அதன் பிலிம் தலைநகரான ஹாலிவுட்டின் ஜனத்தொகை 3,00,000 ஆகும். அதில் மூன்றில் இரண்டு பங்கு ஜனங்கள் நேராகவோ, மறைமுகமாகவோ பிலிம் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஹாலிவுட்டில் ஐந்தாறு பெரிய ஸ்டூடியோக்கள்தான் இருக்கின்றன. எல்லாவற்றிலும் மிகப் பெரியது **மெட்ரோ கோல்ட்வின் மேயர்.** மற்றும் **பாரமௌண்ட், ட்வென்டியத் ஸெஞ்சரி, பாக்ஸ், யுனிவர்ஸல், கொலம்பியா, வார்னர் பிரதர்ஸ்** போன்றவையும் இருக்கின்றன.

இருபுறமும் வரிசை வரிசையாய் மரங்கள் நிற்கும் அழகிய அகன்ற தெருக்கள் வழியே நடக்

மே வின்—பர்மிய கோகிலம் என்று சொல்லத்தகும் பிரபல சினிமா 'நட்சத்திரம்'

கும் ஒருவர், கிளார்க்கேபிள், நார்மா ஷியரர், ஷர்லீ டேம்பிள், மிக்கீ ரூனி போன்ற நட்சத்திரங்களைச் சந்திக்கலாம். நட்சத்திரங்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கிறது. ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவரைவிட அதிகச் சம்பளமும் சில நட்சத்திரங்கள் பெறுகிறார்கள்.

சராசரி ஓர் அமெரிக்கப் படம் 75 முதல் 90 நிமிஷம் வரை ஓடுகிறது. எனினும், இதற்குப் பல விலக்குகள் உண்டு. சாதாரணமான ஓர் அமெரிக்கப் படத்தைத் தயாரிக்க, 50,000 டாலர் செலவாகிறது. ஆனால், 'ஸூப்பர் பிக்சர்ஸ்' என்ற மிக உயர்தரப் படங்களைத் தயாரிக்க, பல லட்சம் டாலர் கூடச் செலவழிக்கிறார்கள்.

ஹாலிவுட்டிலுள்ள ஒரு திறந்த தியேட்டர். பல்லாயிரம் ஜனங்கள் உட்காரக் கூடியது

தொழில் முறை

பிலிம் தொழிலின் சகல அம்சங்களிலும் அமெரிக்கர் மிகச் சிறப்பான முறையில் வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு ஸ்டூடியோவுக்கும், ஊர் சுற்றும் சில ஏஜண்டுகள் இருக்கிறார்கள். புதிய 'நட்சத்திரங்'களைக் கண்டு பிடிப்பது இவர்களின் வேலை. முதல் காட்சியைப் படம் பிடிக்க ஆரம்பிக்கு முன், கதை, படம் எடுக்கும் குறிப்புகள் அடங்கிய 'ஸ்க்ரிப்ட்' முதலிய அனைத்தும் தயாரா யிருக்கும். ஒரு படத்தை எடுக்க, நான்கு முதல் பத்து வாரங்கள் தான் பிடிக்கும்.

காமிராமான்களில் இரண்டு வகை. ஒளி நிபுணர்கள் ஒரு வகை; படம் பிடிக்கும் 'ஆப்பரேட்டர்கள்' மற்றொரு வகை. படம் பிடிக்கும் காமிராமான்களைப்போல் மூன்று மடங்கு அதிகச் சம்பளம் ஒளி நிபுணர்கள் பெறுகிறார்கள்.

ஒரே காட்சியை எடுக்கையில் மூன்று காமிராக்களை, பெரும்பாலான ஸ்டூடியோக்கள் உபயோகிக்கின்றன. இந்த மூன்று காமிராக்களும் வெவ்வேறான மூன்று கோணங்களில் வைக்கப்படுகின்றன; வெவ்வேறான மூன்று கோணங்களில், படத்தை அவைகள் எடுக்கின்றன. அந்த மூன்றில் எது மிகச் சிறந்ததா யிருக்கிறதோ, அதையே முடிவான பிலிமில் சேர்த்துக் கொள்கிறார்கள். ஹாலிவுட்டில் இப்படி மூன்று நெகடிவ்கள் எடுத்தாலும், மொத்த பட்ஜட்டில் நூற்றுக்குப் பத்து விகிதம்தான் வெற்று பிலிம் வாங்குவதற் கென்று பணம் ஒதுக்குகிறார்கள். நம்மவர்களுக்கோ, வெற்று பிலிமுக்கு 30 சத விகிதத்துக்கு மேல் செலவாகி விடுகிறது!

ஒரு சம்பவம்

வார்னர் பிரதர்ஸ் ஸ்டூடியோவுக்கு ஒரு நாள் சென்றிருந்தேன். அப்போது அவர்கள் மழைக் காட்சி ஒன்றை எடுத்துக் கொண்டிருந்தார்கள். பிரம்மாண்டமான பல தொட்டிகள் நிறையத் தண்ணீர் இருந்தது. தொட்டிகளை மின்சார விசையால், மூடவோ திறக்கவோ செய்யலாம். 'நட்சத்திரங்'களின் மீது டன் கணக்கான தண்ணீரைப் பொழிந்தார்கள். நடிகர்கள் குளிரெடுத்ததுபோல் நடுக்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால், அது பச்சைத் தண்ணீர் அல்ல; வெந்நீர். ஏனெனில், நடிகர்களுக்கு ஜல தோஷம் பிடித்தால், சிலநாள் வரையில் படப்பிடிப்பையே நிறுத்தவேண்டி வரும்; அதனால், பல்லாயிர டாலர்கள் நஷ்டமாகி விடும். அந்த நடிகர்கள் உண்மையான நடிகர்கள். வெந்நீரை ஊற்றும்போதே, குளிர் வந்ததுபோல் நடுக்குகிறார்கள்!

பிலிம் தொழிலின் மூன்று கிளைகளான (1) உற்பத்தி, (2) விநியோகம், (3) காட்சி இந்த மூன்றையும் ஒரே கம்பெனிகளே நடத்துகின்றன. அமெரிக்கர்களின் சினிமாத் தொழில் வெற்றிக்கு இது தான் மூலகாரணம்.

ஐக்கிய அமெரிக்கா எங்கிலும் மொத்தம் 20,000 தியேட்டர்கள் இருக்கின்றன. மெட்ரோவுக்கும் பாரமவுண்டுக்கும் மட்டில் தனித் தனி 400 தியேட்டர்களுக்கு மேல் இருக்கின்றன. பல 'தியேட்டர்-சங்கிலி'கள் இருக்கின்றன. அவைகளுக் குள்ளே 'லோஸ் இன்கார்ப்பொரேடட்'தான் மிகப் பெரியது. அதற்கு 1,500 தியேட்டர்கள் இருக்கின்றன.

செய்திப் படம்

அமெரிக்கச் செய்திப்பட (நியூஸ் ரீல்) கம்பெனிகள் மிகத் திறமை யாக வேலை செய்கின்றன. செய்தியைத் தாங்களே முதலில் பெற்று விடவேண்டு மென்பதற்காக இவைகளுக்குள் எப்போதும் போட்டி இருந்து வருகிறது.

இரண்டாவது முறை குடியரசுத் தலைவராக ரூஸ்வெல்ட் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவரது பதவி யேற்பு வைபவம் வாஷிங்டனில் நடந்த அதே தினத்திலேயே நியூயார்க்கிலும் அந்தப் படத்தைக் காட்டிவிட வேண்டும் என்று ஒரு செய்திப் படக் கம்பெனி விரும்பியது. காலை பத்து மணிக்கு வைபவம். படத்தின் 'நெகடிவ்'களை வெகு சீக்கிரமாய் நியூயார்க்குக்குக் கொண்டு வருவ

தற்காக, ஓர் ஆகாய விமானத்தை அந்தக் கம்பெனி மானேஜர் அமர்த்திக் கொண்டார்.

ஆனால், இவரை வெல்ல மற்றொரு கம்பெனி மானேஜர் விரும்பினார். ஒரு ஸ்பெஷல் டிரெயினுக்கு ரெயில்வேக் கம்பெனியிடம் அவர் ஏற்பாடு செய்தார். ஆனால், அது சாதாரண வண்டியல்ல. அதை ஓர் ஓடும் ஸ்டூடியோ என்றுதான் சொல்ல வேண்டும். லெபோரட்டரி, பிரிண்டிங் இயந்திரம், புரொஜெக்டர், ரீ-ரெக்கார்டிங் வசதிகள் இவற்றோடுகூட, செய்தி எடிட்டர், முதல்தரமான செய்திப் பிரசங்கி (காமெண்டேட்டர்) ஆகியவரும் அந்த வண்டியில் இருந்து கொண்டு வேலை செய்தார்கள். வாஷிங்டனிலிருந்து நியூயார்க்குக்கு 300-மைல் தூரம்; 6-மணி ஓட்டம். படத்தை 'டெவலப்' செய்து, 'பிரிண்ட்' எடுக்க ஆறு மணி நேரம்தான் ஆகும். படம் பிடித்த பிலிமை, அப்படியே உடனே ஸ்பெஷல் டிரெயினில் ஏற்றினார்கள். நியூயார்க்கில் பென்ஸில்வானியா ஸ்டேஷனுக்குள் வண்டி நுழைகையில் டெவலப்பிங், பிரிண்டிங் எல்லாம் முடிந்து, முதல் காபி தயாராகிவிட்டது. தட்சணமே டைம்ஸ் ஸ்கொயரில் உள்ள செய்திப்படத் தியேட்டருக்கு ஓட்டமாய்க் கொண்டு போய், காட்டத் தொடங்கினார்கள்.

விமானத்திலே படத்தைக் கொண்டுவந்ததே இன்னொரு கம்பெனி, அது ஒன்றரை மணி நேரம் தாமதம் செய்துவிட்டது. வாஷிங்டனிலிருந்து நியூயார்க்குக்குப் பறக்க ஒன்றரை மணி நேரம் ஆகிறது; அந்த நேரந்தான் தாமதத்துக்குக் காரணம்.

ஆகையால், செய்திப் படத் தொழிலுக்கு விரைவு மட்டிலும் போதாது; மூளையும் வேண்டும்.

இங்கிலாந்து

இங்கிலாந்துக்கு வருவோமானால், ஏமாற்றந்தான் ஏற்படுகிறது. ஏதோ சில படங்களைத் தவிர, மற்ற இங்கிலீஷ் படங்களெல்லாம் மட்டமாகவே யிருக்கின்றன.

இங்கிலாந்திலே பிலிம் உலக மன்னராகவுள்ள அலெக்ஸாண்டர் கோர்டா ஆங்கிலேயரல்ல; ஹங்கேரியர். இங்கிலாந்து ஸ்டூடியோக்களில் வேலை செய்யும் காமிரா—மான்களில் பெரும்பாலோர் அயல்நாட்டுக்காரர்கள். 'கோட்டா'முறை என்ற ஏற்பாட்டால்தான் பிரிட்டிஷ் படங்கள் காப்பாற்றப்படுகின்றன. இங்கிலாந்தில் மூன்று அமெரிக்கப் படங்கள் இறக்குமதியானால், ஒரு பிரிட்டிஷ் படத்தை அமெரிக்கா வாங்கிக்கொள்ள வேண்டும்.

உலகத்திலே வேறெந்த நகரத்தையும்விட மிக அதிகமான செய்திப் படத் தியேட்டர்கள் லண்டனில் இருக்கின்றன. லண்டனின் நடுமத்தியில் சுமார் இருபது செய்திப் படத் தியேட்டர்கள் இருக்கின்றன. அவைகளுக்குள்ளே டாட்லர் ஸினிமா என்பதற்குத்தான் ஜனங்கள் மிக அதிகமாய் வருகிறார்கள். இந்தத் தியேட்டரின் மிகப் பெரிய திரையில், ஒரு சமயம் டெர்பி குதிரைப் பந்தயக் காட்சியை ஆகாசதர்சினியில் (டெலிவிஷன்) பார்த்தேன்.

இங்கிலாந்துக்கும் ஸ்காட்லாந்துக்கும் செல்லும் இரவு ரயில் வண்டியில் செய்திப்படத் தியேட்டர் ஒன்று அமைத்திருக்கிறார்கள். ஒரு ஷில்லிங் கட்டணம்.

மீதி ஐரோப்பா

ஒரு காலத்தில் பிரெஞ்சுப் படங்கள் உலக மார்க்கெட்டில் பிரபலமா யிருந்தன. இப்போது அவை மட்டமாகி விட்டன. ஏனெனில், தனிப்பட்ட முதலாளிகள் பட உற்பத்தியைக் கைக்கொண்டதால், தொழில் சீரழிந்து விட்டது.

ஜெர்மனியில் உள்ள ஊபா (Ufa) என்பது உலகத்திலேயே மிகப் பெரிய ஸ்டூடியோ. அது இப்போது டாக்டர் கெப்பல்ஸின் ஆதிக்கத்தி லிருந்து வருகிறது. ஜெர்மன் சினிமா டைரக்டர்களில் மிகச் சிறந்தவர்களை யெல்லாம், பிரசாரப் படங்கள் தயாரிக்கும்படி கட்டளை யிட்டிருக்கிறார்கள்.

பிரசாரப் படங்கள் தயாரிப்பதில், எந்த நாடும் ருஷியாவை மிஞ்ச முடியாது. ருஷியாவின் பிலிம் கலை-நுட்பங்கள், அமெரிக்க நுட்பங்களுக்கு முற்றிலும் மாறுபட்டவை. ருஷியப் படங்களில் நூற்றுக்கு நூறு பிரசாரந்தான் மலிந்திருக்கும்; ஆனால், அது மறைமுகமாகவே யிருக்கும். ஐஸன்ஸ்டீன், புடோவ்கின் போன்ற மேதைகள் டைரக்ட் செய்த படங்களைப் பார்க்கும் ஆனந்தத்தைப் பெற முடியாமல் தடுக்கப்பட்டிருப்பது நமது துர்ப்பாக்கியமாகும்.

ஸ்வீடனில் நல்ல வசதியுள்ள ஸ்டூடியோ ஒன்று இருக்கிறது. அதை ஆரம்பித்தவர் தீப்பெட்டி மன்னரான தூகர்தான். அதற்கு ஸ்வேன்ஸ்கா பிலிம் இண்டஸ்டிரி என்று பெயர். 1913-ஆம் ௵ நோபல் பரிசு பெற டாக்டர் தாகூர் சென்றபோது எடுக்கப்பட்ட பழைய செய்திப்படம் ஒன்றை ஸ்வீடனில்தான் நான் பார்த்தேன்.

ஏதோ பெரிய கட்டிடமாக்கும் என்று நினைத்து விடாதீர்கள். இது ஹாலிவுட்டிலுள்ள ஒரு ஸெட்தான்; அதாவது ஜோடித்த காட்சியாகும்

ஜெக்கோ-ஸ்லாவாகியா, ஹங்கேரி, ஆஸ்திரியா முதலிய நாடுகளிலும் நல்ல ஸ்டூடியோக்கள் இருக்கின்றன; ஒவ்வொரு வருஷமும் சில படங்களை அவையும் தயாரிக்கின்றன.

அயர்லாந்தையும் பின்லாந்தையும் தவிர, மற்ற ஒவ்வோர் ஐரோப்பிய நாட்டிலும் ஸ்டூடியோக்கள் இருக்கின்றன.

இத்தாலியில் ஐந்து அரங்கங்களுள்ள பிரம்மாண்டமான ஒரு ஸ்டூடியோவை இத்தாலிய சர்க்கார் கட்டியிருக்கிறது. இந்த அரங்கங்களை, தனிப்பட்ட சினிமா உற்பத்தி முதலாளிகளுக்கு வாடகைக்கு விடுகிறார்கள்.

பர்மா பேசாத படத்தை (ஸைலண்ட் பிக்சர்) மூன்று மணி நேரம் பார்த்துக்கொண்டு, சுமார் 400 டைட்டில்களைப் படித்து அனுபவிக்கக்கூடிய ஜனங்கள் பர்மா ஒன்றில்தான் இருக்கிறார்கள்.

பர்மா சிறிய நாடு. மார்க்கெட் மிகவும் சொற்பமானது. படவருமானமும் கொஞ்சமே. ஆகையால் நடிகர்களும் டைரக்டர்களும் அற்பச் சம்பளமே பெறுகிறார்கள்.

ஆச்சர்யச் செயல்கள் நிறைந்த 'ஸ்டண்ட்' படங்களில், மற்ற நாட்டவர்களைப் பர்மியர் மிஞ்சிவிடுகிறார்கள். பர்மியர் வீரமுள்ள மக்கள்; சாவுக்கு அஞ்சாதவர்கள். 'ஸ்டண்ட்' படங்களில் பெரும்பாலானவையும் உண்மையாகவே நடித்து எடுத்தவை; காமிராத் தந்திரங்கள் அல்ல.

பர்மாவில் பிலிம் தொழில் இளமைப் பருவத்திலேயே இருக்கின்றன. பர்மாவில் மேதைகளுக்குப் பஞ்சமில்லை; ஆனால், அவர்களுக்குச் சரியான சந்தர்ப்பம் வேண்டும். பர்மாவின் டியன்னா டர்பின் எனத்தகும் அழகி மேய் ஷின், பர்மியரின் செல்வ 'நட்சத்திர'மான சின் மியின் யீ போன்றவர்களை வைத்துக்கொண்டு இன்னும் சிறந்த படங்களைத் தயாரிக்கலாம்.

இந்தியா இனி இந்தியாவுக்கு வருவோம். நம்மிடம் 40 ஸ்டூடியோக்கள் இருக்கின்றன. அவைகள் பெரும்பாலும் பம்பாய் கல்கத்தா, லாகூர், சென்னை போன்ற பெரிய நகரங்களிலே அமைந்திருக்கின்றன. 'பேசும் படம்' (டாக்கீஸ்) வந்த பிறகு, பாஷைப் பிரச்சினை பெரியதாகி விட்டது.

இந்தியா மிகப் பெரிய தேசமாயிருந்தும், 2000 தியேட்டர்கள் தான் இப்போது இருக்கின்றன.

காலக்கிரமத்தில் அதிக ஹிந்துஸ்தானிப் படங்களை எடுத்து, தியேட்டர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தினால், பாஷைப் பிரச்னையை ஒருவாறு சமாளிக்கலாம்.

இந்தியாவிலுள்ள அநேக ஸ்டூடியோக்களில் ஆட்டோமாடிக் லெபோரட்டரி, பாக் புரொஜக்ஷன், சானல், ரீ-ரிக்கார்டிங் முதலிய இன்னும் பல வசதிகள் இருக்கின்றன. ஆனால் 'நட்சத்திரங்களுக்கு மிதமிஞ்சிய சம்பளம் கொடுக்கப்படும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

பூணூல் ஏன் போயிற்று?

கிருஷ்ண கிஷோர் ஒரு சமயம், "நீர் என் பூணூலைக் கழற்றிவிட்டீர்?" என்று என்னைக் கேட்டார். என்னிடம் இந்த மாறுதல் ஏற்பட்டபோது, (அதாவது கடவுள் தரிசனமும் ஆத்ம ஞானமும் உண்டானபோது) ஆடி மாசத்துப் புயற்காற்றிலகப்பட்ட பொருள்கள் அடித்துக்கொண்டு போகப்படுவதைப் போல எல்லாப் பொருள்களும் போய்விட்டன. நிலத்தின் பொழியைக் காட்டும் வேலிகளெல்லாம் போய்விடுவதுபோலத்தான் என்னுடைய நிலைமையும் ஆயிற்று. வெளி ஞாபகமே இல்லை. எனது வஸ்திரத்தையும் பூணூலையும் காப்பாற்ற யார் இருந்தனர்?

ஈசுவர ஞானத்திலேயே அழுந்திக் கிடந்த எனக்கு நாள் முழுதும் நான் ஆடையற்றவனாக இருந்ததுகூடத் தெரியவில்லை. ஆகவே பூணூலை அகற்றியதற்காக, கிருஷ்ண கிஷோர் என்னைக் கடிந்துகொண்டபோது, "இந்தக் கடவுள் பைத்தியம் ஒரு தரம் உம்மைப் பிடித்தாட்டினால், அப்போது எல்லாம் நீரே அறிந்துகொள்வீர்" என்று பதில் சொன்னேன்.

—ஸ்ரீ ராமஹம்ஸர்.

* * *



குழந்தையை எப்படி வைத்துக் கொள்வது? சந்தேகமென்ன? இப்படித்தான்.

தயார் செய்பவை

விவசாயக் கருவிகள்	டெக்ஸ்டைல் இயந்திரங்கள்
விவசாய இயந்திரங்கள்	வீட்டுச் சாமான்கள்

நாங்கள் தயார் செய்பவைகளின் ஜாபிதாவிற்கும், விபரங்களுக்கும் எழுதுங்கள்.

விற்பனை ஸ்தலங்கள் :—

(1) கார்டன் உட்ராப் & கோ., (மதராஸ்) லிமிடெட், தபால் பெட்டி நெ. 42 (கிளை ஆபீஸ்கள் : விசாகபட்டணம், விஜயநகரம், காகிநாடா & பெஜவாடா), மதராஸ். (2) V. குருசாமி, சைதாப்பேட்டை, மதராஸ். (3) ஜெனரல் & மெஷினெரி கம்பெனி, ஆஸ்மானியா பில்டிங்ஸ், ஸ்ரீ நரசிம்ம ராஜா ரோடு, பங்களூர். (4) வேலு & கோ., அருணசல ஆசாரி வீதி, சேலம். (5) நியோ எலெக்டிரிக் சர்வீஸ், திருவண்ணுமலை. (6) S. ராமநாத ஐயர், தென்காசி. (7) K. L. சங்கம நாயுடு, மகாலட்சுமி விலாஸ் ஷோரூம்ஸ், தேனி. (8) R. M. S. ராமசாமி நாயுடு, அருப்புக்கோட்டை. (9) P. S. G. C. I. கிளை ஆபீஸ், தெற்கு மாசி வீதி, மதுரை. (10) P. S. G. C. I. கிளை ஆபீஸ், 113, தளி ரோடு, உடுமலைப்பேட்டை. (11) P. S. G. C. I. கிளை ஆபீஸ், பாண்டி ரோடு, விழுப்புரம். (12) லக்ஷ்மி டெக்ஸ்டைல் இஞ்சினீயரிங் கார்பரேஷன், ஸர் பிரோஷா மெத்தா ரோடு, பம்பாய்.

உண்மையான இன்பத்தை அனுபவிக்க

"டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்கள்"

உபயோகியுங்கள்

இவ்வுலகில் ஒவ்வொருவரும் பணக்காரனாயினும், ஏழையாயினும், ஆணாயினும், பெண்ணாயினும், யௌவனராயினும், வயோதிகராயினும், வீர்யத்துடனிருப்பதையே விரும்புவார்கள். அவர் யாருக்காவது வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்க முடியாதென்று தோன்றினாலோ அல்லது இனத்தின் இன்பங்களை அனுபவிக்க முடியாவிட்டாலோ, அல்லது நல்ல திடகாத்திரமுள்ள குழந்தைகள் பிறக்கவேண்டிய சக்தி யில்லாவிட்டாலோ அவர்கள் எப்பவும் "**டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்களை**" உபயோகிக்க வேண்டும். இந்த மாத்திரைகள் ஆச்சர்யமான குணத்தைக் கொடுக்கும். ஒவ்வொரு பெட்டியிலும் பத்து டோஸ்களிருக்கின்றன. வயது என்னவாயிருந்தாலும், விவாக வாழ்வின் இன்பங்களை பூரா திருப்தியுடன் அனுபவிக்க ஒரு டோஸ்கூடப் போதுமானது. இன்றைக்கே "**டாக்டர் மஹாம்ப்ஸ் நைட் பில்ஸ்கள்**" ஒரு பெட்டி வாங்கி உபயோகித்துப் பாருங்கள். நீங்கள் முன்னால் அனுபவிக்க முடியாத இன்பத்தை அது தரும் என்பதற்கு சந்தேகமில்லை. ஒரு பெட்டியின் விலை ரூபாய் 5. தபால்கூலி அணா 9. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஏஜண்டுகள்: **அப்பா & கம்பெனி**

அப்பா பில்டிங்ஸ், சைனா பஜார், மதராஸ்.

குணத்தில் மேலானது

எல். ஜி.

மிஸ்கி பெருங்காயம்

மார்க்கை கவனித்து

வாங்கவும்

சொல்லிக்கொள்ள முடியாமல் கஷ்டப்பட்டு வருகிறீர்களா?

மாதவிடாய் தடைபடுகிறதா?

தற்கால விஞ்ஞான சாஸ்திரம் பெண்களுக்கு வரும் எல்லா விதமான நோய்களுக்கும் கடைசியாக மருந்து கண்டு பிடித்துவிட்டது. மாதவிடாய் தாமதத்திற்கு காரணம் எதுவானாலும் உலகில் பிரசித்திபெற்ற **நோவ்ரிஸ்** மிகவும் இயற்கையான ரீதியில் குணப்படுத்தும்.

ஜாக்கிரதை: கருவுற்றிருப்பதாக துளி சந்தேக மிருந்தாலும் உபயோகிக்கலாகாது; இல்லாவிட்டால் கருச்சிதைவு ஏற்படும். (**பாக்கிங் தபால் தனி.**)

நோவ்ரிஸ் ½ பாட்டில் ரூ. 6-8-0

„ முழு பாட்டில் ரூ. 10-8-0

பிரசுரங்கள் இலவசம்:

நோவ்ரிஸ்—எல்லா ஸ்திரீ நோய்களுக்கும் ஏற்றது

கிடைக்குமிடம்

ரிவீரா டிரேடிங் கோ,

P. O. Box 993 Bombay

காக்கினடாவில் தமிழ் சங்கீதம்

(டி. கே. சிதம்பரநாத முதலியார்)



சிதம்பரம் மகாநாட்டில் தமிழ்ப் பாட்டு சம்பந்தமான முக்கியத் தீர்மானத்தைக் கோணர்ந்த டி. கே. சி. அவர்கள், ஆந்திரத்தில் தோன்றியுள்ள ரசமான எதிரொலி யொன்றை இங்கே வர்ணிக்கிறார்

தமிழ் நாட்டில் மாத்திரம் விசித்திரமான சம்பவங்கள் நேருகின்றன என்று எண்ணி யிருந்தோம். தெலுங்கு தேசத்திலும் விசித்திரமான சம்பவங்கள் நேருகின்றன என்று தெரியவருகிறது. ரொம்பத் திருப்தி. சென்ற கி. பி. ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத் தோராம் வருஷம் செப்டம்பர் மாதம் 14-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று 'ஆந்திரா கலா பரீக்ஷித்' சங்க ஆதரவின் கீழ் ஆந்திரர்களாகச் சேர்ந்து காக்கினடாவில் ஒரு கூட்டம் கூடினார்கள். எதற்காக? அரவவாடுகள் எல்லாரும் சேர்ந்து, தெற்கே எங்கேயோ உள்ள சிதம்பரம் என்ற ஊரில், 'தமிழர்கள் கூடியிருக்கிற சபையில் தமிழ்ப் பாட்டே முக்கியமாகப் பாடவேண்டும்; அரவவாடுகளுக்குத் தெலுங்கு தெரியாததால் தெலுங்குப் பாட்டுகளை அனுபவிக்க முடியவில்லை' என்று பேசிக்கொண்டார்களாம். இந்த அபிப்பிராயங்களைக் கண்டிப்பதற்காகவே, மேலே சொன்ன கூட்டம் காக்கினடாவில் கூடியது.

இனி இதுமாதிரி கண்டனக் கூட்டம் வங்காளத்தில் கூடும்; ஐக்கிய மாகாணத்தில் கூடும்; பஞ்சாபில், காஷ்மீரத்தில், குஜராத்தில், கன்னட மைசூரில், மலையாளத் திருவாங்கூரில், எங்குமே கூடும். ஜெர்மனியிலும் இத்தாலியிலும் காமட்சட்காவிலும் கூடிவிடுமோ என்றுதான் பயப்படவேண்டி இருக்கிறது.

நாம் சொல்லவேண்டிய தெல்லாம், "ஆந்திர சகோதரர்களே! தங்கள் கையைக் கொஞ்சம் கொடுங்கள். என் சந்தோஷத்தைத் தெரிவிப்பதற்காக அதைக் குலுக்கவேண்டி இருக்கிறது. நீங்கள் நல்ல புத்திசாலிகள். உங்களுக்குள் தமிழ்ப் பாடலைப் பாடித் தொந்தரவு பண்ணிக் கொள்வதில்லை. தமிழ் விளங்காது என்று அப்படியே தமிழ்ப் பாட்டுகளை ஒதுக்கி விடுகிறீர்கள். விளங்காத காரியத்தை விளங்கியதாகப் பாவித்துக்கொண்டு சங்கடப் படுகிறவன் தமிழன் தான். இந்த அப்பாவி தமிழனுக்கு உங்களுடைய புத்திசாலித் தனத்திலிருந்து கொஞ்சம் எடுத்து விநியோகம் பண்ணிவிடக் கூடாதா?" என்றுதான்.

நம்முடைய தெலுங்கு சகோதரர்களுக்கு வேறு என்ன காரியத்தை எடுத்துச் சொல்ல இருக்கிறது?

* *

இதுவரையும் தமிழ் நாட்டில் நடந்த கச்சேரிகளில் (எல்லாம் சென்ற முப்பது வருஷமாகத்தான்) பாடுவதெல்லாம் தமிழ் அல்லாத இதர பாஷைகளில்தான். அப்பாவித் தமிழன், பாடகர் தமிழ்ப் பாட்டுப் பாடுவார் பாடுவார் என்று எதிர்பார்த்த வண்ணமாய் இருப்பான். எதோ சில வேளை துக்கடா, சில்லரை என்றெல்லாம் பெயர் வைத்து, கடைசியில் ஐந்து நிமிஷம் பாடகர் தமிழ்ப் பாட்டுப் பாடுவார். சில வேளை அதுவும் கிடையாது.

இடையிலே சிலர் பாடகரைத் தூர தேசத்துப் பாஷையிலெல்லாம் கூடப் பாடச் சொல்லுவார்கள். வங்காளி, இந்தி, மராட்டி, குஜராத்தி, இங்கிலீஷிலும் கூடப் பாடச் சொல்லி இருக்கிறார்கள். நான் கண்ணாரக் கண்டிருக்கிறேன்; காதாரக் கேட்டிருக்கிறேன்.

ஆனால், ஒரு கேள்வி. தமிழ்ப் பாடலுக்கு எதிர்ப் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்களே தமிழர்கள் சிலர்,—அவர்கள் என்றைக்காவது தமிழ்ப் பாடல் பாடவில்லையே என்று கச்சேரியில் புகார் சொன்னதுண்டா? தமிழ்ப் பாட்டைப் பாடும்படி பாடகரைத் தூண்டியதுண்டா? இல்லை.

காரணம் என்ன? சங்கீத சபைகளில் தமிழைப் பற்றிப் பேசுகிறது அலௌகிகம், அவைதிகம், என்ற மனப்பாங்குதான். தமிழர்களுக்கு ஏன் இந்த மனப்பாங்கு வந்ததோ தெரியவில்லை. வங்காளிகளிடத்தில் இந்த மனப்பாங்கு உண்டா? மராட்டியரிடத்தில் இந்த மனப்பாங்கு உண்டா? காக்கினடாத்தெலுங்கர்களிடத்தில்தான் இந்த மனப்பாங்குண்டா? கிடையாது. தமிழனுக்கு மாத்திரம் இந்த சாபம் (வேறு என்ன சொல்லுகிறது) எங்கேயோ இருந்து வந்து தலையில் விழுந்திருக்கிறது.

கச்சேரிக்கு ஏற்பட்ட மூன்று மணிநேரத்தையோ நாலுமணிநேரத்தையோ, நமக்கு விளங்காத, பேர்கூடத் தெரியாத, பாஷைகளுக்கெல்லாம் வழங்கி விடலாம், அதில் ஒரு நஷ்டமுமில்லை. 'ஆளுக்கொரு குட்டுக் குட்டினால் அடியேன் தலை மொட்டை' என்னும் பழமொழிப்படி தமிழ்ப்பாட்டுக்கு நேரமே கிடையாமல்ப் போய் விடுகிறது.

மூன்று மணி நேரம், நாலு மணி நேரம் தொடர்ந்து எழுத்தெழுத்தாக அனுபவிக்கவேண்டிய காரியத்தை விட்டுவிட்டு ஏதோ மிதந்தவாறாக பாவமற்ற வெறும் சப்தத்தை மாத்திரம் கேட்டுக் கொண்டிருக்கிறதென்றால், அருமையான காலத்தை வீணாக்குகிறோம் என்றுதான் பொருள்.

சப்தம் சப்தம் என்று சங்கீதத்தைப் பற்றி வாதாடிக்கொண்

டிருக்கிறார்களே சில தமிழர்கள்: அவர்களை யெல்லாம் ஒரு சோதனைக்கு உள்ளாக்கினால் நன்றாயிருக்கும்:

மேல் நாட்டு சங்கீதத்தில் உயர்ந்த பாடல்கள் இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். அந்த உயர்ந்த பாடல்களை ஒரு மண்டபத்தில் பாண்டுக்காரர்களை வாசிக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். மேலே சொன்ன சப்தவாதிகளை யெல்லாம் அழைத்து மண்டபத்தில் நல்ல ஆசனங்களில் அமரச் செய்யவேண்டும். மண்டபத்துக் கதவுகளை யெல்லாம் ஒட்டக்கூத்தருக்கான இரட்டைத் தாட்பாள்களைப் போட்டு அடைத்துப் பூட்டிவிட வேண்டும். பாண்டு மாஸ்டரை ஏவிவிட வேண்டியது. நாலு மணி நேரம் இடைவிடாமல் கச்சேரி நடக்க வேண்டியது. சுரம், லயம் இவைகளில் யாதொரு பிசகும் இருக்காது. எல்லாம் கணக்குப்படி அமைத்தது தானே பாண்டில்? சரி, நம்முடைய சப்தவாத சகோதரர்கள் என்ன செய்வார்கள்? யாராவது முணுமுணுத்தால், "அதெல்லாம் என்ன காரியம்? சங்கீதம் சப்தம் தானே? அது, அகில லோகங்களுக்கும் பொதுவான பாஷை அல்லவா? (யூனிவர்ஸல் லாங்வேஜ்)" என்று சொல்லி அமர்த்திவிட வேண்டும். இப்படியும் அப்படியும் திணறுவார்கள். இதை உத்தேசித்து மண்டபத்தில் குழப்பம் ஏற்படாது இருப்பதற்காக, முன் கூட்டி சிப்பாய்களைத்தான் நிறுத்திவைத் திருப்போமே!

இந்தமாதிரி ஒரு தடவை சோதனை செய்துவிட்டால், சப்தவாதிகள் எல்லாரும் நம் பக்கமே சேர்ந்து விடுவார்கள்.

* *

உலகத்தில் அநேக காரியங்கள் தனித் தத்துவமாக இருக்கின்றன. இனிப்பு என்கிறது ஒரு தனித் தத்துவம்தான். அது தனியாக சீனிச் சர்க்கரையில் இருக்கிறது. இனிப்புத்தானே வேண்டுமென்றால், ஒரு வீசை சீனியை, தலை வாழை இலையில் குவித்து, "சாப்பிடும் ஐயா" என்று சொன்னால், யாராவது சாப்பிட முடியுமா? உம்முடைய விருந்தும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்று ஓடியே போய்விடுவோம் அல்லவா? இதர வஸ்துக்களோடு சேர்ந்து, ஹல்வா, ஜிலேபி, பாயசம், சர்க்கரைப் பொங்கல், என்றெல்லாம் வந்தால்தான் தின்று அனுபவிக்க முடியும். அதேமாதிரி, சங்கீதம் தனித் தத்துவமாய் இருந்த போதிலும், வார்த்தையோடும் உணர்ச்சியோடும் கலந்து வரும்போதுதான் நம்முடைய மனசைக் கவரும்.

"மேளத்தைக் கேட்கவில்லையோ?" என்று கேட்டால், கோயில்களில் பாடுகிற பாடல்கள்—பதம், திருப்புகழ், தேவாரம், காவடிச் சிந்து முதலிய பாடல்கள் நம்முடைய உள்ளத்தில் வார்த்தைகளோடு இருக்கின்றன. அவைகளின் எதிரொலி என்று சொல்லக் கூடியதையே மேளத்தில் கேட்கிறோம். முன்பின் தெரியாத பாடலை மேளத்தில் வாசித்தால் ஏதோ ஒரு விதமாகத் தான் கேட்போமே ஒழிய, அது நம்முடைய மனசைக் கவர்ந்து விட்டது என்று சொல்ல முடியாது. எவ்வளவுக் கெவ்வளவு நம்முடைய உள்ளத்தில் சாகித்யம் பதிந்து கிடக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு வாத்திய சங்கீதத்தை அனுபவிக்கிறோம், சங்கீதத்தின் தனித்தத்துவத்தை அனுபவிக்கிறோம், என்று ஏற்படும்.

சாகித்தியம் உள்ளத்தில் பதிய வேண்டுமானால் நம்முடைய சொந்தத் தாய் பாஷையில்தான் இருக்கவேண்டும். இதில் பேரம் பண்ணுவதற்கு இடமே இல்லை. காக்கிநாடாத்தெலுங்கு சகோதரர்கள் இந்த விஷயத்தில் பேரம் பண்ணுவதே கிடையாது. பிரம்மா தங்களுக்குக் காது இரண்டைக் கொடுத்தது தெலுங்குப் பாட்டையே கேட்கத்தான், என்று சாதித்து விடுவார்கள். ஆனால், நம்முடைய தமிழ் நண்பர்களோ இரண்டு காது மாத்திரம் அல்ல, இருபது காது இருந்தாலும் எல்லாம் தெலுங்குப் பாட்டுக்காகத் தான் என்று சொல்லத் தயாராக இருக்கிறார்கள். எது எப்படி இருந்தாலும் இப்போது நடக்கிற விவாதம் எல்லாம் தமிழர்களையே பொறுத்தது. தெலுங்கர்களுக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை. ஆனாலும், தேள் கொட்டியது சிதம்பரத்தில்; நெறி கட்டியது காக்கிநாடாவில். ரொம்ப விசித்திரந்தான்.

ஸித்த புருஷர்கள்

உலகத்தில் ஐந்து வகை ஸித்தர்கள் காணப்படுகின்றனர்:

(1) ஸ்வப்பன ஸித்தர்:—கனவு மூலமாகத் தெய்வ அருளைப் பெற்றுப் பரிபூரண மடைபவர்கள்.

(2) மந்திர ஸித்தர்:—மந்திரோபதேசம் பெற்று அதன் மூலமாகப் பரிபூரண மடைபவர்கள்.

(3) ஹடாத் ஸித்தர்:—புதையல் கிடைப்பதனாலோ, அல்லது தனவான் வீட்டுப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வதனாலோ, திடீரென்று பணக்காரனாகிற ஓர் ஏழையைப்போல, இருந்தாற்போல் இருந்து பரிபூரண மடைபவர்கள் ஹடாத் ஸித்தர்கள் எனப்படுவர். பாவிகள் அனேகர் திடீரென்று எப்படியோ பரிசுத்தர்களாகி ஈசுவர ஸாம்ராஜ்யத்தில் புகுகின்றனர்.

(4) கிருபா ஸித்தர்:—ஈசுவரனுடைய கிருபை மூலமாகப் பக்குவ மடைபவர்கள். காட்டை வெட்டித் திருத்துகிறவன் பழைய கிணற்றையோ கட்டடத்தையோ கண்டுபிடித்தால் பொருள் செலவு செய்து சிரமப்பட்டுப் புதிதாக வேறொரு கிணற்றையோ கட்டடத்தையோ கட்டுவதில்லை. அதேபோல, சிலர் சிரமப்படாமலேயே பரிபூரணமடையும் பாக்கியசாலிகளாக இருக்கின்றனர்.

(5) நித்ய ஸித்தர்:—சதா பரிபூரணராக இருப்பவர். புடல் பூசணி முதலிய கொடிகளில் காய் தோன்றிய பிறகு, பூவின் இதழ்கள் வெளிவருவதைப்போல, நித்ய ஸித்தர் பிறக்கும்போதே பரிபூரணராய்ப் பிறப்பவர். முக்தியடைதற்பொருட்டு அவர்கள் செய்வதாகத் தோன்றும் பிரயத்தனங்கள் எல்லாம் மானிட வர்க்கத்துக்கு வழி காட்டுவதற்கேயாம்.

—ஸ்ரீ. பரமஹம்ஸர்

பிரிந்த காதலன்

1. அறியாப் பருவத்தி லே-என்னை
   அணைத்து மகிழ்ந்தா ரடி
   பிரியவே மாட்டா ரடி-சதா
   பின்னே திரிவா ரடி.

2. மானென் று சொல்வா ரடி-நல்ல
   மலரென் று சொல்வா ரடி
   தேனென் று சொல்வா ரடி-என்னைத்
   தேடி வருவா ரடி.

3. ஏனென் று கேட்டா ரில்லை-இப்போ (து)
   ஏறிட்டும் பார்த்தா ரில்லை
   யானென்ன செய்வே னடி-இதை
   எவரிடம் சொல்வே னடி.

—'பூ'

காந்தி வாழ்க

கடவுளின் சிருஷ்டிகளான அசையும் பொருள் அசையாப் பொருள் ஒவ்வொன்றிலும், நன்மை தீமை இரண்டும் உண்டு. புத்திசாலி என்ன செய்வானென்றால், பாலைத் தண்ணீரிலிருந்து பிரித்துண்ணும் அன்னத்தைப் போல் நன்மையைமாத்திரம் கைப்பற்றிக்கொண்டு தீமையை விட்டு விடுவான்.

* * *

மதமும் பொருளாதாரமும்

வேலூரில் நான் ஆத்ம சிந்தனையைப்பற்றிச் செய்த ஒரு பிரசங்கத்தைக் கேட்டு ஒரு பாதிரி என்னிடம் வந்து, அதைப் பற்றிச் சிலாகித்துவிட்டு, பிறகு ஒரு கேள்வி கேட்டார்: "உங்கள் பிரசங்கத்தினிடையே தீண்டாமையைப் பற்றிப் பேசினீர்கள், நன்றாயிருந்தது. கள் குடியை நிறுத்துவதைப்பற்றிப் பேசினீர்கள், அதுவும் நன்றாயிருந்தது. இரண்டும் பேசும் விஷயத்துக்கு ஒத்து இருந்தன. பிறகு, அதில் கதரை நுழைத்தீர்களே, அது என்? ஆத்ம சிந்தனைக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? எங்களுக்கு அது அவ்வளவு ருசிக்கவில்லை...............".

அதற்கு நான் அளித்த பதில் இது தான்:— "கொஞ்ச நாளைக்கு முன் அமெரிக்க நண்பர் ஒருவர், பொருளாதார தத்துவத்துக்கு இணங்காத ஒரு மதக் கோட்பாட்டில் தமக்கு நம்பிக்கை இல்லை என்று எனக்கு எழுதினார். அவர் சொன்னதை நான் ஒரு வகையில் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ஒன்று. ஒரு மதத்தின் பொருளாதார தத்துவங்களும் அந்த மதக் கோட்பாடுகளை ஒட்டியிருக்க வேண்டும் என்பதே. இதை நாம் ஞாபகம் வைத்துக் கொண்டோமானால், கதரின் வரையறை எவ்வளவு விசாலமானது என்று விளங்கும்.

"மதுவிலக்கையெடுத்துக்கொள்வோம். அது, குடியை விட்டவனைப் புனிதனாக்குகிறது." 'குடிப்பவன் குடியை விடும்படி மாற்றியவனையும் புனிதனாக்குகிறது.

"தீண்டாமைப் பிணியால், நம் நாட்டில் எழு கோடி ஜனங்கள் வருந்துகிறார்கள். ஆனால், நம்மில் ஒவ்வொருவரும் அத் தீண்டாமையை ஒழிக்க முயல்வதென்பது நடவாத காரியம். தீண்டாதாருக்கு நீங்கள் வேண்டுமானால், கல்வி கற்பிக்கலாம்; கிணறுகள் வெட்டிக் கோயில் கட்டலாம். ஆனால், இதனால் மாத்திரம் தீண்டாமை ஒழிந்து விடுமா? உயர் குலத்தவரெல்லாம், அவரவர் பீடங்களினின்று இறங்கி வந்து தீண்டாதார் மேல் அருள் நோக்கு வைத்து உறவு கொண்டாடினால் தானே, அவர்கள் உய்ய வழியுண்டு! இது வழியில் போகும் ஒவ்வொருவரும் செய்யக்கூடிய காரியமல்ல.

"ஆனால், கதர் அப்படியல்ல. தங்கள் மானத்தைக் காக்க வகையின்றி வருந்தும் லட்சக் கணக்கான மக்கள் நம் தேசத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தன் வீட்டில் உட்கார்ந்து கொண்டே ஒவ்வொருவனும் தன்னால் இயன்ற வரையில் செய்யக்கூடிய உதவி கதரின் மூலம்தான் முடியும். கதரிலும் சர்க்காவிலும் நிரம்பியுள்ள ஆத்ம தத்துவமும் பொருளாதாரமும் வலிமை யுடையனவாகும்."

* * *

மனித தர்மம்

மனிதனுக்குக் கடவுள் விதித்த விதி யாதெனில், பழைய வழக்கங்களை வென்று, பாவத்தை யொழித்துப் புண்ணியத்தை நிலை நாட்டுவதே. இதைச் செய்யும் முறையைக் காட்டாத மதத்துக்கு, அதைத் தவிர வேறு வேலைதான் என்ன?

நாம் பயந்து பயந்து சாகிறோம். பயத்தாலேயே பலாத்காரம் செய்கிறோம்; இரத்தம் சிந்துகிறோம். பகவானிடத்திலும், அவனுடைய கல்யாண குணங்களிலும் நமக்கிருக்கும் நம்பிக்கைக் குறைவாலேயே, கெட்ட காரியங்களைச் செய்கிறோம். 'சரி, இந்தத் தைரியக் குறைவை யொழிக்க வேண்டிய வழியை உடனே கற்பியுங்கள்' என்று என்னைக் கேட்டால், அதற்குச் சமாதானம் சொல்ல வகையற்றவனா யிருக்கிறேன். ஆனால், நான் அனுபவ முறையில் கண்ட ஒரு சாதனத்தை மாத்திரம் காட்ட முடியும். பிரார்த்தனையைத் தவிர வேறு வழியில்லை. அந்தரங்க சுத்தியாய் நீ அவனைக் குறித்துச் செய்யும் பிரார்த்தனையே, தீமையையும், பயத்தையும் வெல்ல வல்ல உயர்ந்த ஆயுதம். உன்னுள்ளிருக்கும் கடவுளிடத்தில் உனக்கு நம்பிக்கை யில்லாவிடில், பிரார்த்தனை அசாத்தியமான காரியம் தான்.

இந்தத் தத்துவத்தையே, கிறிஸ்தவ மதமும் இஸ்லாமும், கடவுளுக்கும் சைத்தானுக்கும் நடக்கும் சண்டையென்கிறது. ஜொராஷ்ட்ரிய மதம், அஹர்மஸாத்துக்கும் அஹ்ரிமானுக்கும் நடக்கும் யுத்தம் என்கிறது. நம்முடைய மஹாபாரதமும், காவிய மூலமாய் இதைத்தான் தெரிவிக்கிறது. நம் மதத்தின் ஐதிகம், நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் சண்டைதான்.

"பணக்காரரை ஏழைகளாக்க அருமையான வழி போல்ஷ்விஸிம் தான். ஆனால், ஏழைகளைப் பணக்காரராக்கும் சக்தி மாத்திரம் அதற்குக் கிடையாது" என்று லார்டு பால்போர் ஒருமுறை சொன்னாராம்.

* * *

பைத்திய ஆஸ்பத்திரி அதிகாரி: "தப்பியோடிய ஐந்து பைத்தியங்களையும் பிடித்து விட்டாயா?"

காவலன்: "ஐந்தா! இருபது பைத்தியங்களைப் பிடித்துவிட்டேன்."

ஒங்க அப்ப மகன் சிங்கன்டா-
அடிப்பியோ ?
C.A.1403
N.S.கிருஷ்ணன்
T.S.துரைராஜ்
பாடிய
சகுந்தலை
டாக்கி பாட்டுகள்
செருகளத்தூர் சாமா பாடிய
மன்னனுக்கே
கைலாசவாசா
CA.1362
பக்த கௌரி
கச்ச தேவயானி
டாக்கி பாடல்கள்
ஒடியன்
ரிகார்டுகளில் கேளுங்கள்
G.H.RAO
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்,
மவுண்ட் ரோட், மதராஸ்.

சக்தி காரியாலயம்

★

சக்தி புத்தகசாலையின் திறப்புவிழா
30-9-1941 செவ்வாய்க்கிழமை

சென்னை எஸ்பிளனேட்
367 நெ. கட்டிடத்தின் மேன்மாடியில்
நடைபெறும்

திருவாளர் டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள், புத்தகசாலையை அன்புடன் திறந்து வைக்க இசைந்துள்ளார்கள்

சக்தி புத்தகசாலையில்
எல்லா தமிழ் புத்தகங்களும் கிடைக்கும்

தபால் பெட்டி :
1361

தந்தி விலாசம் :
"MONTHLY"

சக்தி காரியாலயம்

367, எஸ்பிளனேட், சென்னை

பிரபலஸ்தர் வரிசை :

மகாத்மா காந்தி

'என்றுமே உலகம் கண்டிராத ஓர் அபூர்வ ராணுவ மேதை மகாத்மா காந்தி' என்கிறார் ஒரு சிறந்த ஆசிரியர்.

'காந்தி மகா புத்தி நுட்பம் வாய்ந்த அரசியல் வாதி' என்று புகழ்ந்தார் ஒரு முறை லாயிட் ஜார்ஜ்.

'புத்தருக்குப் பிறகு வந்த மிகப் பெரிய இந்தியர் காந்திதான்' என்கிறார் ஜான் கந்தர்.

மகாத்மா காந்தி ஓர் அபூர்வ புருஷன். அவதார புருஷன் என்று அவரைப் பலர் மதிப்பதில் எவ்விதத் தவறுமில்லை. இந்தியாவை உய்வித்து, அதன் மூலம் உலகத்தையே உய்விக்க ஆசை கொண்ட உத்தமன் காந்தி.

மோகன்தாஸ் கரம்சந்திர காந்தி, 1869-ஆம் ௵ அக்டோபர் ௴ 2-உ போர்பந்தர் சமஸ்தானத்தில் பிறந்தார். அவருடைய தந்தை ஒரு திவான்; பாட்டனாரும் ஒரு திவான். பனியா என்ற வைசிய குலத்தினர் அந்தக் குடும்பத்தார். தாய், ஹிந்து விரதங்கள், நோன்புகளை மிக்க பக்தியுடன் அனுஷ்டித்து வந்தாள். குடும்ப வழக்கப்படி ஏழு வயதிலேயே மகாத்மா காந்திக்குக் கலியாண நிச்சயதார்த்தம் நடந்து விட்டது; பதின்மூன்று வயதிலே விவாகம்!

கருணை உள்ளம் படைத்த காந்திக்கு வைத்தியத்திலே சிறு வயதிலிருந்து பற்றுதல். வைத்திய கல்வி பெறத்தான் அவருக்கு ஆசை. ஆனால், சட்டக் கல்வி பெற, அவர் லண்டனுக்கு அனுப்பப்பட்டார். லண்டனிலே பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பி வந்தார். ஆனால், வக்கீல் தொழில் புரிய அவரால் முடியவில்லை. 1893-ஆம் ௵ ஏதோ ஒரு வியாச்சியம் சம்பந்தமாகத் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார். அங்கே இந்தியர் படும் சிரமங்களை



நேரே அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

1915—19-ஆம் வருஷங்களில் முதன் முதலாகத் தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகப் போர் நடத்தி, அங்குள்ள இந்தியரின் சில பெருங் குறைகளைக் களைந்து வெற்றி பெற்றார். 1920-ஆம் ௵ இந்தியாவில் முதல் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தினார். அதில் பலாத்காரம் கலந்ததால், தாமே இயக்கத்தை நிறுத்தினார். என்றாலும், அவருடைய மூன்று கட்டுரைகளுக்காக, சர்க்கார் 1922-ஆம் ௵ வழக்குத் தொடுத்தார்கள். அதில் 6-வருஷச் சாதாரணக் காவல் தண்டனை பெற்றார். 1930-ஆம் ௵ உப்பு சத்தியாக்கிரகம் ஆரம்பித்து ரெகுலேஷன் கைதியானார். 1931-ஆம் வருஷம் காந்தி - இர்வின் சமரச ஒப்பந்தத்தின்மேல், இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்றார். 1932-ஆம் ௵ இந்தியாவுக்குத் திரும்பி வந்தவுடனே, வில்லிங்டன் பிரபு புதிய வைஸிராயாக வந்திருந்தார். காந்தி-இர்வின் ஒப்பந்தம் சிதைந்து கிடந்தது.

வைஸிராய் வில்லிங்டனைக் கண்டு பேச, மகாத்மா விரும்பினார், ஆனால், வைஸிராய் மறுத்துவிட்டார். இதைப்பற்றி ஒரு ரஸமான கதை உண்டு. "காந்தியை நேரே சந்திப்பவர்கள் அவரது வசீகர சக்தியில் மயங்கி விடுகிறார்கள். ஆகையால், காந்தியை நீங்கள் சந்திக்காதீர்கள்" என்று வைஸிராய் வில்லிங்டனுக்கு, அப்போது இந்தியா மந்திரியா யிருந்த ஸர் ஸாமுவேல் ஹோர் கட்டளை யிட்டாராம். அதனால் தான், சாதாரண மரியாதையைக் கூடப் பார்க்காமல், வைசிராய் வில்லிங்டன், காந்திஜியைக் காண மறுத்துவிட்டாராம்! வேறு வழியின்றி மகாத்மாஜி இரண்டாவது சத்தியாக்கிரகம் தொடங்கிச் சிறைப்பட்டார். அடுத்த வருஷம், சிறையிலிருந்தவண்ணமே, ஹரிஜனங்களுக்காக உலகப் பிரசித்திபெற்ற உண்ணாவிரதம் கிடந்தார். அதன் மூலம் பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் வகுப்புத் தீர்ப்பை உடைத்தார். 1939-ஆம் ௵ பிரபலமான ராஜகோட் உண்ணாவிரதத்தைத் தொடங்கி, தாகூர் சாகேபைப் பணியச்செய்து வெற்றி பெற்றார். இன்று தனி நபர் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கி, நடத்தி வருகிறார்.

காந்திஜியின் வாழ்க்கை மிக எளிமை வாய்ந்தது. உணவு, உடைகளில் எளிமையைக் கடைப்பிடிப்பவர். தமது தேகத்தை அடக்கியாள்வதில் வல்லவர். "இதோ இருபது நிமிஷம் தூங்கப் போகிறேன்" என்று அவர் சொல்லுவார். வண்டியிலே, மோட்டாரிலே எதில் இருந்தாலும் அப்படியே உடனே கணக்காக இருபது நிமிஷம் தூங்கி விட்டு விழிப்பார். பண்டித மோதிலாலின் சவக்கிரியை நடந்து திரும்

'ஸரஸி'

பியபோது, காரிலே காந்திஜி இவ்விதம் சற்றுத் தூங்க ஆரம்பித்தார். கார் குடை கவிழ்ந்துவிட்டது. காந்தி கீழே விழுந்துவிட்டார். நண்பர்கள் கவலையுடன் ஓடிப்போய்ப் பார்த்தால், இன்னும் காந்தி தூங்கிக்கொண்டே யிருந்தாராம்! உடம்பை அடக்கி யாளும் முனிவன் அல்லவா அவர்?

காந்திஜி நகைச்சுவை நிறைந்தவர். நண்பர்களுக்கு அயர்வு ஏற்படுமானால், தமாஷ் செய்வார். "எனக்கு நகைச்சுவை யில்லாவிட்டால், வெகு காலத்துக்கு முன்னே நான் தற்கொலை செய்துகொண்டிருப்பேன்" என்று கூட ஒரு நண்பரிடம் ஒரு சமயம் அவர் சொன்னார். யாருடனும் அன்பு கனியவே பழகுவார். நண்பர்களுடைய சுகதுக்கங்களையும் யோகக்ஷேமங்களையும் அக்கறையோடு, காந்திஜி விசாரிப்பார். காந்திஜியிடம் பழகியவர்கள் தங்கள் சொந்தக் குடும்ப விஷயங்களையெல்லாம், காந்திஜியிடம் தாங்களாகவே சொல்லிக்கொண்டு ஆறுதல் பெறுவார்கள். ஜவஹர்லால் நேரு சிறையில் இருந்தார். நெருக்கடியான சமயம். அதற்கிடையிலும், "என் சின்னப் பெண்ணின் நிறை அதிகரித்துள்ளது" என்ற தகவலை, காந்திஜிக்கு நேரு மிகுந்த சிரத்தையோடு தெரிவித்தாராம்!

மகாத்மாஜி இந்திய அரசியலில் கலப்பதற்கு முன்னே, அங்கங்கே சில ரகசியப் புரட்சிக்காரர்கள் இருந்தார்களே யொழிய, சட்ட வரம்பு மீறிய கட்டுப்பாடான ராஜீயப் போராட்டம் எதுவும் நேரடியாக நடக்கவில்லை. மகாத்மா காந்தி தான் அதற்கு வழி காட்டினார். அஹிம்ஸா தர்ம சத்தியாக்கிரகம் என்ற அபூர்வமானவொரு முறையை அவர் வகுத்தார். எதிரியிடம் அவர் குரோதம் கொள்வதில்லை; அன்பும் அனுதாபமுமே கொள்வார். போராட்டத்தை விட, சகலரும் கௌரவமாய், கண்ணியமாய் வாழத் தக்க ராஜிதான் அவருக்கு முக்கியம். அபேதவாதிகளோடு ராஜி, ராஜாக்களோடு ராஜி, முதலாளிகளோடு ராஜி, இந்திய சர்க்காரோடு ராஜி எல்லாரோடும் ராஜிக்கு அவர் தயார். ஆனால் அடிப்படையில் அவர் ஏழை பங்காளன். சர்வ ஜனங்களும் சுபிட்சமாய், கௌரவமாய், சுதந்தரமாய் வாழத் தக்க கற்பனை உலகம் ஒன்று அவருக்கு உண்டு. ஒவ்வொரு ராஜியும் அந்தக் கற்பனை உலகை நோக்கி ஏறும் ஒரு படியாக இருக்கவேண்டும் அவருக்கு. ராஜியின்றிப் போராட்டம் மூளும் போது, எவ்வளவு பெரும் தியாகத்துக்கும் அவர் அஞ்சமாட்டார். ஆனால், எதிரிக்கு மட்டில் துளித் தீங்கு கூடப் புரிய அவர் சம்மதியார்.

"காந்தியின் வாழ்க்கை, வீரத்தனம் என்ற சொல்லின் பூரண அர்த்தத்தில், வீரத்தனம் நிறைந்தது" என்கிறார் கந்தர். அது முற்றிலும் வாஸ்தவமாகும். காந்தி, கனவு காணுமொரு லட்சிய வாதி; ஆனால், அதே சமயத்தில் பெருங் கர்ம வீரனுமாவார். பொதுஉடைமை, அபேதவாதம், பாஸிஸம், அது இது என்ற ராஜீய, பொருளாதார தத்துவங்களெல்லாம் அவரைக் கட்டுப்படுத்த மாட்டா. அவர் ஜனங்களை அன்பினால் ஆளும் சர்வாதிகாரி; அஹிம்சை ஆயுதம் தாங்கிய சேனாதிபதி; பாமர மக்களின் உரிமைகளுக்குப் போராடும் ஜனநாயகவாதி.

இந்தியாவின் ஆத்மாவை, சுதந்திர எழுச்சி கொண்ட அதன் தேசீயத்தினிடம்தான் காண வேண்டும். அந்தத் தேசீயத்தின் ஆத்மா இன்று காந்தியிடம் இருக்கிறது. சென்ற இருபது வருஷ காலமாக, இந்தியாவின் தேசீயப் போராட்டம், காந்தியின் போராட்டமாகும்; காந்தியின் போராட்டம், தேசீயத்தின் போராட்டமாகும். இந்திய தேசீயக் காங்கிரஸின் முழுப் பலமும் இன்று மகாத்மா காந்தி தான். காந்தியும் காங்கிரஸும் ஒட்டாதது போலச் சில சமயம் தோன்றும். ஆனால் அது சாத்திய மில்லை; சாத்தியப்படவுமில்லை. காந்தியை ஒதுக்கி வைத்து, காங்கிரஸ் ஒன்றும் செய்ய முடியாது; ஏற்கனவே அந்த முயற்சி நடந்த ஒன்றிரு சமயங்களில் தோல்விதான் ஏற்பட்டது. இப்படி ஒரு மனிதனிடம் காங்கிரஸ் அடைக்கலமாவதா என்று சிலர் ஆயாசப்படலாம். என்ன செய்வது? காந்தியும் காங்கிரஸும் உயிரும் உடம்பும்போல் ஆகி யிருக்கும் பொழுது, யார் என்ன செய்ய முடியும்? தவிர, எதற்குத்தான் அது? உத்தமோத்தமமான மனிதன்— புல்லினிலே வயிரப்படை தோற்றுவித்தது போல, நாட்டுக்குப் புத்துயிரும் புதிய உரமும் நல்கிய மகா புருஷன்—காந்தி இருக்கும் போது, காங்கிரஸைப் பற்றி நாம் என் தான் கவலை கொள்ளவேண்டும்?

அர்ப்பணம்!

சில பிரபல ஆசிரியர்கள் தங்களுடைய சில நூல்களை அர்ப்பணம் செய்திருக்கும் வசனங்கள் ரொம்ப ரஸம்:

பி. ஜி. வோட் ஹவுஸ் (ஆங்கில விகட ஆசிரியர்): "எவளது சலியா ஊக்கமும் ஓயா உதவியும் இல்லாதிருந்தால், இந்த நூல் எழுதப்பட்ட நேரத்தில் பாதிக் காலத்தில் பூர்த்தியாகி யிருக்குமோ அந்த என் மகளுக்கு இது அர்ப்பணம்."

பிரான்ஸ் ஹாக்கட்டு (ஆங்கிலக் கதாசிரியர்): "இந்நூலிலே எவளுக்குத் துளியும் சிரத்தையில்லாதிருந்தது எனது தீராத் துயரமோ, அந்த என் மனைவிக்கு இது அர்ப்பணம்."

எச். டபிள்யூ. பௌலர் (ஆங்கில அகராதி ஆசிரியர்): "இலட்சிய மனைவியை நிஜ மனைவி எப்படித் தோற்கடித்துவிட முடியும் என்று எனக்குப் போதித்த உத்தமிக்கு இது அர்ப்பணம்."

கெப்ளர் (ஜெர்மன் வான சாஸ்திரி): "பகடையை உருட்டியாயிற்று; புஸ்தகத்தை எழுதியாயிற்று. தற்காலத்தவர் படிக்கட்டும்; அல்லது பிற்காலத்தவர் படிக்கட்டும். எவர் படித்தாலும் எனக்குக் கவலையில்லை. ஒரு வாசகனைப் பெற ஒரு நூற்றாண்டுதான் இந்தப் புஸ்தகம் காத்திருக்கட்டுமே, என்ன மோசம். என்னைப்போல் ஓர் அவதானிக்காக, கடவுளே 6,000 வருஷங்கள் காத்திருக்கவில்லையா?"

பீட்ரோ மாஸ்காக்னி (விமர்சகர்களின் அட்டகாசத்தில் வெறுப்படைந்த கவிஞர்): "உன்னத மதிப்பு வாய்ந்தவனும் யாராலும் மாற்ற முடியாத திருப்தியடைந்தவனுமான எனக்கே இது அர்ப்பணம்."

காந்தித் தாத்தா



ஆனந்த பைரவி — ஆதி தாளம்

தேசத்தி லேபெரிய தாத்தா—நாங்கள்
தெய்வம் எனக்கொண்டாடும் தாத்தா...
நேசத்தி லேபெரிய தாத்தா—கொண்ட
நினைப்பைச் செய்து முடிக்குந் தாத்தா ..

கூனிக் குறுகியிருந் தாலும்—இளங்
குமரன் என்று மெங்கள் தாத்தா...
வானக் கருமுகிலைப் போலே—எங்கள்
வாழ்வு தழைக்கவந்த தாத்தா...

என்பு தெரியமெலிந் தாலும்—உள்ளே
இமயத்தி னும் பெரிய தாத்தா...
அன்பு வடிவான தாத்தா—எங்கள்
அடிமைத் தளையறுக்குந் தாத்தா...

ஏழைக் கிரங்குகின்ற தாத்தா—எங்கள்
ஏக்கத்தை நீக்குகின்ற தாத்தா...
கோழைத் தனம்விடுத்து நாங்கள்—சிம்மக்
கூட்டம்போல் எழச்செய்த தாத்தா...

கோலைப் பிடித்து நடந்தாலும்--தர்மக்
கோட்டையைக் காத்துநிற்குந் தாத்தா...
காலைபோற் சாந்தமுள்ள தாத்தா—நாட்டுக்
கவலை துடைத்தருளுந் தாத்தா...

புலம்பித் துடி துடிக்கு மக்கள்—மனப்
புண்ணைக் குணப்படுத்தும் தாத்தா...
விலங்கு வலியை ஆத்மசக்தி—கொண்டே
வெல்லும் விறல்படைத்த தாத்தா...

நேட்டால் கடுஞ்சிறையைந் தாங்கிப்—பொது
நீதிக்குப் போர்புரிந்த தாத்தா—செக்கு
மாட்டைப்போல் பாடுபட்டும் வருந்தும்—ஏழை
மக்கள் கண்ணீர் துடைத்த தாத்தா...

அஞ்சாத நெஞ்சுடைய தாத்தா—உண்மை
அஹிம்ஸை விரதங்கொண்ட தாத்தா...
நஞ்சான குண்டுவெடித் தாலும்—புன்
னகைத்துப் பொறுத்து வெல்லும் தாத்தா...

சீமையிலே படித்த தாத்தா--பெருஞ்
செல்வத் தொழில்புரிந்த தாத்தா...
தீமை நலியநலம் பொங்க—மிகச்
சிறுக வாழுகின்ற தாத்தா...

பாழுஞ் சிறையிலடை பட்டும்—கடும்
பட்டினி யிருந்துடலங் கெட்டும்—நாங்கள்
வாழும் விடுதலைக்கே நோற்ற—தூய
மாதவ ராஜரெங்கள் தாத்தா...

தண்டிக்குக் கால்நடையாய்ச் சென்றே—உப்பு
சத்யாக் கிரகஞ் செய்த தாத்தா...
எண்டிசை யுலகிலும் இவர்போல்—மஹான்
இல்லையெனப் பேரெடுத்த தாத்தா...

பஞ்சடித் திராட்டினத்தில் நூற்றே—தொழிற்
பாடம் புகட்டுகின்ற தாத்தா...
துஞ்சா முயற்சியுள்ள தாத்தா—ஒரு
சொல்லால் உலகை வெல்லும் தாத்தா...

எளிய வாழ்வுடைய தாத்தா—உடல்
எடுத்த கீதை யெங்கள் தாத்தா...
தளரா தருட்பணிசெய் தாத்தா—வீர
சத்யாக் கிரகி யெங்கள் தாத்தா...

தரும வீரரெங்கள் தாத்தா—உப
சாந்த புருஷ ரெங்கள் தாத்தா...
கரும வீரரெங்கள் தாத்தா—வாழ்க
காந்தி மஹாத்மா நல்ல தாத்தா...

—சுவாமி சுத்தாநந்த பாரதி.

ஒரு தும்மல்

[மு. அருணாசலம், எம். ஏ.]

ஒரே ஒரு தும்மல்—அதைச் சுற்றிப் பழைய தமிழ்க் கவிஞர் எவ்வளவு அழகிய உணர்ச்சிச் சித்திரங்களைத் தீட்டி விடுகிறார்!

சிறு பையனொருவன் நாட்டுப் புறத்திலுள்ள ஒரு பாடசாலையில் ஆறாவது பாரம் வரையில் படித்துத் தேறிவிட்டு, முதல் முதல் பட்டணத்துக்கு வருகிறான். வந்து ஒரு காலேஜில் சேர்ந்து படிக்கிறான். புதிதாக இப்போது தாய் தந்தையரை விட்டுப் பையன் பிரிந்து வந்திருப்பதனால், அவர்களுக்கு எப்போதும் இவன் ஞாபகந்தான். பட்டணத்தில் மகனுக்குச் சாப்பாடு ஒத்துக்கொள்ளுமா, தண்ணீர் ஒத்துக்கொள்ளுமா, நெய் நல்ல நெய்யாகக் கிடைக்குமா என்றெல்லாம் தாயார் எப்போதும் கவலைப்பட்டுக் கொண்டே யிருக்கிறாள். அயல் வீட்டிலுள்ள தன் சிநேகிதியிடம் எப்போதும் இதே பேச்சுத்தான். "இன்று முழுவதும் மகனையே பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அவனுக்குக் கட்டாயம் புரையேறியிருக்கும்" என்று சொல்லுகிறாள்.

பட்டணத்தி லிருக்கிற பையனுக்கு ஆரம்பத்தில் வீட்டு ஞாபகம் அவ்வளவாகக் கிடையாது. எத்தனையோ புது விஷயங்களைக் காண்பதிலும் தெரிந்து கொள்ளுவதிலும் நண்பர்களோடு உல்லாசமாக விளையாடுவதிலும் அவனுக்கு நேரம் கழிந்து போகிறது. விளையாட்டிலோ அல்லது படிப்பிலோ ஞாபகத்தை வைத்துக்கொண்டு ஒருநாள், அவசர அவசரமாகச் சாப்பிட்டான். புரை யேறிவிட்டது. தலையில் இரண்டு தட்டுத் தட்டிக்கொண்டு, கொஞ்சம் தண்ணீரும் குடித்தான். பக்கத்திலிருந்த அவன் நண்பன், "ஓகோ! உன் தாயார் உன்னை நினைக்கிறாள். அதனால்தான் உனக்குப் புரையேறிற்று" என்கிறான். இவனுக்கும் அப்படியே படுகிறது. நம் எல்லோருக்குமே இப்படி ஒரு நம்பிக்கை யுண்டு; அதாவது, நமக்கு வேண்டியவர்கள் நம்மை நினைக்கும்போது நமக்குப் புரையேறும் என்று. ஆனால், உண்மையில், புரையேறுவதற்கும் மற்றவர்கள் நினைப்பதற்கும் எவ்விதத் தொடர்பு மில்லை.

இந்த நம்பிக்கை ஒருபுற மிருக்கட்டும். வேறொன்றைக் கவனிக்கலாம். நம் வீட்டிலுள்ள குழந்தை யொன்று தும்முகிறது. உடனே, பக்கத்திலிருக்கிற நாம் "நூறு வயசு" என்று சொல்லுகிறோம். நாம்தான் இப்படிச் சொல்லுகிறோம் என்பதில்லை; வேறு எவர் அருகிலிருந்தாலும் இப்படிச் சொல்லுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? ஒன்றும் கிடையாது. பழக்கந்தான். தும்மலுக்கும் ஆயுளுக்கும் ஒருவித சம்பந்தமும் இல்லை. இருந்தாலும், எப்படியோ வெகு காலமாக ஏற்பட்டுள்ள ஒரு பழக்கத்தினால், தும்மினவுடனே இந்த வாழ்த்தைச் சொல்வது இன்றும் வழக்கமாயிருக்கிறது. வாழ்த்துவோர், தும்மின சத்தத்தைக் கேட்டு, பிறகு, சாவதானமாக யோசித்துப் பார்த்து வாழ்த்தவில்லை. தும்மின சத்தம் காதிலே புகுந்ததோ இல்லையோ, தம்மை யறியாமலே இந்த வாழ்த்தைச் சொல்லிவிடுகிறார்கள்.

இப்படி எத்தனையோ பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் நம்மிடையில் உள்ளன. இவற்றுக்கு விசேஷப் பொருள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. எத்தனையோ நூற்றாண்டுகளாக இவை வழக்கத்தில் இருக்கின்றன. இதற்கு ஓர் உதாரணத்தைப் பார்க்கலாம். சீவகசிந்தாமணியின் கதை எல்லோருக்கும் தெரிந்ததொன்று. சீவகனை அவன் தாய் ஒரு மயானத்தில் பெற நேர்ந்தது; அங்கு வந்த ஒரு வணிகன் குழந்தையை எடுத்து வளர்க்கட்டுமென்று கருதி, அவள் மறைந்து நிற்கிறாள்; அவன் வந்து குழந்தையைக் கையில் எடுக்க, அது தும்முகிறது; கேட்ட தாய் "சீவ" என்று வாழ்த்துகிறாள். 'சீவ' என்பதற்கு 'நீண்ட ஆயுளோடு வாழ்வாயாக!' என்று பொருள். இந்த வாழ்த்தொலியை மட்டும் கேட்டுச் சென்ற வணிகன் அக் குழந்தைக்குச் 'சீவகன்' என்று பெயரிடுகிறான் என்பது சிந்தாமணியிலுள்ள வரலாறு. இந்நூல் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றியது. மேலே கூறிய பழக்கமொன்று மிகப் பழமையானதென்பதற்கு இந்நூல் ஆதாரமா யிருக்கிறது. காலத்தில் இன்னும் ஓர் ஆயிரம் ஆண்டுகள் பின்நோக்கிச்செல்வோம். திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்தவர். இந்தத் தும்மலை விஷயமாக வைத்து அவர் ஒரு நாடகம் நடத்துகிறார். அதையும் பார்ப்போம்.

ஒரு நாயகனும் நாயகியும் ஒருவர் மீதொருவர் நிறைந்த காதலுடையவர்களாய் வாழ்ந்து வருகிறார்கள். நாயகன் நாயகியைப் பிரிந்து போனதே இல்லை. ஏதோ காரியமாக ஒருநாள் மாலையில் அவன் வெளியே போனான். அவன் போன வழியையே பார்த்துக் கொண்டிருக்கிறாள் நாயகி. சீக்கிரத்தில் அவன் திரும்பி வரவேண்டுமே என்று தவிக்கிறாள். போன இடத்தில், நாயகன் தன் நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்து விட்டானோ அல்லது போன காரியத்தை முடிக்கத்தான் அதிக நேரம் பிடித்ததோ, என்னவோ, தெரியவில்லை; வெகு நேரங் கழித்துத் திரும்பி வருகிறான். மிக்க ஆவலோடு அவன் வரவையே எதிர் நோக்கியிருந்த நாயகிக்கு, இப்போது அவனை எதிரே கண்டவுடன், கோபமே மேலிடுகிறது. அன்பெல்லாம் ஒருபுறம் ஒதுங்கி விட்டது. கோப வெறியிலே, அவனோடு பேசவும் மறுக்கிறாள். அவன் எவ்வளவோ சமாதானம் சொல்லி, இவள் கோபத்தைத் தணிக்க முயல்கிறான். ஒன்றும் பலிக்கவில்லை. இவ்வாறு, அகாரணமாக ஏற்பட்ட இவளுடைய ஊடல் தணியாமலே, அன்று இராப் பொழுது கழிந்தது.

பொழுது விடிந்து, கொஞ்ச நேரமானபின், நாயகி தன் கோப வெறி யெல்லாம் தணிந்து, தோழியோடு முதல்நாளிரவு நடந்ததைப் பற்றிப் பேசிக்கொண் டிருக்கிறாள். நாயகனிடத்துக் கோபித்து இவள் பேசாதிருந்தா ளல்லவா? அப்போது இவளைப் பேச வைப்பதற்காக, அவன் ஒரு தந்திரம் செய்தானாம். என்ன தந்திரம்?

"ஊடி யிருந்தேமாத்
தும்மினார்"

என்ருள். நாயகி ஊடி யிருந்த போது அவன் தும்மினனும். தும்மல் இயல்பாக வந்துவிடவில்லை; வேண்டுமென்றே அவன் வரவழைத்துக் கொண்டானும். ஏன்? இவன் தும்மின சத்தத்தைக் கேட்டவுடனே, அவள் தன்னை யறியாமலே 'நூறு வயசு' என்று வாழ்த்துவா ளல்லவா? இதை முன்னிட்டு, அவளுடைய ஊடலைத் தீர்த்து, அவளைப் பேசச் செய்து மகிழலாமென அவன் எண்ணினன் என்று நாயகி சொல்லுகிருள்:

"ஊடி யிருந்தேமாத்
தும்மினர், யார், தம்மை
நீடுவாழ் கென்பாக்(கு)
அறிந்து"

நாயகனுக்குத் தும்மல் தற்செயலாகவே வந்தது. ஆனல், ஊடியிருக்கிற நாயகி இதற்கும் ஒரு காரணம் கற்பிக்கிருள். இவள் இப்படிக் கோப வெறியிலே நிற்கும் போது, பேச்சும் செயலும் அறிவுணர்ச்சிக்குப் பொருத்தமில்லாம லிருக்கின்றன. இதையொட்டி, இவளுடைய நாயகன் என்ன சொல்கிருன் என்பதையும் மேலே பார்ப்போம்.

காலையில், அவன் தன் தோழனிடத்து உரையாடிக் கொண்டிருக்கிருன். தான் தும்மினதை ஒப்புக்கொள்ளுகிருன். ஏதோ ஒரு தும்மல் இயற்கையாக வந்தது, தும்மினன். அவள் என்ன செய்தாள்?

"வழுத்தினள் தும்மினே
ணுக."

தும்மினவுடன், இயல்பாக, நினைவில்லாமலே 'தீர்க்காயுசு' என்று சொல்லி வாழ்த்தினளாம். இதனேடு நின்ருளா? இல்லை. இந்த வார்த்தைகள், தும்மல் சத்தம் கேட்டவுடன், மெய்ம்மறந்த நிலையில் அவளிடமிருந்து வெளிப்பட்டன. அடுத்த கணத்தில், அவளுக்குக் கோபவெறி மேலிட்டது. "என்னையன்றி வேறு யாரோ ஒரு பெண்ணிடத்து நீ அன்பு செலுத்துகிருய்போலத் தோன்றுகிறது. அப்பெண் உன்னை இப்போது நினைப்பதனு லல்லவா உனக்கு இங்கே தும்மல் வந்தது?" என்று கேட்கிருள். அவனை வாழ்த்தின வாழ்த்தெல்லாம் பறந்து போய்விட்டது. இந்த மனேபாவத்தோடு அவள் அழத்தொடங்கி விட்டாளாம்:

"வழுத்தினள் தும்மினே
ணுக; அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர்
என்று"

அழத் தொடங்கும்போது, "வேறு ஒரு பெண் உன்னை இப்போது நினைப்பதனு லல்லவா நீ தும்மினுய்?" என்று நாயகி சொன்ன சொற்கள், வாழ்த்தின தருணத்தில் அவளுக்கிருந்த அன்போடு கூடிய ஒரு மனேபாவத்தை அப்படியே துடைத்து அழித்துவிட்டதுபோல இருந்ததாம் நாயகனுக்கு. "அழித் தழுதாள்" என்று அவன் சொல்வது இவ்வளவையும் தெளிவாகக் காட்டுகிறது.

இந்த வார்த்தைகளைக் கேட்ட நாயகனுக்கு எப்படி யிருக்கும்? இவனும் அவளிடத்து ஒத்த அன்புடையவன். கோப வெறியிலே அவள் சொல்லிய இந்தச் சொற்களைக் கேட்டு, மிகவும் சங்கடப்படுகிருன். அப்போது இன்னெரு தும்மல் வந்தது. இந்தப் பாழுந் தும்மலே இப்படித்தான்; வரவேண்டாத சமயத்தில் ஒன்றுக்கு இரண்டாகச் சேர்ந்து வந்துவிடும். நாயகனும், எவ்வளவோ கஷ்டப்பட்டு, வந்த தும்மலை வெளிப்பட வொட்டாமல் அடக்கிவிட்டான். சத்தம் வெளிப்படவில்லையே ஒழிய, அதற்காக இவன் பட்ட கஷ்டம் நாயகி கண்ணில் பட்டேவிட்டது. வெறும் வாயை மெல்லுகிறவளுக்கு அவல் கிடைத்துவிட்டால் கேட்க வேண்டுமா? அவனுடைய செய்கையானது, இவள் சாட்டின குற்றத்தை அவன் ஒப்புக்கொண்டு, அதை மறைக்க முயல்வதுபோல, இவளுக்குத் தோற்றுகிறது. இதைச் சுட்டிக்காட்டி மறுபடியும் அழுதாளாம்:

"தும்முச் செறுப்ப
அழுதாள்: நுமர் உள்ளல்
எம்மை மறைத்திரோ
என்று."*

தும்முவதை மறுபடியும் கண்டால், நாயகி இன்னும் எதையாவது நினைத்து ஊடுவாள் என்று நாயகன் கருதி, வந்த தும்மலை அடக்கினன். இதுவே நாயகிக்குக் கோபம் விளைக்கப் போதுமான தாயிற்று. "உன் அன்புக்குப் பாத்திரமான பெண் ஒருத்தி உன்னை நினைக்கிரு ளென்பதை நான் அறியக் கூடாதென்று எண்ணி யல்லவா, வந்த தும்மலை நீ தடை செய்கிருய்?" என்று கேட்டுவிட்டு, மறுபடியும் நாயகி அழுகிருள்.

ஓர் அற்ப காரணத்தினலே, அன்பும் கோபமும் சேர்ந்த ஒரு வெறியில், நாயகியின் மனம் எங்கெங்கெல்லாம் ஓடுகிறது என்பதை இந்தப் பாடல்களில் கண்டோம். நாயகன் காலந் தாழ்த்து வந்தான் என்ற காரணத்தால், நாயகி எவ்வளவோ விஷயங்களைக் கற்பனை செய்துகொள்ளுகிருள். அவள் செய்யும் கற்பனைகளுக் கெல்லாம் இடங் கொடுப்பது, ஒரு தும்மல்.

தும்மலை யொட்டி இவ்வளவு காரியங்களும் இன்றும் நடக்கக்கூடியவையே. நமக்கு வேண்டியவர்கள் நம்மை நினைக்கும் போது நமக்குப் புரையேறும் என்பது இப்போதுள்ள நம்பிக்கை; தும்மல் வரும் என்று திருவள்ளுவர் கூறுகிருர். இவ்வளவே வித்தியாசம். மற்றப்படி, தும்மினல் வாழ்த்துவது இன்றும் உண்டென்பதை மேலே கண்டோம். இவற்றை நாம் பார்க்கப்போனல், உணர்ச்சியும் மனேபாவமும் சம்பந்தப்பட்ட மட்டில், மக்கள் இன்று இருப்பது போலவேதான் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் இருந்திருக்கிருர்கள் என்பது தெரிகிறது. மக்களுடைய அறிவு அன்று முதல் இன்று வரை கிரமமாக விருத்தி யடைந்திருக்கலாம். ஆனல், உள்ளத்திலே நிகழும் நிகழ்ச்சிகள், அன்பினுலும் கோபத்தினுலும் எண்ணும் எண்ணங்கள், செய்யும் செயல்கள் இவை யாவும் அன்றிருந்தவை போலவேதான் இன்றும் இருக்கின்றன.

சிந்தித்துப் பார்க்கும்போது, இப்படிப்பட்ட நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் பயனற்ற காரியங்கள் என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனல், நம் வாழ்க்கையை நயம்பட நடத்தவும், அதிலுள்ள சிறு விஷயங்களிலும் சுவையையும் அழகையும் கண்டு மகிழவும் இந்த நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களுமே பேருதவியா யிருக்கின்றன.

* [தும்மு - தும்மல், செறுப்ப - அடக்க, நுமர் - உன் காதற்பெண், உள்ளல் - நினைத்தல்.]

பர்மாவின் புதுவாழ்வு

— 'ஸஞ்சாரி'

பர்மா சில வருஷங்களுக்கு முன் வரையில் இந்தியாவின் ஒரு மாகாணமாகவே யிருந்தது. இப்போதுதான் அதற்குப் புதுவாழ்வு ஏற்பட்டிருக்கிறது. *1935*-ஆம் வருஷத்திய இந்திய அரசியல் சட்டம் தான் பர்மாவை இந்தியாவினின்றும் பிரித்தது. இதே மாதிரி *1937*-ஆம் ஷூ வரையில் மேற்கே இந்திய சர்க்காரின் ஆதிக்கத்துக்குக் கீழிருந்துவந்த ஏடன், அந்த வருஷத்தில் பிரிக்கப்பட்டு, பிரிட்டனின் கிரௌன் காலனி ஆக்கப்பட்டது. தெற்கே இலங்கைதான் ஏற்கனவே அப்படி இருந்து வருகிறது.

புதுவாழ்வு பெற்ற பர்மா, மெல்ல மெல்ல இந்திய உறவை முறித்துக்கொள்ள முயற்சி செய்கிறது. ஏற்கனவே, தனியா யிருக்கும் இலங்கையும் சில வருஷங்களாக இந்திய விரோத உணர்ச்சியைக் காட்டி வருகிறது. ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து வந்து தங்களைச் சுரண்டும் ஐரோப்பிய முதலாளிகளைப் பற்றி, பர்மாவோ, இலங்கையோ எவ்விதக் கவலையும் படுவதாய்த் தெரியவில்லை. இந்தியர் மீதுதான் அவைகளுக்கு ஆங்காரம் வந்திருக்கிறது. இதுதான் விசித்திரம்.

இந்தியாவின் மேற்கே ஏடனும், தெற்கே இலங்கையும், கிழக்கே பர்மாவும் பிரிட்டனுக்குப் பூர்ணமாய் பணிந்து கிடப்பது இந்தியாவின் பத்திரத்துக்கு ரொம்ப அவசிய மல்லவா? ஏழை இந்தியாவுக்குத் தன்னைத் தானே காத்துக் கொள்ளும் சக்தி எது? பிரிட்டிஷ் எஜமான் சொற்படி பூரணமாய்க் கேட்டு நடக்காமல் சில சமயம் அது சண்டி செய்துவிடும்போல் கூடத் தோன்றுகிறது. இந்த அசட்டு இந்தியாமீது வெளி உலகப் படையெடுப்புக்கள் நடக்குமானாலும் சரி, உள்நாட்டிலேயே பெரிய கலகம் ஏதாவது இதிலே ஏற்படுமானாலும் சரி, அவற்றினின்றும் இதைக் காப்பாற்ற, பிரிட்டனுக்கு ஏடன், இலங்கை, பர்மா இந்த மூன்றும் இனிமேல் பேருதவியாய்த்தான் இருக்கும்.

பர்மா பெரிய நாடு. சுமார் *2,61,000* சதுர மைல் விஸ்தீர்ணமுள்ளது. வெள்ளி, தகரம், தேக்கு, துத்திநாகம், மண்ணெண்ணெய் முதலியன விளையும் நாடு. உலகிலேயே மிக அதிகமாய் அரிசி ஏற்றுமதி செய்யும் நாடு. செத்து வந்த மஞ்சு கோ சாம்ராஜ்யத்தினின்றும் *1860*-ஆம் ஷூ அதனை பிரிட்டன் பிய்த்து எடுத்து, இந்தியாவுடன் இணைத்துக் கொண்டது. இதை இப்படி நம்முடன் சேர்க்க வேண்டுமென்று அப்போது இந்தியர் எவரும் அழவில்லை. பின்னல் அது பிரிந்தபோது, நாம் பெரிதும் வருந்தவுமில்லை. ஆனல், என்றென்றும் பர்மா நம்முடன் நேசமாயிருந்து வர வேண்டுமென்றே— மற்றெந்த நாட்டையும் விட அதிக நேசமாய் இருந்து வரவேண்டுமென்றே—விரும்புகிறோம்.

ஒரு பர்மிய ராஜ குமாரி

பர்மியமக்கள் இந்தோ-மங்கோலிய வகுப்பினர். அதாவது திபேத்தியரைப் போன்றவர்கள். அவர்களுடைய பாஷை சீனத் திபேத்திய வர்க்கத்தைச் சேர்ந்தது. என்றலும், பர்மியர் பெரும்பாலும் புத்த மதத்தைப் பின்பற்றுவோர். புத்த மதம் பிறந்தது இந்தியாவில். இந்தியாவின் பௌத்தப் பிரசாரகர்கள் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பர்மாவில் சென்று குடியேறி யிருக்கிறார்கள். அவர்கள் நம் நாட்டிலிருந்து அந் நாட்டுக்குக் கொண்டு சென்ற கலைச் செல்வம், இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் அழிக்க முடியாத நிரந்தர உறவை ஏற்படுத்தி யுள்ளது. பூகோள இயற்கை யமைப்பினலும், பர்மாவும் இலங்கையும் என்றிருந்தாலும் இந்தியாவோடு மிகத் தொடர்பு கொண்டே வாழ வேண்டும். அதிலும், அவ் விரு நாடுகளும், இந்தியாவைத் தங்களுடைய தாயைப்போல் பாவித்து நடக்க வேண்டும். இத்தகைய பூகோள இயற்கை சம்பந்தமும் சரித்திர சம்பந்தமும் பெற்ற அந்த நாடுகள், மனக்கசப்பான மார்க்கத்தில் செல்லுவது யாருக்கு லாபம்?

இன்று பர்மாவின் பிரச்சினை அங்கிருந்து இந்தியரை விரட்டுவதல்ல; புதிய இந்தியர் அங்கே வராமல் தடுப்பது மல்ல. சொத்தில்லாத பாட்டாளி மக்களின் துயரம் வர வர அதிகரித்து வருவதற்குப் பரிகாரம் காண்பதுதான் அதன் முக்கியப் பிரச்னை. 'தாக்கின்'கள் என்ற தீவிர வாதிகளால், அந்த ஏழை மக்களின் அரசியல் பிரக்ஞை நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி வருகிறது. மஞ்சள் அங்கி தரித்த புத்த பிட்சுக்களின் விசேஷ உரிமைகளைக் கண்டு, அவர்கள் நெஞ்சம் குமுறுகிறார்களாம். இந்த ராஜீய உணர்ச்சி வெள்ளத்துக்கு அணைபோட வழிதெரியாமல், என்னென்னவோ குறுக்கு வழிகள் தேடப்படுகின்றன. பலிக்குமா?

பர்மா சம்பந்தமான சில அழகிய படங்களை மத்தியிலுள்ள 120, 121-ஆம் பக்கங்களில் காணலாம்.

"மண வாழ்க்கையிலே ஏற்படும் ஒரே ஒரு தொல்லை இதுதான்—ஒவ்வொரு பெண்ணும் தாயுள்ளம் பெற்றிருக்கிறாள்; ஒவ்வொரு ஆணும் பிரம்மசாரி மனம் பெற்றிருக்கிறான்"

—இ. வி. லூக்காஸ்

* *

"ஒரு பொருளைக் காதலிக்கும் இருவர் தோழராக மாட்டார்கள். ஒரே பொருளிடம் பகைமை கொள்ளும் இருவரே எப்போதும் தோழர்களாவார்கள்"

—ஹவார்டு ஸ்பிரிஸ்

பொழுதை உருட்டி விட்டால், போய்விடுமோ? போகவே போகாது. போகச் செய்ய மார்க்கமென்ன?

'பொழுது போகல்லியே!' — வ. ரா.

பண்டைக் காலத்து அரசர்கள் மாறுவேஷம் போட்டுக் கொண்டு, நகர சோதனை செய்வார்களாம். ஜனங்களின் உண்மையான நிலைமையை நேரே அறிந்து கொள்ளுவதற்கு இது ஒரு நல்ல சாதனம் என்பதில் சந்தேகமில்லை.

நீங்களும் நானும் அரசர்கள் இல்லை. ஆகவே, மாறுவேஷம் போட்டுக்கொண்டு நகரசோதனை செய்ய வேண்டியதில்லை. நமது சொந்த வேஷத்திலேயே போகலாமே! அப்படியானால், இப்பொழுதே புறப்படுவோமே! நல்லது.

அந்த பங்களாவைப் பார்ப்போம். அதிலே பல பெண்மணிகள் கூடிக்கொண்டிருக்கிறார்கள். ஆளுக்கு, கையில் ஒரு விசிறி. முகம் துடைக்க, கைக்குட்டை. அவர்கள் ஒருவர் மற்றவரைப் பார்த்து, 'பொழுதே போகல்லியே! என்ன செய்யலாம்? சினிமாவுக்குப் போகலாமா?' என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த இடத்தைவிட்டு நகர்வோம். அதோ இருக்கிறது ஜுபிடர் க்ளப். இங்கே கூடியிருப்பவர்கள் ஆண்கள். இங்கிலீஷ் படித்தவர்கள். நல்ல உத்தியோகத்தில் அமர்ந்திருப்பவர்கள். இவர்கள் மத்தியிலும் அதே பேச்சுத்தான். 'என், ஸார், பொழுது போகல்லியே! சீட்டாடலாமா' என்கிறார்கள்.

அப்பால் செல்வோம். இளைஞர்கள் கொம்மாளமாக இருக்கிற இடம். 'போடா போ. பொழுது போகமாட்டேன் எங்கிறது. என்ன அநியாயமடா! என்ன பண்ணலாம் என்று தெரியவில்லையே' என்று பேசிக்கொள்ளுகிறார்கள். இப்படியே, கூலிக்காரர்களாக உழைத்து வயிறு வளர்க்கும் பேர்வழிகள் வரையில், நமது நாட்டில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு சித்திரம்.

ஐரோப்பிய நாடுகளைப் பார்க்கலாம். இப்பொழுது படுகொலை நேர்ந்து கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடுவோம். சாதாரண காலங்களில் அந்த நாடுகளில் பேசிக்கொள்ளுவதைப் பார்த்தால், விநோதமாயிருக்கும். 'பொழுது இவ்வளவு சீக்கிரமாகப் போகிறதே! கையில் இருக்கிற வேலைக்கு, பொழுது போதவில்லையே' என்று சொல்லுகிறார்கள். அந்த நாடுகளில் அரசன் முதல் ஆண்டி வரையில் (ஆண்டியிருந்தால்!) இதே பேச்சுத்தான் பேசுகிறார்கள். இந்தச் சித்திரத்தையும் பாருங்கள்.



மேலே : 'பொழுது போதவில்லையே.'
கீழே : 'பொழுது போகல்லியே.'

நம்மவர்களுக்கு ஏன் பொழுது போகவில்லை? அவர்களுக்கு ஏன் பொழுது போதவில்லை? இவைகளுடைய காரணங்களைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

பொழுது என்பது வெருட்டி அடித்தாலும் போகிற பொருள் அல்ல. பொழுது என்பதை நிர்மாணிப்பது, உருவம் கொடுத்து அமைப்பது சூரியனும் அல்ல, கடியாரமும் அல்ல. பொழுது என்பது பேயும் அல்ல.

அப்படியானால், பொழுது என்பது என்ன? பொழுது என்பது வேலைதான். வேலை செய்து கொண்டேயிருந்தால், பொழுதைப் பற்றிக் கவலையே இருக்காது; கவனமே இருக்காது. பொழுது தானாகப் போய்விடுகிற மாதிரி தோன்றும். ஆனால், வேலையில்லாமல் போனால், பொழுது நமது கண்முன்னே அசையாமல் தொங்கிக்கொண்டு துன்புறுத்திக் கொண்டேயிருக்கும். ஏதாவது ஒரு வேலை செய்துகொண்டிருந்தால்தான், உடல் ஆரோக்கியமாயிருக்கும்; மனம் நிம்மதியுடன் இருக்கும்.

வேலை இல்லை என்றால் உடல் கெட்டுப்போகும்; மனம் தளர்ந்து போகும். 'மனிதன் எவனும் சும்மா இருக்கக்கூடாது. அவன் ஏதாவதொரு வேலையில் ஈடுபட்டிருக்கவேண்டும்' என்று கீதையில் கண்ணன் உபதேசம் செய்திருப்பது இந்தக் காரணம் பற்றித்தான்.

'என்ன ஸார்! வேலைசெய்ய வேண்டும் என்கிறீர்களே, என்ன வேலையைச் செய்கிறது? அதை எவ்வாறு செய்கிறது? அதை எவ்வளவு நேரம் செய்கிறது? எந்த நோக்கத்துடன் செய்கிறது?' என்று இப்படியெல்லாம் கேள்வி போட்டு, என்னைத் துளைக்க ஆரம்பித்து விடுவீர்கள். பொழுது போகவில்லையே என்று நீங்கள் சொன்னதனால், வேலை செய்ய

(122-ஆம் பக்கம் பார்க்க)



ஆனந்தா ஆலயம்—பதினேராம் நூற்ருண்டில் கியான்ஸித்தா என்ற அரசரால் கட்டப்பட்டது

நந்தமானியா ஆலயச் சுவர் ஒன்றில் தீட்டப்பட்டிருக்கும் ஓர் ஓவியக் காட்சி

...ாதேவிக்குத் தேவமாதர் ஆபரணம் சூட்டும் சிலை



பர்மாவின்

கலைச் செல்வம்

இந்தியாவுடன் பர்மா எவ்வளவு உறவு கொண்டது என்பதைக் காட்டும் கலைச் செல்வம் பகான் என்னும் இடத்தில் உள்ளது. ரங்கூனிலிருந்து, ஐராவதிக்கரையோடு சுமார் 300 மைல் வடக்கே போனல், அங்கேதான் உள்ளது பகான். மஹாயன புத்த மதத்துக்கு, மூன்ருவது நான்காவது நூற்ருண்டுகளில் புகழ்பெற்றது பகான். இந்தியப் பௌத்தர்கள் இங்கேதான் அடைக்கலம் புகுந்தார்கள். கியான்ஸித்தா என்ற அரசர் இங்கே கட்டிய ஆனந்தா ஆலயம் இன்றும் மேனி குலையாமல் இருந்து வருகிறது. இதற்குள் உள்ள பல மாடங்களில், புத்தர் வாழ்க்கையைச் சித்தரிக்கும் அற்புதச் சிலைகள் அநேகம் இருக்கின்றன. நந்தமான்யா, பாய தோன்ஸு, சியாபாக்கியி என்ற பகான் ஆலயங்களில் உள்ள ஓவியங்களை, நமது அஜந்தா ஓவியங்களுக்குத்தான் இணை சொல்ல முடியும்; உலகிலே வேறெங்கும் இத்தகைய அழகிய ஓவியங்களைக் காணமுடியாது.

ப[illegible] தோன்ஸு ஆலயச் சுவரிலுள்ள ஓர் ஓவியக் காட்சி

வாலிப சித்தார்த்தரைப் பல தாதிகள் சூழ்ந்துள்ள...



(119-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று சொன்னேன். 'அதற்குமேல் எனக்கு ஒன்றும் தெரியாது' என்று நான் சொன்னால் என்னை நீங்கள் லேசிலே விட்டு விடுவீர்களா?

பதில் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன். 'பொழுது போகல்லியே' என்று சொல்லுபவர்கள், உண்பதில்லையா, உறங்குவதில்லையா? மற்றும் பல காரியங்களைச் செய்வதில்லையா? அப்படியிருந்தும் அவர்களுக்கு ஏன் பொழுது போகவில்லை? அவர்களுடைய மனதிலே ஏதேனும் விகாரம் அல்லது விகற்பம் ஏற்பட்டிருக்கிறதா? வெள்ளைக்கார தேசங்களில் பொழுது லாகவமாகப் போகிறபோது, அது இந்த நாட்டில் ஏன் லாகவமாகப் போகவில்லை? நாம் முட்டாள்களா? அவர்கள் அறிவாளிகளா? இரண்டுமில்லை.

காரணத்தை வேறு வகையில் கண்டுபிடிக்க முயலவேண்டும். வெள்ளைக்காரர்களுக்கு வாழ்வில் அபரிமிதமான ஆசை. வாழ்க்கையில் மகத்தான இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அதற்குத் தக்கபடி வாழ்கின்றார்கள். ஆகவே, அவர்கள் ஒரு நிமிஷமாவது சோம்பலாய்இருப்பதில்லை. ஏதாவது ஒரு காரியம் செய்து கொண்டே இருக்கிறார்கள்.

இந்த நாட்டிலோ வாழ்க்கையில் துளிக்கூடப் பிடித்தமேயில்லை. 'போட் மெயி'லுக்கு டிக்கட்டு வாங்கி ஸ்டேஷனில் காத்துக் கொண்டிருக்கும் பிரயாணியைப் போல், மனதை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் நம்மவர்கள். மயானத்தைப் போலிருக்கும் இந்த உலகத்தை விட்டு வெகு சீக்கிரம் அகலவேண்டும் என்பதுதான் பிடிவாதமாக அவர்களுடைய நோக்கமாக இதுவரையினும் இருந்து வந்திருக்கிறது.

விலங்கைப் போல நமது வாழ்க்கையைப் பற்றிக்கொண்டு கிடக்கும் இந்த நோயை அகற்றினாலொழிய, நம்மவர்களுக்கு விமோசனமே ஏற்படாது. 'வாழ்க்கை என்பது வெறும் பாழ்' என்று சொன்னவன் முட்டாள். அதை இப்பொழுது திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறவன் அவனை விட முட்டாள். வாழ்க்கை ஏன் பாழ்? வாழ்க்கைக்குப் பிறகு என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாமலே, வாழ்க்கையை அவமதிப்பதும் விட்டுவிட நினைப்பதும் அறிவீனமாகும்.

'வாழ்க்கை பாழ்' என்ற போலித் தத்துவத்தின் ஆட்சியால், இந்த நாடு கெட்டுப் போய் விட்டது. வாழ்க்கையில் எத்தகைய சுறுசுறுப்புக்கும் இடமில்லாமல் அது அடித்துவிட்டது. மனிதனுக்கு இருக்கக் கூடாத அற்ப குணங்கள் நம்மை வந்து சூழ்ந்து கொண்டு நிற்கின்றன. ஆகவே, எதற்கும் சமாதானம் சொல்லி, சோம்பிக் கிடக்கும் நிலைமைக்கு நம்மவர்கள் வந்துவிட்டார்கள்.

'துன்பமே இயற்கையெனும் சொல்லை மறந்திடுவோம்' என்று பாரதி கட்டளையிடுவதுதான் உண்மை. 'வாழ்க்கை பாழ்' என்பது முழுப்பொய். வாழ்க்கையிலே உன்னத ஸ்தானம் பெறுமல், ஆசைக்குத் தக்க பலன் கிடைக்காமல், மனம் கசந்து, மனம் வெம்பிப்போன வீணர்கள், 'வாழ்க்கை பாழ்' என்று சொல்லலாம். புத்திசாலிகள் சொல்லமாட்டார்கள், சொல்லப்படாது.

'ஏன் பிறந்தேன், எப்படிப் பிறந்தேன், இனி எங்கே போவேன்?' இந்த மாதிரி கேள்விகளுக்கு, பதில் சொல்லுவது முடியாது. செத்தவர்கள் திரும்பினால் தெரியலாம். அது நேருவதில்லையானதால், இந்தக் கேள்விகளை வாய்சலிக்காமல் கேட்பதில் பயனில்லை; சிந்தனை செய்வதிலும் பயனில்லை. பயனில்லாத ஒரு வேலையைச் செய்துகொண்டு, சோம்பலுக்கு இருப்பிடமாக வளர்ந்து வந்த நம்மவர்கள் 'பொழுது போகல்லியே' என்று சொல்லுவதில் ஆச்சரியமேயில்லை.

பொழுது உருட்டிவிட்டால் போய்விடுமா? போகவே போகாது.

துன்பத்தை விலக்கி இன்பத்தை அடையும் முயற்சி நம்மவர்களுக்குப் பிடிக்கவில்லை. மேலும் பல நூற்றுண்டுகளாய், சிறிது சிறிதாக வலுக் குறைந்துகொண்டு வந்திருக்கிறபடியால், அவர்கள் ஏக்கத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள். அவர்களுக்கு நேரான பார்வையில்லை; சுறுசுறுப்பான தோற்றமில்லை; தெளிவான நடையில்லை. தேக்கமுற்றுக் கிடக்கும் பாசி நிறைந்த குட்டையில் அகப்பட்டுக் கொண்டதைப்போல, அவர்கள் விழிக்கிறார்கள். இது ரொம்பக் கேவலமான நிலைமை.

மேல்நாடுகளில் புதிது புதிதாக வாழ்க்கைத் துறைகளில் சோதனை செய்து, நிலைமைக்குத் தக்கவாறு வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொண்டு வருகிறார்கள். நாமோ சனாதனம் என்ற கருங்கல்லைக் கழுத்தில் கட்டிக்கொண்டு, மூச்சுப் போகும்படியாயும் விழிபிதுங்கும்படியாயும் வாழ்கின்றோம்.

'கர்மபலன்' என்ற வேட்டை நாய் ஜன்ம ஜன்மங்களாக ஒருவனைத் துரத்திக்கொண்டு வருமாம்! இந்தப் பேதமையை என்னென்று சொல்லுவது; இந்தப் பேதமைக்குக் காரணம் என்ன? சுதந்திர மில்லாமல் அடிமைகளாகப் பல நூற்றுண்டுகளாய் நாம் வாழ்ந்து வருவதே காரணமாகும்; பெரிய காரியங்களை வாழ்க்கையில் சாதிக்காததே காரணமாகும்.

எப்பொழுது மாண்புடைய பொருள்களில் நம்மவர்களுக்கு நாட்டம் இல்லாமல் போய்விட்டதோ, அப்பொழுதே, அவர்களுடைய உள்ளத்தில் அச்சமும், அவல நினைப்பும் சாசுவதமாகக் குடியிருக்கத் துவக்கி விட்டன. இவைகள் நம்மைப் பேய்கள் போல ஆட்டி வதைக்கின்றன.

இமயமலையின் உச்சியில் என்ன இருக்கிறது? வட துருவத்துக்கு அப்பால் மண்ணா, மணலா, கரையா, நீரா? ஆகாயத்தில் வயிர மடித்த களம்போல் அபூர்வமான காட்சி தென்படுகிறதே, நட்சத்திரங்கள் அந்தரத்தில் தொங்குகின்றனவா? அதில் ஜனங்கள் வசிக்கிறார்களா? இவைபோன்ற கேள்விகளை மேல்நாட்டார் ஆராயப் புகுந்து அருமையான வேலை செய்து வருகிறார்கள். நாமோ அவர்களுடைய அரிய முயற்சியைக் கண்டு பிரமித்துப் போய், அவர்களுக்கு அடிமைகளாக இருக்க, சம்மதித்து வாழ்கிறோம். நமக்கு ஏன் பொழுது போகும்?

நாமோ பொழுது போகாத மகான்கள்! அவர்களோ பொழுது போதாத முட்டாள்கள்!

பொழுது போகவில்லை என்று கண்ட வேலையைக் கையில் எடுத்துக்கொண்டு திண்டாடுவது

அறிவாளிகளின் லட்சணம் அல்ல. வாழ்க்கையின் லட்சியத்துக்கும் வேலைக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கவேண்டும். வேலைக்கும் அதைச் செய்து முடிக்க வல்ல சாதனத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கவேண்டும்.

வாழ்க்கையில் குறியில்லாமல் வாழ்பவன் முட்டாள். அந்தப் பட்டத்தைச் சூட்டிக்கொண்டு நம்மவர்கள் எவ்வளவு காலம் வாழப் போகின்றார்கள்?

மேல்நாட்டு இலக்கியங்களில், மேல்நாட்டுக் கலைகளில், மேல்நாட்டு அற்புதமான இயந்திர வேலைப்பாடுகளில், நம்மவர்களுக்கு ஏராளமாக மோகம் இருக்கிறது. அப்படியிருப்பது இயற்கைதான். இவைகளையெல்லாம் வாழ்க்கையில் சேகரிக்க முடியாமல் போனதினால்தான், நாம் பொழுது போகாத நிலைமைக்கு வந்திருக்கிறோம்.

'இன்பமே வேண்டி நிற்போம்'. அதற்காகப் பாடுபடுவதுதான் முறை; அதற்காகப் பாடுபடுவது தான் இயற்கை. பாடுபடாமல் இன்பத்தை அனுபவிக்கவேண்டும் என்பது அவல ஆசை. பசித்தவனுக்குத்தான் ஆகாரத்தில் ருசியிருக்கும். உழைத்தவனுக்குத் தான் பசியிருக்கும். பலனை எதிர்பார்த்துத்தான் உழைப்பு இருக்க முடியும். லட்சியம் என்பதும் கர்மத்தின் பலன் என்பதும், ஒரு வகையில் பார்த்தால், ஒன்றேயாகும். லட்சியத்தைக் கருத்தில் கொள்ளாத வேலை, கடலை உழுவதைப் போன்ற, அறிவில்லாத, வேலையாகும்.

அற்ப ஆயுள் படைத்த மனிதன் அந்த வாழ்க்கை எல்லைக்குள் குறி தவறாத நெறியோடு இன்பத்தை அனுபவிக்க எண்ணுவதுதான் இயற்கையான ஆசையாகும். அந்த இயற்கையான ஆசையை மறப்பது தவறு; மறுப்பது குற்றம்.

ஆகவே, லட்சியம் இல்லாததினால், நம்மவர்களுக்கு வாழ்க்கைத் திட்டம் இல்லை. வாழ்க்கைத் திட்டம் இல்லாததால், வேலையில்லை. வேலை இல்லாததால், பொழுது போக வில்லை. ஆகவே, பொழுது போவதற்கு மருந்து லட்சியத்தைத் தழுவிய வாழ்க்கைத் திட்டமாகும். அது எப்படிப்பட்ட திட்டமாக இருக்கவேண்டும்?

குழந்தைகள் அறிவு :

வேலையில்லாத் திண்டாட்டம்

(லியோ டால்ஸ்டாய்)

ஒரு மிராசுதார் :

அவருடைய மனைவி :

வாஸ்யா : (அவர்களுடைய ஆறு வயது மகன்)

ஒரு பரதேசி :

[மிராசுதாரும் அவரது மனைவியும் வராந்தாவில் உட்கார்ந்து, தேநீர் குடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மகளும் மகன் வாஸ்யாவும், கூட இருக்கிறார்கள். ஒரு வாலிபப் பரதேசி வருகிறான்.]

மிராசுதார் : (பரதேசியை நோக்கி) என்னப்பா இது?

பரதேசி : (வணங்கி) உங்களுக்குத் தெரியவில்லையா, எஜமானே? வேலையில்லாது தவிக்கும் இந்த ஏழையிடம் கருணை காட்டுங்கள். பசியால் சாகிறேன்; கந்தலுடுத்தி வாடுகிறேன். மாஸ்கோவுக்குப் போனேன். திரும்பிவரக் காசில்லாமல், வழியெல்லாம் பிச்சையெடுத்துக்கொண்டு வருகிறேன். ஏழைக்கு உதவுங்கள்.

மிராசுதார் : நீ என் இப்படி உணவும் துணியும் கிடைக்காமல் கஷ்டப்படுகிறாய்?

பரதேசி : என்னிடம் பணம் இல்லாததால்தான், எஜமானே!

மிராசுதார் : நீ வேலை செய்தாயானால், இவ்வளவு ஏழையாயிருக்க மாட்டாய்.

பரதேசி : நான் வேலை செய்யத் தயார். ஆனால், இந்தக் காலத்தில் ஒரு வேலையும் கிடைக்கமாட்டேனென்கிறதே. கருணை காட்டுங்கள், எஜமானே! இரண்டு நாளாய்ப் பட்டினி.

மிராசுதார் : (தமது மணிபர்ஸைப் பார்க்கிறார். பிறகு மனைவியை நோக்கிப் பிரஞ்சு பாஷையில்) உன்னிடம் ஏதாவது சில்லறை இருக்கிறதா? என்னிடம் நோட்டாய் இருக்கிறது.

மிராசுதாரின் மனைவி : (வாஸ்யாவைப் பார்த்து) போய் என் படுக்கைப் பக்கத்திலே ஒரு சின்ன மேஜையிருக்கிறது பார், அதன் மேலேயுள்ள பையை எடு; அதிலே ஒரு மணிபர்ஸ் இருக்கிறது. அதை எடுத்து வா. நீ சமத்தல்லவா!

வாஸ்யா : [தாயார் சொல்லியதைக் காதில் வாங்காமல், பரதேசியை வைத்த கண் எடாமல் பார்த்துக்கொண்டிருக்கிறான்]

மிராசுதாரின் மனைவி : வாஸ்யா! காது கேட்கவில்லையா? (சட்டையைப் பிடித்து இழுக்கிறாள்) வாஸ்யா!

வாஸ்யா : என்ன, அம்மா! (தாய், தான் சொன்னதை மீண்டும் சொல்லுகிறாள். வாஸ்யா குதித்தோடுகிறான்) சரி; அம்மா! (இன்னும் பரதேசியைப் பார்த்தபடியே அகல்கிறான்).

மிராசுதார் : (பரதேசியைப் பார்த்து) கொஞ்சம் இரு—ஒரு நிமிஷம். (பரதேசி ஒதுங்கி நிற்கிறான்.)

மிராசுதார் : (மனைவியை நோக்கிப் பிரஞ்சுப் பாஷையில்) எத்தனை ஏராளமான ஜனங்கள் இப்படி வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள்! இதைப் பார்க்கையில் மகா

பயங்கரமாயிருக்கிறது. எல்லாம் சோம்பேறித்தனம் தான் காரணம்—என்றாலும், அவன் பட்டினி யென்று சொல்லும்போது, ரொம்பச் சங்கடமா யிருக்கிறது.

மிராசுதாரின் மனைவி: அவர்கள் புளுகுகிறார்கள். வெளி நாட்டிலும் இதே மாதிரிதான் இருக்கிறது. நியூயார்க்கில் சுமார் லட்சம் பேர் வேலையில்லாமல் திரிகிறார்களாம்! உங்களுக்கு இன்னும் கொஞ்சம் டீ வேணுமா?

மிராசுதார்: ஆமாம், கொஞ்சம் வேணும். ஆனால், சற்று லேசாய் இருக்கட்டும். (புகை குடிக்கிறார். மௌனம்)

[பரதேசி அவர்களைப் பார்க்கிறான்; தலையைச் சிலிர்க்கிறான்; தான் இருப்பது தெரியும் பொருட்டு இருமுகிறான். வாஸ்யா ஒரு மணிபர்ஸுடன் ஓடிவந்து, பரதேசி யிருக்கிறானா என்று கவனிக்கிறான். பிறகு, தாயிடம் மணி பர்ஸைக் கொடுத்தவண்ணம், பரதேசியை உறுத்துப் பார்க்கிறான்.]

மிராசுதார்: (மணிபர்ஸிலிருந்து மூன்று பென்னி காசை எடுத்து) இந்தாப்பா—உன் பேர் என்ன?—இதை எடுத்துக்கொள்.

பரதேசி: (தொப்பியை எடுத்து வணக்கம் செய்து காசை வாங்கிக் கொண்டு) ஏழையிடம் பரிதாபம் காட்டியதற்கு ரொம்ப வந்தனம்.

மிராசுதார்: உனக்கு வேலை யில்லாம லிருக்கிறதே, அதுதான் எனக்கு ரொம்பப் பரிதாபமா யிருக்கிறது. நீ வேலை செய்தால், பட்டினியால் கஷ்டப்படமாட்டாய். வேலை செய்பவனுக்கு வறுமை கிடையாது.

பரதேசி: (தொப்பியைப் போட்டுக்கொண்டு, திரும்பி) 'உழைத்தால் முதுகொடியும்; உழக்கு மட்டில் நிறையாது' என்பார்களே, அது உண்மை. (போய் விடுகிறான்.)

வாஸ்யா: அவன் என்ன சொன்னான்?

மிராசுதார்: உழவர்கள் முட்டாள்தனமாய் ஒரு பழமொழி சொல்லுவார்கள்; அதைச் சொல்லுகிறான். 'உழைத்தால் முதுகொடியும், உழக்கு மட்டில் நிறை'யாதாம்!

வாஸ்யா: அதற்கு என்ன அர்த்தம்?

மிராசுதார்: வேலை செய்வதால், மனிதன் கூனிக் குறுகிப் போவானே யொழியப் பணக்காரன் ஆகமாட்டான் என்று அர்த்தம்.

வாஸ்யா: அது தப்பா?

மிராசுதார்: சந்தேக மில்லாமல் தப்புத்தான். இந்தப் பயல் மாதிரி வேலை செய்ய இஷ்டப்படாமல் நாடோடியாய்த் திரிந்து கொண்டிருப்பவர்கள் எப்போதும் ஏழைகளாகவே இருப்பார்கள். உழைப்பவர்கள்தான் பணக்காரர் ஆகிறார்கள்.

வாஸ்யா: ஆனால், நாம் எப்படிப் பணக்காரர்களா யிருக்கிறோம்? நாம் வேலையே செய்யவில்லையே!

மிராசுதாரின் மனைவி: (நகைத்து) அப்பா வேலை செய்யவில்லை என்று உனக்கெப்படித் தெரியும்?

வாஸ்யா: எனக்கு அது தெரியாது. ஆனால் நாம் ரொம்பரொம்பப் பணக்காரரா யிருக்கிறோம். ஆகையால் அப்பா ரொம்ப ஏராளமாய் வேலை செய்யவேண்டும். அவர் அப்படி ரொம்பக் கஷ்டப்பட்டு வேலை செய்கிறாரா?

மிராசுதார்: எல்லா வேலையும் ஒரேவிதமானது அல்ல. என் வேலையை யார் வேண்டுமானாலும் செய்துவிட முடியாது.

வாஸ்யா: உங்கள் வேலை என்ன?

மிராசுதார்: உன்னைப் போஷித்து, உடையுடுத்தி, கல்வி அளிக்கிறேனே, அதுதான்.

வாஸ்யா: அவனும் தன் குழந்தைகளுக்கு இதை யெல்லாம் செய்ய வேண்டியதுதானே? அப்படி யிருக்க, அவன் மட்டில் ஏன் இவ்வளவு தரித்திரமா யிருக்க வேண்டும்; நாம் மட்டில் ஏன் இவ்வளவு...?

மிராசுதார்: (நகைத்து) இவன் ஓர் இயற்கை அபேதவாதியாக அல்லவா இருக்கிறான்!

மிராசுதாரின் மனைவி: ஆமாம், வாஸ்தவம். 'ஆயிரம் ஞானிகளால் கூடப் பதில் அளிக்க முடியாத கேள்விகளை ஒரே ஒரு முட்டாள் கேட்டுவிட முடியும்.' 'ஒரே ஒரு முட்டாள்' என்பதற்குப் பதில், 'ஒரே ஒரு குழந்தை' என்று போட்டுவிட வேண்டும். எல்லாக் குழந்தைகளுமே இப்படித்தான் இருக்கின்றன!

நிரந்தர சமாதானம் சாத்தியமா?

யுத்தம் நடப்பது சமாதானத்தை ஸ்தாபிக்க. அந்தச் சமாதானமோ அடுத்த யுத்தத்துக்கு விதை ஊன்றிவிடுகிறது. இவ்விதம் தான் பெரும்பாலான யுத்தங்களுக்குப் பலன் விளைந்திருக்கிறது. உதாரணமாக, சென்ற ஐரோப்பிய யுத்த முடிவில் ஏற்பட்ட வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையே, இந்த யுத்தத்துக்கு மூல காரணம் என்று சகல ராஜ தந்திரிகளும் அநேகமாய் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

ஆனால், மூன்று யுத்தங்கள், இதற்கு விலக்காகும்: (1) 1872-ஆம் வருஷம் பிரிட்டிஷ் கானடாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஒரு போர் நடந்தது. சோதனை போடல், ராணுவத்தில் சேர வேண்டுமென்று நிர்ப்பந்தப் படுத்தல் முதலிய சில உரிமைகளைப்பற்றி நேர்ந்தது அந்தச் சண்டை. நடுவிலே சமாதான உடன்படிக்கை நடந்தது. சண்டையின் நோக்கங்களைப்பற்றிய பிரஸ்தாபமே கிடையாது. இரண்டு எல்லைகளிலும் ராணுவம் இல்லாமல் கலைக்கப்பட்டது. (2) ஐக்கிய அமெரிக்க சமஸ்தானங்கள் ஒன்றுடனொன்று ஓர் உள்நாட்டுப் போர் தொடுத்தன. சம உரிமைகளோடு, தென் சமஸ்தானங்களையும் ஐக்கிய ராஜ்யத்தில் திரும்பச் சேர்த்துக்கொண்டதும், அந்தப் போர் நின்றது. (3) தென்னாப்பிரிக்காவில் பிரிட்டிஷாருக்கும் போயர்களுக்கும் நடந்த யுத்தத்தில், போயர்கள் தோற்றார்கள். என்றாலும், எந்தக் கோரிக்கைகளுக்காகப் போயர்கள் போரிட்டார்களோ, அந்தக் கோரிக்கைகள் அனைத்தும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு விட்டன.

யுத்த நோக்கங்களை யெல்லாம் அடியோடு மறந்து, வெற்றி தோல்வி அகங்கார ஆத்திரங்களை விட்டு, நீதியையும் நேர்மையையுமே குறிக்கோளாய்க் கொண்டு செய்யப்படும் சமாதானம்தான் நீடித்த பலன் தரும் என்பதையே இவை காட்டுகின்றன.

சரித்திரக் கதை:

ராணி வேலுநாச்சியார்

—[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

அரசன் போரில் இறந்தான். 'எங்கே மருது சகோதரர்?' என்று நவாப் சேனை தேடியது. கும்பினியார் பிணங்களைப் புரட்டிப் பார்த்தனர்; ஆட்கள் இல்லை. ஒற்றரை எங்கும் அனுப்பினர்; மருதர் சிவகங்கைக்குத் தப்பியதாகச் செய்தி கிடைத்தது. "பிடி மருதரை! பிடி ராணியை! அடி கொள்ளை!" என்று எதிரிகள் வெற்றிச் செருக்குடன் சிவகங்கைக்கு வந்தனர். அரண்மனை வாசலில் கடும்போர் நடந்தது; நூற்றுக் கணக்கான மறவர் உயிரைப் பலி கொடுத்து மானங் காத்தனர். அரண்மனைக்குள் பகைவர் புகுந்தனர். "பகடோ பகடோ" என்று கூவினன் உமார். அரண்மனைக்குள் மருது சகோதரர்போல் உடை தரித்த இருவர் இருந்தனர். அவர்களை உமார் பிடித்து விலங்கிட்டான். "வாஹ்வா" என்று எதிரிகள் ஊளையிட்டனர். "பிடி ராணியை" என்று, உமார் அந்தப் புரத்துள் நுழைந்தான். அவனை யாரும் எதிர்க்கவில்லை. அந்தப்புரம் காலியா யிருந்தது; அங்கே ஒரு பெண் வேலுநாச்சியார் போல் ஆடையணிந்திருந்தாள். 'பகடோ' என்றான் உமார்; அந்தப் பெண்ணை எதிரிகள் பிடித்துப் பாசறைக்குக் கொண்டுபோனார்கள்.

இரவு. தலைகால் தெரியாமல் குடித்துக் கும்மாளம் போடுகின்றனர் பகைவர். அச்சமயம் மூன்று வாள்வீரர் சிறையை உடைத்து வந்து, சிலரை வெட்டி வீழ்த்துகின்றனர்; "அரே பத்மாஷ் மோசம் செய்தான்" என்று கூக்குரலிட்டது நவாப் சேனை. உமார் விழித்து வந்து விசாரித்தான்: "எங்கே பீகம் வேலு?" என்றான். "நான் பீகமல்லேன்; வீர வேலு" என்றான் உருவிய வாளுடன் நின்ற வேலுச்சாமி. அவன் அந்தப்புரக் காவலன்; இராணியைத் தப்புவித்து அனுப்பிவிட்டு, அவள் உடையைத் தான் தரித்துக் கைதியாகி, இதோ வாள்போர் புரிந்து வீரமாகச் சாகிறான். "எங்கே ராணி? சொல்" என்று வாளுருவி மிரட்டினான் உமார். "எனது ராணியைக் காட்டிக் கொடுக்க நான் வரவில்லை; அவளுக்காக உயிர் கொடுக்கவே வந்தேன்" என்று நின்றான் வேலுச்சாமி. "மாரோ" என்றான் உமார். வேலுச்சாமி கழுத்தில் வாள் விழுந்தது. அவன் எதிரியைப் பலமாக ஒரு குத்து விட்டு, "முருகையா" என்று வீழ்ந்தான். மருது சகோதரராக நின்றவர், அவர்களுக்கு உயிர் போன்ற இரண்டு வீரர். மருது சகோதரர் தப்பியோட உதவி செய்து, இவர்கள் கைதியானார்கள். இந்த நாடகம் நடப்பதற்குள் அவர்கள் குறித்த இடத்தை அடைந்துவிட்டனர். கும்பினித் துரை, இவ்விருவரையும் சுடும்படி ஏவினான். சிப்பாய்கள் குறிவைக்குமுன், அவர்கள் சுற்றிச் சுழன்று பத்துப் பேரைக் கையால் குத்தி நொறுக்கினர்; மார்பில் குண்டு பட்டதும் "மருதப்பா..." என்று அவ்விருவரும் வீழ்ந்தனர்.

சிவகங்கை அப்போதைக்கு நவாப் கைக்கு வந்தது. என்றாலும், ராணியும் மருதரும் உயிருடன் இருக்குமட்டும் எவர் அமுலும் அங்கே செல்லாது. அவர்களைத் தேடிப் பிடிக்கக் கும்பினி



யானைமேல் அம்பாரி வைத்து, இராணி கம்பீரமாக ஊர்வலம் வந்தாள்

யார் ஏராளமான ஒற்றரை நாலா பக்கமும் அனுப்பினர். எங்கும் தேடினர். காணேம்.

எங்கே ராணி? எங்கே மருதப்பர்? பூச்சி நாயக்கன் ஊரில் 2000 வீரருடன் இருப்பதாகத் தகவல் கிடைத்தது. உடனே கும்பினிப் பட்டாளம் அங்கே திரும்பியது. "தாண்டாதே எல்லையை" என்று பூச்சி நாய்க்கன் ஒரு அதட்டுப் போட்டான். "தா மருதரை, தா ராணியை" என்று எதிரி சேனே குமுறியது. "இருவர் உள்ளே வந்து பாருங்கள்; இருந்தால் பிடித்துச் செல்லுங்கள்" என்ருன் நாயக்கன். 'அது சரி' யென்று இரண்டு குதிரைக்காரர் ஊரின் மூலை முடுக்கெல்லாம் சோதித்தனர். ஏமாந்தனர். "பிறகு எங்கே அவர்கள்?" என்று பூச்சி நாயக்கனைக் கேட்டனர். "ஐயா, நான் குண்டுணிச் சுப்பனல்ல. வேண்டுமானல் காளையார் கோயில் காட்டில் போய் அழுங்கள்" என்ருன் நாயக்கன். பகைவர் காடெல்லாம் துருவினர். மரங்கிளைகளை யெல்லாம் அசைத்துப் பார்த்தனர். ஆளைக் காணேம். அவர்கள் எங்கே?

திண்டுக்கல்லுக்கு வாருங்கள். அங்கே ஐதராலி பாடியிறங்கி யிருக்கிருன். திண்டுக்கல் மலைக்கோட்டையில் ஹைதராலிக்குமுன் மூவர் வீற்றிருக்கின்றனர். இருவர் ஆண்கள்; ஒருவர் பெண். சுற்றிலும் சுமார் 2000 மறவர் வாளுருவிக் காவல் காக்கின்றனர். ஐதராலி அந்த மூவர் வீரத்தையும் மெச்சுகிருன். அவர்களே சிவகங்கையிலிருந்து தப்பிய ராணியும் மருது சகோதரரும் ஆவார்கள். அத்தனை எதிரிகள் கண்ணிலும் பொடி தூவி இவர்கள் தப்பியது ஓர் ஆச்சரியம்; ஔரங்கசீப் பிடியிலிருந்து சிவாஜி தப்பியதைவிட ஆச்சரியம். ஏனென்ருல், சிவாஜி அமைதியான தில்லியில் சிறை யிருந்தான்; சுற்றிலும் போர்முரசு கொட்டி வாள் வீச்சு நடக்கும்போது, இந்த மூவரும் தப்பினர். காளையார் கோவிலில் எதிரி கை வலுத்ததுமே, அரசன் ஆணைப்படி பெரிய மருது சிவகங்கைக்கு வந்தான்; 2000 வீரரைத் தேர்ந்தெடுத்தான்; அரண்மனையிலிருந்த அணிமணிகள், மகுடம், செங்கோல், ஆயுதங்கள் எல்லாவற்றையும் ஜாடாவாகப் பெட்டிபோட்டு வண்டி வண்டியாகப் பூச்சி நாயக்கன் சீமைக்கு அனுப்பிவிட்டான். பூச்சி நாயக்கன் அக்காலப் புரட்சி வீரருள் ஒருவன். சுமார் 500 வீரருடன் இராணி ஆண்வேடம் பூண்டு ஒரு பெட்டி வண்டியில் புறப்பட்டுப் பூச்சி நாயக்கன் ஊர் சென்ருள். மறுநாள் சின்னமருது வந்தான்; இரண்டு மருதரும் அரசாங்கத் தஸ்தவேசுகளையும் நிதிகளையும் ஓர் இடத்தில் பத்திரமாக மறைத்து விட்டு, 1500 வீரருடன் புறப்பட்டனர். எல்லாரும் பூச்சி நாயக்கன் ஊரில் தங்கியிருந்து மறுநாள் இரவு மதுரை சென்று, அங்கிருந்து ஐதராலிக்கு ஆள் விட்டனர். அவர்களை ஐதர் அழைத்தான். எல்லாரும் திண்டுக்கல் சென்றனர்.

ஐதராலி மறவருக்குச் சரியான போர்ப்பயிற்சி தந்தான். அக்காலம் பாளையக்காரர் பலர் அவனுடன் சேர்ந்து கும்பினிக்காரரை எதிர்த்தனர். இராணியின் வீரத்தை ஐதர் மெச்சினுன். மருது சகோதரர் பலத்தையும், அறிவையும் வியந்து போற்றினுன். மறவர் திறமையைப் புகழ்ந்தான். "மருது! நவாப் சேனையை முறியடிக்க வேண்டும்" என்ருன் ஐதர். பெரிய மருது ஒரு நவாப் நாணயத்தை எடுத்துப் படக்கென்று இரண்டாக விண்டு, "இப்படி முறித்தெறிவேன்" என்ருன். அவன் பலத்தைக் கண்டு ஐதர் திகைத்தான். பெரிய மருது இரும்புத் தசையுள்ளவன்; அவன் எந்த உலோகத்தையும் வளைத்து ஒடிப்பான்; பகைவரின் விலா எலும்பைப் படபட வென்று நெரித்து விடுவான். அவன் பலத்தைப் பார்க்கப் பார்க்க, ஐதருக்கு அதிசயம் அதிகரித்தது. ஐதர் பாண்டி நாட்டைக் கொட்டை பரத்தவே வந்தான். பெரிய மருது அவனை ஒன்றுமட்டும் கேட்டுக் கொண்டான். "சுல்தான்! தாங்கள் எங்களுக்கு உதவி செய்யுங்கள்; ஆனல் எங்கள் சீமையைப் பிடிக்கும் எண்ணத்தை விட்டு விடுங்கள்—'நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்' என்ற வசை எங்களுக்கு வரக்கூடாது. தாங்கள் எங்கள் சீமையைக் கைப்பற்றுவதானல் இதோ வாள்பற்றிப் போர் செய்வோம்; உயிர் இருக்குமட்டும் ஊரை விடமாட்டோம்; எங்கள் உயிர்போனபிறகு என்ன வேண்டுமானலும் செய்யுங்கள்" என்ருன் மருது. "மறவர் ஊரை நான் பிடித்துக் கொள்ள மாட்டேன்; கும்பினிக்காரருடன் போர் செய்யுங்கள்; பாளையக்காரரைக் கிளப்பி விடுங்கள்; செய்யுங்கள் புரட்சி" என்ருன் ஐதர்.

ஐதராலி போருக்குக் கிளம்பின அதே சமயம், "அரசி கிளம்பட்டும்" என்ருன் சின்னமருது. சிவகங்கைக்குத் தகுந்த ஆட்களை அனுப்பி, இரகசியமாகப் புரட்சியை ஜோடித்தான் பெரிய மருது. "எல்லாம் தயார்" என்றனர் ஒற்றர்.

தனது சீமையைத் தன்னிடம் உடனே ஒப்பிக்கவேண்டும் என்று கும்பினிக்கு வேலுநாச்சியார் மனுப்போட்டாள். சரியான பதில் வராவிட்டால் இன்னது செய்வது என்பதைத் தீர்மானம் செய்து கொண்டார்கள். இரவும் பகலும் போர்ப்பயிற்சி செய்து மறவர் தசைகளை முறுக்கிவிட்டுக் கொண்டு, வாளைத் தீட்டிப் பளபளப்பாகப் பிடித்தனர்.

காலநிலை அபாயமாக மாறியது, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், சிவகங்கை எங்கும் பாளையக்காரர் கிளம்பினர். கிஸ்தி வாயில் மண்ணைப் போட்டனர்; பணம் என்ருல் பட்டாக்கத்தி உருவினர். இத்துடன் ஐதர் சண்டை வலுத்தது; அவன் இறுதிமட்டும் போர் தொடுத்துக் கும்பினிப் பட்டாளத்தைச் சிதறடித்து இறந்தான். அப்பனுக்குப் பிள்ளை தப்பாது வாய்த்தது. ஐதரின் மகன் திப்பு புலியாய்ப் பாய்ந்தான்; பிரெஞ்சுக்காரர் உதவியால் தனது சேனைக்கு நல்ல பயிற்சி தந்தான்; தந்தை பிடிக்க நினைத்த சீமைகளைப் பிடித்துக் கொண்டு மேலும் படை நடத்தினுன். மைசூர்ப் புலியுடன் போராடிக் கும்பினிப்படை திணறிப் போயிற்று. மைசூர் யுத்தம் வலுத்தது. இந்தச் சமயம் பாண்டிநாட்டில் வேறு போர் கிளப்பவேண்டாம் என்று கும்பினித் தலைவர் பாளையக்காரரைச் சும்மா விட்டு விட்டனர். வேலுநாச்சியாரையும் தடை செய்யவில்லை.

'நாச்சியார் வாழ்க' என்று எங்கும் முழக்கம். சிவகங்கைச் சீமையெல்லாம் ஒரே குதூகலம். ஏன்? வருகிருள் ராணி. யானைமேல் அம்பாரி வைத்து இராணி கம்பீரமாக ஊர்வலம் வந்தாள். மருது சகோதரர் குதிரை

யேறி இருபுறமும் வீரர் புடைசூழ வந்தனர். மறவர் படை வாகை சூடிவந்தது. தெருக்களில் ஹாரதி யெடுத்தனர். "ராணி நாச்சியார் வாழ்க! மருதப்பர் வாழ்க!" என்று பொதுஜனங்கள் ஆரவாரித்தனர். வேலுநாச்சியார் தனது அரண்மனையில் தர்பார் நடத்தினள். கண் கொள்ளாக் காட்சி. கவிகள் புகழ் பாடினர்; சங்கீத வித்வான்கள் இசைபாடினர். வேலுநாச்சியாரின் வீரத்தை எல்லாரும் போற்றிப் புகழ்ந்தனர். மருது சகோதரரே அவளுக்கு மந்திரிகள். சர்வாதிகாரமும் அவர்கள் கையிலிருந்தது. நாச்சியார் வெகு திறமையுடன் ஆண்டாள்; வீடு வீடாக உள்ள குறைகளை விசாரித்துப் பரிகாரம் செய்தாள். தனது அரசில் எந்தப் பெண்ணும் கண்கலங்கச் சகியாள்; எந்தக் குழந்தையும் அனாதையாக வருந்தப் பாராள். ஏராளமான தொழில்களைத் தந்து ஜனங்களுக்கு உழைப்பும் பிழைப்பும் உண்டாக்கினள். படைவீரரை நன்றாகப் பயிற்றி எதிரிகள் நடுங்கச் செய்தாள். சிறுவருக்குக் கல்வி புகட்டினள். கலைவாணரை அன்புடன் ஆதரித்தாள். புலவருக்கு மானியங்கள் விட்டாள்—நாட்டில் அறிவும் கலையும் அமைதியும் நிலவின.

நாச்சியார் கருணையைப், போற்றுதவரில்லை. 1790-ஆம் ஆண்டு தனது மகள் வெள்ளாச்சிக்குப் பட்டம் சூட்டி, வேலுராணி மண் வாழ்வினின்று விடை பெற்றுக் கொண்டாள். பிறகு மருது சகோதரரே ஆட்சி நடத்தினர். அவர்கள் மறவர், அகம்படியர், சேர்வைகள், முதலியார், பிள்ளைமார், ராஜுக்கள், நாயுடுக்கள்—எல்லாரையும் கூட்டிப் போர்ப்பயிற்சி தந்தார்கள். அவர்களுடன் எப்போதும் 20,000 வீரர்கள் இருந்தனர். அக்காலத்தில் இந்த இருவரும் ஒப்பற்ற சுதந்தர வீரர்களாக விளங்கினர்.

வக்கீல்: அவன் திருடனென்று நீ சொல்கிறாய்?

சாட்சி: இல்லீங்கோ. அவுரைத் திருடருன்னு நான் எப்படிச் சொல்ல முடியுங்க? ஆனா, நானு ஒரு கோளிக் குஞ்சாயிருந்து, அவுரைக் கண்டேனுன்னா, விர்ரின்னு பறந்து எறவாணத்திலே போய்க் குந்திக் கிடுவேனுங்கோ.

ரமணியின் தலைவலி

[எஸ். சுப்பிரமணியன், எம். ஏ.]

> வைத்தியர்கள் ஆளுக்கொன்று சொன்னார்கள். ஜோஸ்யர் பலே போடு போட்டார். கடைசியிலே ரமணியின் தலைவலி ஆனவிதம் ஒரு விநோதம்.

அன்று படுக்கையை விட்டு எழுந்தது முதல் ரமணிக்கு ஒரே தலைவலி. அமிருதாஞ்சன், கற்பூரத் தைலம் முதலிய ஒன்றுகூடும் அந்தப் பொல்லாத தலைவலி அசைய . மாட்டேனென்று சொல்லிவிட்டது. படுக்கையில் படுத்தபடியே, பாவம், குழந்தை அலட்டிக் கொண்டிருந்தான்.

பெற்றோர்களுக்கு அவன் ஒரே பிள்ளை. அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்து பிறந்து இறந்து போய்க் கொண்டேயிருந்தன. கடைசியில் பிறந்த ரமணிதான் ஏதோ கடவுள் கிருபையால் இது வரையில் ஒரு காய்ச்சல் குளிர் இல்லாமல் இருந்துவந்தான். இப்போது திடீரென்று அவனுக்கும் தலைவலி வந்ததும், அவனுடைய பெற்றோர்களுக்கு வயிறு 'பகீர்' என்னாதா? அண்ணன்மார்கள் போன வழியே இவனும் எங்கே போய் விடப்போகிறானோ என்ற பயம் அவர்களுக்கு உண்டாகிவிட்டது. நல்ல பணக்கார வக்கீலான ராமசாமி ஐயர், கோர்ட்டுக்குக்கூடப் போகாமல், மகனுடைய தலைமாட்டிலே உட்கார்ந்து கொண்டார். தாய் கால்மாட்டில் உட்கார்ந்துகொண்டு, "அப்பா! உனக்கு இப்படி என்னவோ வந்துடுத்தேடா, கண்ணு!" என்று புலம்பினள்.

ரமணி ஐந்து நிமிஷத்துக்கொரு முறை, "ஐயோ! அம்மா! அப்பா!" என்று கத்திக்கொண்டேயிருந்தான்.

"அடே, நம் நாட்டு வைத்தியர் சொக்கலிங்கத்தைக் கூட்டிக் கொண்டு வா. போ, சீக்கிரம்" என்று வேலையாளுக்குக் கட்டளையிட்டார் ராமசாமி ஐயர்.

சொக்கலிங்க வைத்தியர் ஓடோடி வந்து, ரமணியின் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு, "பித்தம் அதிகமாகித் தலைக்கேறி விட்டது. அதனால்தான் தலைவலி. உடனே சிகிச்சை செய்யத் தவறினால், கூடிய சீக்கிரம் பைத்தியம் பிடித்துவிடும். நான் ஒரு லேகியம் செய்து தருகிறேன். அதை ஒரு மண்டலம் வரை சாப்பிட்டு வந்தால், சரியாய்ப் போய்விடும்" என்றார்.

லேகியம் செய்ய ஐந்து ரூபாய் அச்சாரம் வாங்கிக்கொண்டு புறப்பட்டார் சொக்கலிங்கம்.

அவர் போன பிறகு, நாகம்மாள் தன் கணவனை நோக்கி, "இவர் எப்பொழுது கொண்டு வருவாரோ லேகியம்; யார் கண்டது? நாளைக்குக்கொண்டு வருவாரானால், அது வரை குழந்தை தலைவலியால் தவித்துக்கொண்டு கிடப்பதா? லேகியம் வருகிறபோது வரட்டும். அதற்குள் நமக்குக் குத்தகையாகத் தான் இருக்கிறாரே டாக்டர் விசுவம், அவரைக் கூப்பிட்டுக் காண்பிக்கிறதுதானே?" என்றாள்.

அதுவும் சரியான யோசனை தான் என்று ராமசாமி ஐயருக்குத் தோன்றிற்று. உடனே வேலைக்காரனை விட்டு, டாக்டர் விசுவத்தைக் கையோடு அழைத்து வரச் சொன்னார்.

டாக்டர் வந்து சேர்ந்தார். பையன் கையைப் பிடித்துப் பார்த்த அவர், "ஆஹா! இதுவா? இப்பொழுது இந்த வியாதி எங்கும் சாதாரணமாகக் காணப்படுவதாயிற்றே! இது முதலில் தலைவலியகா ஆரம்பமாகும். பிறகு மூளைக் கொதிப்பை உண்டாக்கி, அதன் பிறகு மூளையையே தின்று விடுமே! இதை இப்போதே தடுக்காமல் போனால், ஆள் பிழைப்பதே அபூர்வம். நல்ல வேளையாக, நீங்கள் என்னைச் சட்டென்று கூப்பிட்டீர்கள்" என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தார்.

இதைக் கேட்டதும் ராமசாமி ஐயருக்குத் தூக்கிவாரிப் போட்

டது: "இதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

"இவன் பத்து இஞ்ஜெக்ஷன் எடுத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொன்றுக்கும் ஐந்து ரூபாய்க்கு மேல் ஆகாது" என்றார் டாக்டர்.

ராமசாமி ஐயர் உடனே பர்ஸிலிருந்து இருபத்தைந்து ரூபாயை எடுத்து டாக்டரிடம் முன்பணமாய்க் கொடுத்தார். டாக்டர் மருந்து வாங்கிவரக் கிளம்பினார்.

அப்பொழுது தற்செயலாக ராமசாமி ஐயருடைய நண்பரான பல் வைத்தியர் அங்கே வந்தார்.

அவர் தாமாகவே சிரத்தை எடுத்துக்கொண்டு ரமணியின் வாயைத் திறந்து பார்த்துவிட்டு, "பார்த்தீர்களா! இவனுக்கு இரண்டு சொத்தைப் பற்கள் இருக்கின்றன. அதனால்தான் இந்தத் தலைவலி வந்திருக்கிறது. அந்த இரண்டு பற்களையும் பிடுங்கிவிட்டால், தலைவலி பறந்தோடிவிடும்" என்றார்.

இதைப்பற்றி ஐயர் யோசித்து முடிக்குமுன், அவருடைய இன்னொரு சிநேகிதரான கண் வைத்தியர் வந்தார்.

ரமணியின் கண் இமைகளையும் விழிகளையும் அவர் பார்த்துவிட்டு, "இவனுக்குக் கண்ணில் கோளாறு இருக்கிறது, ஸார். அதனால்தான் தலைவலி வந்திருக்கிறது. கண்களுக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டால், தலைவலி அப்புறம் வரவே வராது" என்று சொன்னார்.

இச் சமயம் அவர்கள் வீட்டுப் புரோகிதரும் பிரபல ஜோசியருமான அப்பா தீட்சிதர் அகஸ்மாத்தாய் வந்து சேர்ந்தார்.

"எங்கே, பையன் ஜாதகத்தை எடுங்கள் பார்க்கலாம்" என்றார் ஜோசியர்.

ஜாதகம் வந்ததும், ஜோசியர் அதை அப்படியும் இப்படியும் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு, "இவனுக்கு இப்பொழுது கிரஹம் போராது. இதற்கு ஏதாவது சாந்தி பண்ணாமலிருந்தால், இன்னும் இரண்டு வருஷம் ஆறு மாசம் நாலு நாளைக்கு இதே ரீதியாகத்தான் இருக்கும்" என்று ஒரு போடு போட்டார்.

"என்ன சாந்தி பண்ண வேண்டுமோ?" என்று கேட்டார் கலவரம் அடைந்த தகப்பனார்.

"பிரமாதமொன்றுமில்லை. ஒரு வாரம் வரை தொடர்ச்சியாகத் தினமும் மத்தியானம், இரவு இரண்டு வேளைகளிலும் ஐந்து பிராமணர்களுக்குச் சாப்பாடு போடவேண்டும். வார முடிவில் பிராமணர்கள் ஒவ்வொருவருக்கும் மூடியோடு கூடிய வெள்ளிக் கூஜா ஒன்று தானம் செய்துவிடுங்கள். அவ்வளவுதான். அவன் பீடை அதோடு ஒழியும்" என்று சரடுவிட்டார் தீட்சிதர்.

"ஐயோ! ஒவ்வொருவரும் ஒவ்வொன்று சொல்லுகிறார்களே. இது என்ன வியாதி என்றே பிடிபடவில்லையே, என்ன செய்வது?" என்று ராமசாமி ஐயர் வருத்தத்துடன் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே, கடிகாரம் மணி ஆறு அடித்தது.

"சரி. இருட்டுகிற வேளையாகிவிட்டது. நான் கோவிலுக்குப் போய், நெய்த்தீபம் போட்டுவிட்டுக் கடவுளை வேண்டிக்கொண்டு வருகிறேன். நீ அதுவரையில் அங்கண்டை இங்கண்டை போகாமல், குழந்தையின் பக்கத்திலேயே இரு" என்று தன் மனைவியிடம் சொல்லிவிட்டு, மற்றவர்களுடன் ராமசாமி ஐயர் வெளியே புறப்பட்டார்.

அவர்கள் அனைவரும் போனதும் நாகம்மாள் தன் அருமை மகன் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு, "ரமணி! கண்ணே! உனக்கு உடம்பை என்னடா பண்ணுகிறது? நான் அம்மா கேட்கிறேனே, என்னிடம் சொல்ல மாட்டாயா?" என்று உருக்கமாய் வினவினாள்.

காலை முதல் இதுவரையில் கண்களை இறுக மூடிக்கொண்டேயிருந்த ரமணி, இப்பொழுது மெதுவாகக் கண்ணைத் திறந்தான். சுற்றிலும் ஒரு முறை பார்த்தான். பிறகு, "அம்மா! இங்கே வந்தவர்களெல்லாம் போய்விட்டார்களா? ஏ அப்பா! என்ன பயமுறுத்திவிட்டார்கள்!" என்றான்.

"பயப்படாதேடா, கண்ணே! நான் இருக்கும்போது உனக்கென்ன பயம்?" என்று தேற்றினாள் தாயார்.

"உண்மையில்......எனக்கு...... உடம்பு......ஒண்ணு......மில்லையம்மா" என்று மெதுவாக இழுத்தாற்போல் கூறினான் ரமணி.

"என்ன? ஒண்ணு மில்லையா? நாட்டு வைத்தியர் சொன்னது சரிதான்போலே யிருக்கிறது. பித்தம் தான் தலைக்கேறிப் போச்சு" என்றாள் நாகம்மாள்.

"எனக்குத் தலைவலியு மில்லை; கால்வலியு மில்லையம்மா" என்றான் ரமணி மறுபடியும்.

ஜன்னி கண்டுதான் பிதற்றுகிறான் என்று பயந்த தாயார், "என்னடா, உளறிக்கொண்டே இருக்கிறாயே! இத்தனை டாக்டர்கள், வைத்தியர்கள், ஜோஸ்யாளுக்கெல்லாம் தெரியாதது உனக்குத் தெரிஞ்சுடுத்தோடா! பினத்தாதே. பேசாமல் படுத்துக் கோடா, கண்ணு!" என்றாள்.

"இல்லையம்மா. நான் நிஜத்தைத் தான் சொல்றேன். எங்க வாத்தியார் இன்னிக்கு எங்களுக்கு இங்கிலீஷ் பாடத்தில் ஒரு பரீட்சை நடத்தப் போவதாகச் சொன்னார். நான் இன்னும் ஒரு பாடம்கூடப் படிக்கவில்லை. அதனால், பள்ளிக்கூடத்துக்குப் போகாமலிருப்பதற்காகத்தான் தலைவலி யென்று பொய் சொன்னேன்" என்றான் ரமணி.

"அட தடிப்பயலே! இதை முன்னாலேயே சொல்லி யிருக்கப்படாதோ? தலைவலி யென்று சொல்லி வீட்டை ஒரே அமர்க்களப் படுத்திவிட்டாயே" என்று கேட்டாள் நாகம்மாள்.

"நான் அப்பவே சொல்லி யிருப்பேன், அம்மா! ஆனால், அப்பா இன்னி முழுக்க என் பக்கத்தை விட்டு அசைய மாட்டேன்னுட்டாளே. நான் நிஜத்தைச் சொல்லி யிருந்தேன்னா ரெண்டு உதை கொடுத்து, 'போடா பள்ளிக்கூடத்துக்கு' இன்னு என்னைத் துரத்தி யிருப்பா. அதனால்தான் அப்பா இங்கே இருக்கிறவரைக்கும் நான் கண்ணையும் திறக்கல்லே; நிஜத்தையும் சொல்லல்லே" என்றான் ரமணி!

ரஸிகத்துவம் கல்விமானுக்கு அழகு. மனோதர்மம் கலைஞனுக்கு அழகு. ராகத் துவேஷமற்ற சமநிலை, பரிபக்குவமடைந்த மனிதனுக் கழகு.


Bengal
for
BETTER
LIGHT
BENGAL

சுதேசி மாளிகை

பட்டுப் பட்டாடைகள், தோத்திகள், சீட்டி, வாயில் ரகங்கள், உல்லன் ட்வீட், பிளானல் தினுசுகள், இன்னும் எண்ணி லடங்காத சுதேசி, பட்டு, நூல் கம்பளி தினுசுகள், சில்லறை சாமான்கள் யாவும் அடங்கிய மிகப் பெரிய சுதேசி ஸ்டோர்

★

உயர்ந்த ரகம், குறைந்த விலை; இவைகளுக்கு உத்திரவாதமும் நாணயமும் நம்பிக்கையும் பொருந்திய இடம்

★

சென்னையில் முதலில் தோன்றிய ஒரிஜனல் — சுதேசி ஸ்டோர் — கலப்பற்ற சுத்த சுதேசிச் சாமான்களுக்குப் பெயர் பெற்ற இடம் இதுவே

சு தே சி

விலாசத்தைக் கவனியுங்கள்

ஜெனரல் சுதேசீஸ்

லிமிடெட்

(ஹைகோர்ட்டுக்கு எதிர்)

368, எஸ்பிளனேட், சென்னை

"ரிடா"

தலை வழுக்கை மயிர் உதிர்தல் முதலியவைகளைத் தடுத்து, அடர்த்தியாக மயிரை வளரச் செய்வதற்கு இன்றியமையாததோர் உயரிய தைலம்.

உங்கள் மனதைக் கவர்ந்த உயர்ந்த சினிமா நடி D. சூர்யகுமாரியின் உன்னத அபிப்பிராயம்

"நான் ரிடாவை மூன்று நான்கு மாதங்களாக உபயோகித்து வருகிறேன். "ரிடா" உடம்பிற்கும், மூளைக்கும் குளுமையையும், மனோரம்யமான வாசனையையும் கொடுக்கிறது. ஆதலால் நான் என் வாழ்நாள் முழுவதும் "ரிடா" வையே உபயோகிப்பதெனத் தீர்மானித்துளேன். நான் என் மனப்பூர்வமாக என் சகோதரிகளை வேண்டுவதென்னவெனில் எல்லோரும் ரிடாவையே உபயோகிக்கவேண்டும்."

"ரிடா"

அடர்ந்து கருத்த மிருதுவான பளபளப்புடன் கூடிய கேசத்தை வளரச் செய்கிறது.

புட்டிவிலை 12 அணாக்கள்தான், எங்கும் கிடைக்கும்

விடோ கம்பெனி,

131, பிராட்வே, மதராஸ்

இதுதான் முஸ்லீம் லீக்

(எட்வர்டு தாம்ஸன்)

[சிறந்த சரித்திராசிரியர் என்று புகழ்பெற்றிருக்கும் ஆங்கிலேயர் எட்வர்டு தாம்ஸன். அவர் இந்திய அரசியல் பிரச்னையின் பற்பல அம்சங்களையும் விளக்கி ஓர் அற்புதமான புஸ்தகம் எழுதியிருக்கிறார். 'சுதந்திரத்துக்கு இந்திய ஆதரவைப் பெறுங்கள்' என்று அதற்குப் பேயர். விக்டர் கோலாங்ஸ் கம்பெனியாரின் 'வெற்றி நூல்கள்' என்ற வரிசையில் 5-ஆவது புஸ்தகம் அது. சிற்சில இடங்களில் ஆசிரியர் அபிப்பிராயத்துக்கு நாம் மாறுபடவேண்டியிருந்தாலும், பொதுவாக, இந்தியப் பிரச்னைகளைக் கூர்ந்த ஆராய்ச்சியுடன் அவர் அருமையாய் விளக்கியிருக்கிறார். இந்தப் பிரசித்தமான நூலின் ஒரு பகுதி முஸ்லீம் லீக்கைப் பற்றி அலசியிருக்கிறது.]

இந்துக்களும் முஸ்லீம்களும் ஒரே ரத்தம் உடையவர்கள். அவர்களுக்குள் 'ஒருவர் வாழ்க்கை முறைகளை மற்றவர் நன்கறிவார்கள்.' நாமோ இந்தியாவில் இன்றைக்கிருந்துவிட்டு நாளைக்கு ஓடி வருபவர்கள்; நாம் அவர்களை நன்கறியோம். பரஸ்பரம் ஒற்றுமை கொள்ளத்தக்க ஒரு பாலத்தை எற்கனவே அவர்கள் கண்டுபிடித்திருந்தார்கள்; மறுபடியும் ஒரு நாள் அதைக் கண்டுபிடித்துக் கொள்ளவும் செய்வார்கள். இந்தியாவிலே, 'இரண்டு தேசங்கள்' இருப்பதாகச் சொல்லும் மிஸ்டர் ஜின்னாவின் தாய்ப் பாஷை, மிஸ்டர் காந்தியின் தாய்ப் பாஷைதான் — கூர்ஜர பாஷை. ஒரு காலத்தில் மிஸ்டர் ஜின்னாவும் ஒரு காங்கிரஸ்காரராகவே யிருந்தார்.

முதல் வட்டமேஜை மகாநாடு நடந்தபோது, உடனே இந்தியாவின் அரசியல் சுதந்திர அந்தஸ்தை பிரிட்டன் ஒப்புக்கொண்டுவிட வேண்டும் என்று மிக உக்ரமாய்க் கோரியவர் மிஸ்டர் ஜின்னாதான். அப்போது ஓர் அமெரிக்கப் பத்திரிகை நிருபர் அடைந்த பரபரப்பு எனக்கு ஞாபகம் வருகிறது. அந்த நிருபர் ஓட்டமாய் ஓடிக்கொண்டு, "இங்கிலாந்தை நான் ஒரு கலக்குக் கலக்கப் போகிறேன். இந்தியாவின் ஐக்கியக் கோரிக்கையை ஜின்னா எடுத்துக் கூறிவிட்டார்; உங்கள் பிரதம மந்திரியோ ஒரு வார்த்தையும் அதற்குப் பதில் அளிக்கவில்லை" என்று என்னிடம் கூச்சலிட்டார்.

சென்ற (1939-ஆம் வரு) அக்டோபரில் மிஸ்டர் ஜின்னாவுடன் நான் சம்பாஷித்தேன்.

நான்: "மிஸ்டர் ஜின்னா! இரண்டு 'தேசங்களா?' ஒவ்வொரு மாகாணத்திலும், ஒவ்வொரு நகரிலும், ஒவ்வொரு ஊரிலும் எதிரும் புதிருமாய் நின்று உறுமும் இரண்டு 'தேசங்களா?'"

ஜின்னா: "ஆம். அப்படித்தான்."

நான்: "மிஸ்டர் ஜின்னா! அது ரொம்பப் பயங்கரமான பரிகாரமாயிற்றே!"

ஜின்னா: "பயங்கரமான பரிகாரந்தான். ஆனால், இந்த ஒரே ஒரு பரிகாரந்தான் உண்டு."

இப்படித்தான் பல பிரிட்டிஷ் அரசியல் வாதிகளும் பொது ஜன ஊழியர்களும் நினைக்கிறார்கள். நான் அதை நம்பவில்லை; அதன் தோழனான 'பாகிஸ்தா'னையும் நம்பவில்லை.

முஸ்லீம் லீக் ஆரம்பமானது 1906-ஆம் வரு டிசம்பர்மீ 30உ. அப்போது இந்தியத்தேசியக் காங்கிரஸ் ஹிந்து ஸ்தாபனமாயிருந்தது. திலகர், லாலா லஜபதிராய் முதலிய தலைவர்களின் புகழ் உச்சயாயிருந்தது. இதனால் முஸ்லீம்களுக்குச் சந்தேகம் உண்டானது இயற்கை. என்றாலுங்கூட, பல வருஷகாலம் வரை, லீக்கும் காங்கிரஸும் தங்கள் வருஷாந்திர மகா நாடுகளை ஒரே இடத்தில் ஒரே காலத்தில் நடத்தி வந்தன. இரண்டிலும் நீங்கள் அங்கத்தினராயிருக்கலாம்; இரண்டு மகாநாடுகளுக்கும் போகலாம். லீக்கும் காங்கிரஸும் ஒரே நலன்களை விரும்பின; ஒரே விதமான தீர்மானங்களைச் சர்க்காருக்கு அனுப்பி வந்தன.



முஸ்லீம் லீக்கின் நிரந்தரத் தலைவர் ஜனாப் ஜின்னா

1916-ஆம் வரு 'மாண்ட்-போர்டு' சீர்திருத்தத் திட்டம் தயாராகிக் கொண்டிருந்தது. அப்போது லீக்கும் காங்கிரஸும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. அதுதான் லக்னௌ ஒப்பந்தம் என்பது. உத்தியோகங்களிலும் சட்டசபைகளிலும் முஸ்லீம்களின் விகிதாசாரம் எவ்வளவு என்று அதில் நிர்ணயிக்கப்பட்டது. துரதிர்ஷ்ட வசமாக, வகுப்புத் தொகுதிகளுக்கும் காங்கிரஸ் சம்மதித்தது. வகுப்புத் தொகுதிகள் ஏற்பட்டதால், வகுப்பு வெறியர்களின் கைக்கு அதிகாரம் போகத் தொடங்கியது.

சென்ற மகா யுத்தத்துக்குப் பிறகு, காந்தி தமது வாழ்க்கையிலேயே ஒரு பெரிய தவறைச் செய்தார். துருக்கி சுல்தானின் சார்பாக, கிலாபத் கிளர்ச்சியை அவர் கைக்கொண்டதே அந்தத் தவறு. உடனே முஸ்லீம்கள் திரள் திரளாகக் காங்கிரஸில் சேர்ந்தார்கள். லீக் தலைவர்களும் காங்கிரஸ் தலைவர்களும் சேர்ந்துழைத்தார்கள். காந்தியும் இரு அலி சகோதரர்களும் நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். ஆனால், துருக்கியோ, இஸ்லாத்தைக் கைவிட்டது; தானே கிலாபத்தை நிரா

கரித்துவிட்டது. இந்திய முஸ்லீம்கள் சோர்ந்து போனார்கள்; ஏக்கமுற்றார்கள். ஷின்பீனரைப் போல, 'நமக்குதவி நாமே' என்ற மனோபாவம் கொண்டார்கள். காங்கிரஸ், லீக் உறவுகள் வரவர மோசமாகி வந்தன.

இன்று அந்த உறவுகள் கேவலமாய்த்தான் இருக்கின்றன. ஆனால், இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் உள்ள தொடர்புகள், முன்னெப்பொழுதையும் விட இப்போது மகா மோசமா யிருப்பதாகச் சிலர் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே, அது மட்டில் சுத்த அபத்தமாகும். அப்படிச் சொல்லுகிறவர்களுக்கு நேற்றுத்தான் இந்தியாவைப்பற்றித் தெரியும். கலகங்களுக்கெல்லாம் காங்கிரஸ்மீது இவர்கள் பழி சுமத்துகிறார்கள். ஆனால், மிக மோசமான கலகம் எது தெரியுமோ? லக்னௌவில் முஸ்லீம்களுக்குள்ளேயே நடந்த ஷியா-ஸுன்னி கலகம் தான் மிக மோசமானது. பத்து வருஷங்களுக்கு முன்னே கல்கத்தாவிலும் கான்பூரிலும் நடந்த கடும் சண்டையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இன்றையக் கலகங்கள் வெறும் தெருக் 'கலாட்டா'க்களே யாகும்.

காங்கிரஸின் அங்கத்தினர் சந்தா நாலணா. அதனுடன் போட்டியிட்டு, அதைவிட மலிவாய் லீக் இப்பொழுது அங்கத்தினர் சந்தாவை இரண்டணாவாக வைத்திருக்கிறது. லீக்கிலே ஏராளமான அங்கத்தினர்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள். ஆனால், அது எவ்வளவு ஏராளம் என்பதை அறிந்த ஆசாமி எவரும் எனக்குத் தென்படவில்லை. லீக்கிலுள்ள முஸ்லீம்களைவிட இன்னும் அதிகமான முஸ்லீம்கள் தனக்கு அங்கத்தினர்களாய் இருப்பதாகக் காங்கிரஸ் பாத்தியம் கொண்டாடுகிறது. காங்கிரஸிலே பல லட்சக் கணக்கான முஸ்லீம்கள் அங்கத்தினர்களா யிருக்கிறார்கள்.

1937-ஆம் ௵ தேர்தலுக்குப் பிறகு, ஒரே ஒரு மாகாணத்தில் கூட, மந்திரி சபை அமைக்க, முஸ்லீம் லீக்கால் முடியவில்லை.

முஸ்லீம்கள் பெரும்பான்மையா யிருக்கும் நான்கு மாகாணங்களையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் நூற்றுக்கு 6½ விகிதம் தான் ஹிந்துக்கள் இருக்கிறார்கள். என்றாலும், அங்கே காங்கிரஸ் முஸ்லீம் சர்க்காரே ஏற்பட்டிருந்தது.

சிந்துவில் சுயேச்சை முஸ்லீம்களின் சர்க்கார் ஏற்பட்டது. அதற்கும் காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கும் மிகுந்த நட்பு இருந்து வந்தது.

பஞ்சாப்பில் முஸ்லீம் பிரதம மந்திரி யிருக்கிறார். ஆனால், அவருடைய மந்திரி சபையில் சீக்கியரும் இந்துக்களும் இருக்கிறார்கள்; கூட்டு மந்திரிசபை. பஞ்சாப் மாகாணம் ஒன்றில்தான் காங்கிரஸ் சற்றுப் பலவீனமா யிருக்கிறது. அவ்விதமிருந்தும், அங்கே முஸ்லீம் லீக் ஒரே ஒரு ஸ்தானத்தைத்தான் தேர்தலில் வெல்ல முடிந்தது. சிந்துவிலும் வடமேற்கு எல்லைப் புறத்திலும் 'அவ்வளவு வெற்றிகூடக் கிடைக்கவில்லை!'

வங்காளத்தில், மற்றெந்தக் கட்சியையும்விட மிக அதிக ஸ்தானங்கள் பெற்றிருப்பது காங்கிரஸ் தான். 50 ஸ்தானங்களைக் காங்கிரஸ் கைப்பற்றியது. முஸ்லீம் லீக் 40 ஸ்தானங்களைக் கைப்பற்றியது. சுயேச்சை முஸ்லீம்கள் 78 பேர்; அவர்களில் 38 பேர் பிரஜா கட்சியைச் சேர்ந்தவர்கள். தற்போதைய வங்காளப் பிரதம மந்திரி அப்போது (அதாவது 1937-ஆம் ௵) காங்கிரஸ்காரராய்த்தான் இருந்தார்; காங்கிரஸ் கூட்டு மந்திரி சபையில் பதவி வகிக்கவும் விருப்பமா யிருந்தார். ஆனால், கூட்டு மந்திரி சபைகள் அமைக்க, அப்பொழுது காங்கிரஸுக்குச் சம்மதமில்லை. ஆகையால், அவர் லீக்கில் சேர்ந்துவிட்டார். வேறு பல முஸ்லீம்களும் அவரைப் பின்பற்றி விட்டார்கள். 25 ஐரோப்பிய அங்கத்தினர்கள் தம் சர்க்கரை ஆதரிப்பதால்தான், வங்காளப் பிரதமர் இன்று அதிகாரத்தை வகித்திருக்கிறார். பலத்த முஸ்லீம் கோஷ்டியொன்று அவருக்கு விரோதமான எதிர்க் கட்சியாக இருந்து வருகிறது.

இவையெல்லாம் மாகாண சர்க்கார்களைப்பற்றிய சங்கதிகள்.

இனி ஜனத்தொகையைப் பார்ப்போம். அகில இந்தியாவிலும் முஸ்லீம் ஜனத்தொகையில் 20 சதவிகிதம் ஷியாக்கள். அவர்களெல்லாம் காங்கிரஸை ஆதரிப்பவர்கள். மோமின் சபை, அஹ்ரார் சபை ஜமியத் உல் உலிமா என்ற செல்வாக்கு மிக்க மூன்று முஸ்லீம் ஸ்தாபனங்களும் காங்கிரஸை ஆதரிக்கின்றன. தற்போது காங்கிரஸ் தலைவரா யிருக்கும் மௌலானா அபுல்கலாம் ஆஜாத் முஸ்லீம் மதக் கிரந்தங்களில் ஒரு பண்டிதர். பெரிதும் மதிக்கப்படுபவர். நபிநாயகம் அவதரித்த நாட்டிலேயே இவரும் பிறந்தார். இது இந்திய முஸ்லீம்களுக்குள்ளே எல்லாரும் பெறக்கூடிய பாக்கியமல்ல; அபூர்வமாகும். அரபு, பாரசீகம் இரண்டிலும் பிரசித்தமான வித்வான். அருமையான பிரசங்கி. அவருடைய நடையழகைக் கண்டு வியக்காதவரில்லை. ஷியா-ஸுன்னித் தகரார்களில் பல சமயம் அவர் சமரசம் செய்து வைத்திருக்கிறார். இத், பக்ரீத் இரு பண்டிகைகளிலும் முக்கிய மசூதிகளில் பிரசங்கம் செய்ய, பொறுக்கி யெடுத்த சிறந்த பிரசங்கி யென்று, அவரைக் கூப்பிடுகிறார்கள்.

முஸ்லீம் கலாசாரத்தைப் பற்றிப் பேசினால், அதற்கு மிகச் சிறந்த உதாரணம் உங்களுக்கு எங்கே கிடைக்கிறது? இந்தியாவுக்குள்ளேயே மிகச் சிறந்தவர் வேண்டுமென்றால், தேசியக் காங்கிரஸுக்குத் தலைமை வகிக்கும் மௌலானாவையும், பிறப்பிலே ஹிந்துவான ஸர் டெஜ் பகதூர் சப்ரூவையும் நீங்கள் சேர்த்துக் கொள்ளவேண்டியதுதான்.

குடியேற்ற நாட்டந்தஸ்து அளிப்பதாய் பிரிட்டன் அளித்த வாக்குத் தத்தம் இப்போது மிகப் பழசாய்ப் போய்விட்டது. அந்த வாக்குத் தத்தத்தை நிறைவேற்ற முயலும் எந்த முயற்சியையும் ஊழூழிகாலம் வரை மறுத்துவிடும் உரிமை முஸ்லீம் லீக்குக்கு ஏன் இருக்கவேண்டும்?

ஒரு பிரபலஸ்தர் தமது மகனுக்கு எழுதிய கடிதம்: "உலகத்திலுள்ள ஜனங்களை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம: செயல் புரிபவர்கள் ஒரு கோஷ்டி; அந்த கௌரவத்தை அடித்துக்கொண்டு போகிறவர் மற்றொரு கோஷ்டி. முதல் கோஷ்டியில் சேரவே நீ முயலவேண்டும். ஏனெனில், அதில்தான் போட்டி மிகவும் சொற்பம்."

சிறையில் தலைவர்கள்

[டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார்]

திருச்சிச் சிறையில் எல்லோரும் அவரவர்களது சுபாவத்துக்கேற்ப நல்ல முறையிலேயே காலத்தைக் கழித்து வந்தார்கள். தலைவர் ராஜகோபாலாச்சாரியார் இந்த வயது முதிர்ந்த காலத்திலும் தமது நேரத்தைக் கழித்து வந்த முறை ஆச்சரியமாயிருந்தது. ஓயாமல் ஏதாவது வகுப்புகள் நடத்திக் கொண்டேயிருப்பார். காலைச் சிற்றுண்டிக்குப்பிறகு வால்மீகி ராமாயணத்துடன் அவருடைய வகுப்புக்கள் ஆரம்பமாகும். அதற்குப் பிறகு கீதை. மத்தியானத்தில் ஷேக்ஸ்பியர். அதற்குமேல் திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற தமிழ் நூல்கள். இரவில் உபநிஷதங்கள் அல்லது சாகுந்தலம் போன்ற நூல்கள். இதற்கு மத்தியில் ஓய்வு கிடைத்த நேரங்களில் நூல் நூற்பார். அவர் சமஸ்கிருதத்தில் பல நூல்கள் படித்ததன் பலனாக, சமஸ்கிருதம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று தூண்டப் பெற்றவர்கள் பலர். அவர் நடத்திய வகுப்புக்களில் பலர் கலந்துகொண்டு பயன் பெற்றார்கள்.

இவ்வளவு உழைப்பின் மத்தியிலும் அவர் உடம்பை நன்றாகவே வைத்துக்கொண்டிருந்தார். தமது உணவு முதலியவைகளைத் திட்டமாக வைத்துக்கொண்டிருந்ததன் காரணமாக, அவர் இடை ஏறாமலும் இறங்காமலும் ஒரே சீராயிருந்தது. நாள் முழுதும் வகுப்புக்கள் நடத்திய பின்பு, மாலையில் மிகுந்த களைப்பு உண்டாகும். "இவ்வளவு வகுப்புக்கள் வைத்துக் கொண்டு அலுப்பாக்கிக் கொள்வானேன்"? என்று யாராவது கேட்டால், "இப்படி நடப்பதே சந்தோஷமாய்ப் பொழுது போகிறது" என்று அவர் பதிலளிப்பார். எனினும், அவர் மனதிலும் சலிப்பிருந்தது. தேசத்தின் தற்கால நிலைமையைப்பற்றி அவர் நினைக்காமலிருக்க முடியுமா? அதுவே அவரது மனச்சலிப்புக்கு ஒரு காரணம் போதும்! ஒரு நாள் மாலையில் உலாத்துகையில், அவரும் நானும் பேசிக்கொண்டிருந்தோம். மிகக் களைத்திருப்பதாக அவர் தென்பட்டார். "சிறைக்கு வருவதற்கு இன்னும் பத்து வருஷம் இளமையாயிருக்கவேண்டும்" என்று, பேச்சின் மத்தியில் அவர் சொன்னார். அவருக்கு வயது இப்பொழுது அறுபத்திரண்டு. 1920-ஆம் வருஷத்திலிருந்து எவ்வளவு தரம் சிறைக்கு வந்தாகிவிட்டது! இன்னுமா அலுப்புத் தோன்றாமலிருக்கும்? ஆனால் எது வரினும் சந்தோஷத்துடன் ஏற்கும் சுபாவம் அவரிடத்திலிருக்கிறது. எனவே, சிறைச் சிரமங்கள் பலவற்றின் மத்தியிலும், அவை அனைத்தையும் சகித்துக் கொண்டு தமது வாழ்க்கையைச் சந்தோஷமாக அவர் நடத்துகிறார்.

ஸ்ரீ பிரகாசம் அவர்களுக்கு வயது அறுபத்தி ஒன்பது ஆகிறது. அவரும் ராஜாஜி மாதிரி பல வகுப்புக்கள் வைத்துக்கொண்டிருக்கிறார். தெலுங்கில் போத்தன்னா மகாபாரதம், தமிழில் கம்பராமாயணம் மாதிரி பிரசித்தி பெற்றதாம். அதையும், வேறு சில நூல்களையும் அவர் படித்துக் கொண்டிருந்தார். ஸ்ரீ ஆர். கே. நேரு அவர்களால் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட மின்சார சிகிச்சையில் பிரகாசத்துக்கு நிறைந்த நம்பிக்கையுண்டு. மோட்டார்க் காரிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறு மாக்னடோவைச் சிறைக்குள் அவர் கொண்டு வந்திருந்தார். அதனால் பல ரோகங்கள் குணமாகி, பலர் பயன் பெற்றனர். பல வருஷங்களாகத் தீராத கடிகளும் ஊறல்களும் அதன் மூலம் குறைந்தன. என் கழுத்திலிருந்த ஒரு கடியும் அதனால் கொஞ்சம் குணமாயிற்று. பெரிய பிளவை வந்த ஒருவர்கூட இதன் மூலம் குணமானார். தேள் கடியை இந்தச் சிகிச்சை உடனே கேட்கிறது. யார் வேண்டுமானாலும் எச்சமயத்திலும் அவரிடம் செல்லலாம். மிக அன்புடன் வரவேற்று, அவர்களுக்குச் சிகிச்சை செய்வார். சாதாரணக் கைதிகள் சென்றாலும் அதே அன்புடனும் பொறுமை யுடனும் அவர்களைக் கவனிக்கிறார். அதிகாலையில் சூரியன் கிளம்புவதற்கு முன்னும் இரவு சுமார் ஒன்பது மணிக்கும் தான் அவர் வெளியே வந்து உலாத்துவார். மற்ற நேரங்களில் தமது அறையில் அல்லது அதற்கு எதிரிலிருக்கும் மரத்தடியிலேயே இருப்பார்.

ஸ்ரீ மொகிதீன் மரைக்காயர் நகைச்சுவை நிரம்பியவர். அவர் உடலில் பல கோளாறுகள் இருந்தன. அதற்காகச் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கும் அவர் செல்லவேண்டியிருந்தது. ஆனால், இந்தத் தொந்தரவுகளின் மத்தியில் அவரது ஒவ்வொரு பேச்சும் செய்கையும் நகைச்சுவை நிரம்பியிருந்தது. அத்துடன் ஆடுவார், பாடுவார்; எப்பொழுதும் தம்மைச் சுற்றிலுமுள்ளவர்களைச் சிரித்த வண்ணமாய் வைத்திருப்பார். மட்டப் பாறை ஐயர் சதா நூற்றுக் கொண்டிருப்பார். ஒரு நாளைக்கு, சாதாரணமாக இரண்டு சிட்டம் வரை நூற்பார். அவருக்குத் தாலீம்கானா, குஸ்தி முதலிய விஷயங்களில் மிகுந்த உற்சாகம் உண்டு. தமிழ் நாடு முழுதும் தாலீம் கானாக்கள் ஏற்படுத்தி மக்கள் உடம்பைப் பலப்படுத்த வேண்டுமென்பது, என் மனதில் வெகு காலமாக இருக்

ராஜாஜிக்கு ஓயாத உழைப்பு, பிரகாசத்துக்கு மின்சார வைத்தியம், மரைக்காயருக்கு நகைப்பு, ஐயருக்கு ராட்டினம் இவைதான் சிறைத் துணைவர்கள். தமது சிறைவாஸத்திலே நேரில் கண்ட இந்த விஷயங்களைக் கட்டுரையாளர் விவரமாக வர்ணிக்கிறார்.

கும் ஆசைகளில் ஒன்று. இவ்விஷயத்தில் ஸ்ரீ மட்டப்பாறை ஐயர் மிகுந்த உற்சாகமுடையவராக இருந்தார்.

ஸ்ரீ தாக்கியப்பக் கவுண்டரை, எனக்குச் சென்னைக் காலேஜில் படித்துக் கொண்டிருந்த நாளிலிருந்து தெரியும். சிறையிலிருந்த எங்கள் அனைவருக்கும் வேண்டிய சாமான்களை வாங்கிக் கொடுப்பதற்கு அவர்தான் கருவியாயிருந்தார். அவரை எங்கள் வியாபார மந்திரி (Commerce Member) என்று நாங்கள் கண்ணியமாய் அழைப்பது வழக்கம். அவர் விடுதலையான பிறகு, ஸ்ரீ குமாரசாமி ராஜாவுக்கு இந்தப் பொறுப்பு வந்தது. ஸ்ரீ சொக்கலிங்கம் பிள்ளை கடலூர்ச் சிறைக்கு வந்தபோது 'காந்தி' என்ற காலணாப் பத்திரிகை ஆசிரியராக இருந்தார். இப்பொழுது 'தினமணி' ஆசிரியர். ஸ்ரீ வி. சி. பழனிசாமிக் கவுண்டரையும் ஸ்ரீ வி. கே. பழனிசாமிக் கவுண்டரையும் நான் அன்புடன் 'அண்ணு' என்றழைப்பேன். அவர்கள் இருவரும் உண்மையிலேயே என்னைத் தங்கள் இளஞ்சகோதரனாக நினைத்து அன்புடன் கவனித்து வந்தார்கள். உணவு விஷயங்களைக் கவனித்துத் தயார் செய்துகொள்வது என் பழக்கத்தில் இல்லை. இவர்களும் ஸ்ரீ தாக்கியப்பனும் இவ்விஷயத்தில் வேண்டுவன செய்து, என்னை அன்புடன் போஷித்து வந்தார்கள். இச்சிறையில் எங்களுடன் இருந்த சுமார் நூற்றெண்பது பேர்களையும் தனித் தனியாய் இங்கே குறிப்பிடுவது அசாத்தியம். எல்லோரும் அவரவர் துறையில் மேம்பாடு உடையவர்களாகவே காணப்பட்டார்கள். அவர்கள் பலருடன் நெருங்கிப் பழக, இது ஓர் அரிய சந்தர்ப்பமாயிருந்தது. கொஞ்ச காலத்தில் கூட்டம் அதிகமானதால், இக் கட்டிடங்கள் போதாமல் போயின. எனவே அருகாமையிலிருந்த குவாரன்டைனில் உள்ள தனி அறைகள், முகாம் சிறையிலிருந்த 'ஏ.' 'பி.' வகுப்புக் கைதிகளுக்கென ஒதுக்கப்பட்டன. சுமார் அறுபது பேர்கள் இங்கே வந்து குடியேறினோம். ஸ்ரீ வேதரத்தினம் பிள்ளை, தூத்துக்குடி ஸ்ரீ துரைசாமி நாடார், ஸ்ரீ கிருஷ்ணசாமி பாரதி, ஸ்ரீ நாகராஜ ஐயங்கார், நான் முதலியவர்கள் ஒரு வரிசையில் இருந்தோம். இங்கே வந்தது படிப்பு, பிரார்த்தனை முதலிய விஷயங்களுக்கு வசதியாக இருந்தது.

என் காலம் ஏகதேசம் பிரயோசனகரமாகவே கழிந்தது. குவாரன்டைனில் என் அறைக்கு அருகில் ஸ்ரீ கிருஷ்ணசாமி பாரதியிருந்தார். அவர் கம்பராமாயணத்தைச் சுவையுடன் படித்திருக்கிறார். அவருடன் சேர்ந்து கம்பராமாயணத்தைப் படித்தேன். கம்பர் எழுதியிருக்கிற பன்னிரண்டாயிரம் பாட்டுக்களையும் படிப்பது அசாத்தியமாக இருந்தது. ஸ்ரீ வி. பி. சுப்பிரமணிய முதலியார் கம்பராமாயண சாரம் என்ற தலைப்பில் ஒவ்வொரு காண்டத்திலும் ரசமான பாக்களைத் தொகுத்து, கதைத் தொடர்ச்சியையும் கொடுத்து எழுதியிருக்கிறார். இப் புத்தகங்கள் எங்களுக்குப் பெரிதும் உதவின. அவர் ஐந்து காண்டங்கள் தான் எழுதியிருக்கிறார். யுத்த காண்டத்தைப்பற்றி இப் படிப் புத்தகம் ஒன்றும் கிடைக்கவில்லை. கம்பர் எழுதியபடியே யுத்த காண்டத்தைப் படிக்க முயற்சி செய்தோம். ஆனால், காலம் போதாமையால் அதை முடிக்க முடியாமல் போயிற்று. கம்பராமாயணத்தை அதுவரை நான் படித்ததில்லை. அதைப் படிக்கப் படிக்க, அதிலிருந்து இன்பம் ஊற்றெடுத்துப் பெருகுகிறது. சில விடங்களில் நம்மை அறியாமல் நம் மனதில் உணர்ச்சி பொங்குகிறது. கம்பர் தீட்டும் எழுத்து ஓவியங்களை ஒருதரம் அனுபவித்தால், அவை எப்பொழுதும் நம் மனதை விட்டு அகலமாட்டா. நான் தமிழனாயிருந்தும் இதுவரை கம்பராமாயணத்தைப் படிக்காமல் போனது வெட்கமாயிருந்தது. அந்தக் குறை திருச்சிச் சிறையில் ஒருவாறு நீங்கிற்று.

போர்டு புனர்ஜன்மம் எடுத்தால்—

உலகப் பிரசித்தி பெற்ற மோட்டார் உற்பத்தி முதலாளியாகிய ஹென்ரி போர்டுக்குப் புனர்ஜன்மத்தில் பூரண நம்பிக்கை. ஏற்கனவே பல ஜன்மங்கள் தாம் எடுத்திருக்க வேண்டுமென்றும், இனியும் பல ஜன்மம் எடுக்கப் போவதாகவும் அவர் எண்ணுகிறார்.

அவரிடம் சென்று, ஜேம்ஸ்போன் என்ற நிருபர், "உங்களுடைய அடுத்த ஜன்மத்தில் நீங்கள் என்ன செய்வீர்கள்? மோட்டார்க் கார்கள் போன்ற பழம் பசலிப் பொருள்களை விட்டு, ஆகாய விமானங்களில்தானே கவனம் செலுத்துவீர்கள்?" என்று கேட்டார்.

போர்டு அளித்த பதிலாவது: "அதை நான் அறியேன். அடுத்த ஜன்மத்தில் நான் எப்படி யிருப்பேன் என்றே எனக்குத் தெரியாது. ஆனால், இப்போது எனக்கு வாய்த்துள்ள இதே மனைவியை அப்போதும் நான் பெறவேண்டும் என்ற ஒரே ஓர் ஆசை மாத்திரம் எனக்கு உண்டு."

* * *

மரத்தின் கிளை போல—

ஒரு கிளையிலிருந்து ஒரு கிளை வெட்டப்பட்டால் அது மரத்தினின்றும் வேறுபடும். அவ்வாறே ஒருவன் மற்றொருவனிடம் வெறுப்புக் கொண்டு வேறுபட்டானானால், உலகத்தினின்றும் வேறுபட்டவன் ஆவான். மரத்தின் கிளை வேறொருவனால் வெட்டப்படும். ஆனால், உலகத்தினின்றும் வேறுபடும் மனிதன் தன்னைத்தானே அறியாமல் வெட்டிக்கொள்கிறான். கிளை வேறுபடுவதற்கும் மனிதன் வேறுபடுவதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. வேறுபட்ட கிளை மறுபடியும் சேர முடியாது. மனிதன் வேறுபட்டால் மறுபடியும் சேரமுடியும். இது மனிதனுக்குத் தெய்வம் கொடுத்திருக்கும் சக்தி. ஆனால், அடிக்கடி பிரிந்து வேறுபட்டோமானால் மறுபடியும் கூடுவது கடினமாகும். தோட்டக்காரர்களைக் கேட்டால் சொல்லுவார்கள்: செடியில் பிறந்த கிளையின் குணம் வேறு, மரத்தோடு ஒட்டி வளர்ந்த கிளையின் குணம் வேறு. உலகத்தோருடைய மனோ பாவங்களும் என்னுடைய மனோ பாவங்களும் வேறுபட்டிருந்தாலும், அவர்களுடன் சேர்ந்து வாழ்வது என்னுடைய கடமை.

—மார்க்கஸ் ஒளரேலியஸ்

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கை கண்ட இந்திய மருந்து இதுவே. ஆயிரக் கணக்கானவர்கள் விற்கிறார்கள்.

அமிர்தாஞ்சனம் லிமிடெட்

மதராஸ் பம்பாய் கல்கத்தா



ஒவ்வொரு தடவை பல் துலக்கும்போதும் உங்கள் தேகம் பூராவுமே நன்மை பெறுகிறது, கமகமவென்று வாசனை வீசி ஆனந்தமாய் நுரை கொடுக்கும் பற்பசை இதோ இருக்கிறது. பற்களின் சிறு இடுக்குகளிலெல்லாம் புகுந்து, பல்லை அது பாலிஷ் செய்கிறது. மேலும், அயோடின சத்து அதில் இருப்பதால், அதை ஈறுகளும் வியர்வை உருப்புகளும் கிரகித்துக்கொண்டு நன்மை செய்கின்றன.

'அயோடின்' பல் வியாதிகளைப் போக்கடிக்கும் சக்தி டடையது. ஆகையால் 'ஐடோகால்' பற் பசை, ஃபயோரியா, ஸ்கார்புலா, கேடராக், காய்டர் முதலிய வியாதிக்காரர்களுக்கு அனுகூலம் செய்கிறது.

ஐடோகாலில் நமது முக்கிய அம்சர்களான (1) தைராய்ட் (2) அயோர்டா (3) லிவர் (4) வயிறு (5) முகஸ் மெம்ரேன் முதலியவைகளுக்கு அவசியமான அளவு அயோடின் சேர்ந்திருக்கிறது.

Idocol

AVAILABLE EVERYWHERE

Trade Enquiries to:—EZRA BROS. Mustafa Bldg., Sir P. Mehta Road, Bombay 1.

FAMOUS IN INDIA AND ON THE CONTINENT

Madras Stockists:—LOANE SQUARE PHARMACY
160, BROADWAY, MADRAS

சேலைகளுக்கு
— சிறந்த இடம் —

N. C. B.

—கார்னர் ஷாப்—

N. C. பாலுசாமி ஐயர் & சன்
86, நயினியப்ப நாய்க்கன் தெரு,
மதராஸ்.

CHROMECO AGENCY
NEXT TO GOKHALE HALL

எழுதுவதில் இணையற்றது
பார்க்கர் பேனா

கனி & சன்ஸ், மதராஸ்

யுத்தகால முதலீடுகள்!

★

யுத்தமும் அதன் விளைவான பொருளாதார நெருக்கடிகளும் அசாதாரண சம்பவங்கள் அல்ல. ஆனால், அவை மனித வர்க்க சரித்திரத்தில் தோன்றி மறையும் அம்சங்கள். அவை லைப் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியைப் பாதிக்க முடியாது. லைப் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியின் மதிப்பு ஸ்திரமானது; ரொக்கமாக மாற்றக் கூடியது; கடன் வாங்கவும் பொருத்தமானது; லாபம், வருமான வரி விலக்கு உண்டு; இதனால் யுத்த காலத்தில் மற்றெதிலும் முதல் போடுவதைவிட லைப் இன்ஷ்யூரன்ஸ் மிகச் சிறந்தது.

மனதில் அழுத்தமாகப் பதியும் புள்ளி விவரங்கள்

அமுலிலுள்ள பாலிஸிகள்	ரூ.	17 கோடிக்குமேல்		
லைப் பண்ட்	ரூ.	3 கோடி	10	லட்சத்துக்குமேல்
மொத்த ஆஸ்திகள்	ரூ.	3 „	56	„
செலுத்தப்பட்ட பாலிஸிகளின் மதிப்பு	ரூ.	1 „	97	„

போனஸ்
வருஷத்தில் 1000-க்கு

எண்டௌமெண்ட் அஷ்யூரன்ஸ்	ரூ. 18/-
முழு ஆயுள் அஷ்யூரன்ஸ்	ரூ. 15/-

சிறுகச்சிறுகத் திரண்டுள்ள ஏராளமான லைப் பண்டுகள், சிலாக்கியமான முறையில் உபயோகிக்கப்படும். ஆஸ்திகள் இந்தியா எங்கும் கிழக்கிலும் விஸ்தரிப்புள்ள, ஸ்தாபனம் உடைய **ஹிந்துஸ்தான்**, கடந்த காலத்திலும் இப்பொழுதும் எல்லா நெருக்கடிகளையும் வெற்றிகரமாகச் சமாளிக்கக்கூடிய சக்தி வாய்ந்ததாகும். அதன் பாலிஸிகள் பந்தோபஸ்தானவையாயும், சிலாக்கியமானவையாயும், லாபகரமானவையாயும்; ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்யக்கூடியவாறு பலதரப்பட்டதாகும்.

நம்பிக்கையான சேவைக்கு பிரக்யாதி வாய்ந்தது

ஹிந்துஸ்தான் கோவாப்பரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிமிடெட்

ஹெட் ஆபீஸ்:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
6-எ, சுரேந்திரநாத் பானர்ஜி ரோடு, கல்கத்தா

சென்னை பிராஞ்சு:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
107, அரண்மனைக்காரத் தெரு, சென்னை

தொடர் கதை :

ஆசிரியர் : சரத்சந்திர சட்டர்ஜி—மொழிபெயர்த்தவர் : ஆர். சண்முகசுந்தரம்

அத்தியாயம் 3

முதலில் எப்படி யிருந்தாலும், கொஞ்சகாலத்தில் காசிநாதன் ஜமீன்தார் வீட்டை விட்டு அப்பால் இப்பால் போகமுடியாத மாப்பிள்ளை ஆகிவிட்டான். தனது இந்த நிலையைக் கண்டதும், அவன் மனம் சந்தோஷத்தை இழந்தது. தான் இஷ்டப்பட்ட இடத்துக்கு இப்போது அவன் போக முடியாது; இஷ்டப்பட்ட இடத்தில் தங்கவும் முடியாது. சகல பொருள்களிலிருந்தும், அவன் ஒதுக்கிவைக்கப் பட்டிருந்தான். அவன் போக விரும்பும் இடத்துக்குப் போக, மாமனாரின் அனுமதி கிடைப்பதில்லை; அப்படிக் கிடைத்தாலும், "எனது மருமகன் என்ன—பலானவர்கள் வீட்டுக்கெல்லாம் போவதா?" என்று சலித்துக் கொண்டேதான் அவர் அனுமதி தருகிறார். பாவம்! மருமகன் மனமிடிந்து உட்கார்ந்து விடுவானே தவிர, எப்படிப் போவான்? இம்மாதிரி நிலைமை ஏன் உண்டாயிற்று? அவன் ஏன் இவ்விதம் வைக்கப்பட்டிருக்கிறான்? இப்படிச் செய்வதால், யாருக்கு என்ன திருப்தி? — அவனுக்கு இந்த ஒன்றுமே புரியவில்லை. "நான் என்ன சாதாரண மனிதனா, அங்குமிங்கும் சுற்றுவதற்கு?" என்று சில சமயங்களில் தனக்குத்தானே சமாதானப்படுத்திக் கொள்வான். ஆனால், உள்ளுக்குள்ளே அவனுடைய இதயம் "உனக்குச் சந்தோஷமில்லை; சாந்தியில்லை" என்று புலம்பும். முன்னே அவன் ஒரு முள்காட்டிலே தன் இஷ்டம்போல் சுற்றியலைந்து கொண்டிருந்தான்; இப்பொழுதோ ஒரு தங்கக் கூண்டிலே அடைபட்டிருக்கிறான். இதைக் காசிநாதன் உணரத் தலைப்பட்டான். முந்தி அவன் எல்லையற்ற பெருங்கடலிலே நீந்திக் கொண்டிருந்தான்; இப்பொழுதோ நாற்புறத்திலும் அரண் சூழ்ந்ததொரு புஷ்கரணியிலே அவனை விட்டிருக்கிறார்கள். அப்போது அவன் சமுத்திரத்திலே ரொம்பச் சுகமாக நீந்திக்கொண்டிருந்தான் என்பதில்லை—அங்கே அவனைப் புயலும் அலைகளும் வாட்டிக்கொண்டுதான் இருந்தன; ஆனாலும் இந்த நிர்மலமான புஷ்கரணி அதைவிடக் கஷ்டமாக இருக்கிறது. கொதிக்கும் வெந்நீர் அண்டா ஒன்றுக்குள்ளே தன்னை யாரோ தள்ளிவிட்டார்கள் என்று அவன் அடிக்கடி எண்ணுவான். எல்லோருமசேர்ந்து தன்னுடைய தேகத்தை விலைக்கு வாங்கிவிட்டது போலவும், இப்பொழுது அது தனக்குச் சொந்தமில்லைப் போலவும் அவனுக்குத் தோன்றியது. அவன் தலையிலே பழைய உச்சிக் குடுமியில்லை; கழுத்திலே அந்தத் துளசிமாலையுமில்லை. வெறுங்கால் இல்லை; வெறும் மேல் இல்லை. தனஞ்சய பட்டாசார்யாவின் பள்ளிக்கூடமில்லை. ஆற்றங்கரை அரசமரமில்லை. குடிசை வீட்டுக் கூடத்தின் அந்த மூலைகூட இல்லை—பழையது ஒன்றுமே இல்லை!

அவன் புனர் ஜன்மமெடுத்து முன் ஜன்மத்தின் சகல வஸ்துக்களையும் உதறி எறிந்து விட்டதைப் போலிருந்தது. அவனுடைய தேகம் மனம் இரண்டும் தங்களுக்குள்ளே சச்சரவிட்டுக் கொண்டு, தனித்தனியா யிருந்தன. சாயங்காலமானதும், அவன் மனம் ஆற்றங்கரையின் அரச மரத்தடியிலோ அல்லது அக்கம்பக்க வயல்களில் உள்ள குடியானவர்களையோ சுற்றிக்கொண்டிருக்கும்; தேகமோ அப்பொழுது விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்து, வண்டியிலே உல்லாச சவாரி செய்துகொண்டு காற்றுவாங்கும். மனம் கோவணத்தைக் கட்டிக் கொண்டு நதியில் குதித்து நீந்தும் போது, தேகம் அழகியதோர் ஆசனத்தில் அமர்ந்து, வேலைக்காரர்கள் சோப்பும் எண்ணெயும் தேய்த்துவிடக் குளித்துக் கொண்டிருக்கும். இவ்விதம் ஒரே காசிநாதன் எப்பொழுதும் இரண்டிடங்களில் இருவித வேலைகள் செய்து வந்தான். ஆனால், ஒரு வேலையும், அவனது உள்ளமும் உடலும் சேர்ந்த முழு ஜீவனுக்கும் அழகாயிருப்பதில்லை; பூர்த்தியடைவதுமில்லை.

அநேக நாட்கள் இவ்விதமே சென்றன. ஒவ்வொன்றாகப் பனிரண்டு மாதங்கள் கழிந்தன. முதலில் சில மாதங்கள் கஷ்டமாயில்லை. புதிய ஆனந்தத்தில், புது மோகத்தில், அவன் தனது நிலையைச் சரி தப்புப் பார்ப்பதற்கு அவகாசம் கிடைக்கவில்லை. ஆனால், அது கிடைத்தவுடன், நாளுக்கு நாள் வற்றத் தொடங்கினான். இந்த விஷயம் யாருக்கும் தெரியாது; ஆனால், கமலா அறிந்து கொண்டாள்.

அவளுடைய கண்கள் கணவனின் நிலையைக் கண்டுகொண்டன. ஒரு நாள் அவள், "நீங்கள் நாளுக்கு நாள் ஏன் இப்படி இளைத்துப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"யார் சொன்னது?"

"எனது கண் சொல்கிறது."

“உன் கண் பொய் சொல்கிறது.”

அப்புறமும் அவள் விடவில்லை: “விஷயம் என்ன, என்னிடம் சொல்லமாட்டீர்களா?” என்றாள்.

“ஒன்றுமில்லையே, என்ன சொல்லுவேன்?”

“ஒன்றுமில்லையா? ஏதோ நடந்திருக்கிறது; மறைக்கிறீர்கள்.”

“இல்லையே!”

“நிச்சயம் நடந்திருக்கிறது; என் மனதுக்கு எல்லாம் தெரியும்.”

காசிநாதன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, “நீ ரொம்பத் தொந்தரவு செய்கிறாய். நான் போகிறேன்” என்றான்.

அவன் போகத் தொடங்கவும், கமலா அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டாள். வியாகூலத்துடன், “போகக்கூடாது—நான் இனி ஒன்றும் கேட்கவில்லை” என்றாள்.

காசிநாதன் உட்கார்ந்துகொண்டான். ஆனால், அடுத்த கணமே மௌனமாய் எழுந்து போய் விட்டான். கமலாவும் அவனை மீண்டும் உட்காரச் சொல்லவில்லை. கணவன் சென்ற பிறகு, அவள் ஒரு கட்டிலில் சாய்ந்து, தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, தன்னந்தனியே அழ ஆரம்பித்தாள்.

வெளியில் சென்ற காசிநாதன் தன்னை எவரும் கவனிக்கவில்லை என்பதை நிச்சயப் படுத்திக் கொண்டு, மெள்ள மெள்ள வெளிக் கதவைத் தாண்டி, வீதியில் இறங்கி நடந்தான். வெகுதூரம் சென்ற பிறகு, தனக்குப் பின்னால் ஒரு தர்வான் வந்து கொண்டிருப்பதைக் கண்டான். காசிநாதன் மிகுந்த எரிச்சலுடன், “நீ எங்கே வருகிறாய்?” என்று தர்வானைக் கேட்டான். அவன் சலாம் செய்து, “எஜமானோடு” என்றான்.

“என்னோடு வரவேண்டியதில்லை—நீ திரும்பிப் போ.”

“மாலை நேரத்தில் துணை எவருமின்றி எஜமான் தனியாகவா உலாத்துவீர்கள்?”

ஒரு பதிலும் அளிக்காமல் காசிநாதன் மேலே நடந்தான். பாவம்! தர்வான் என்ன செய்வான்? அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. கடைசியாக, கொஞ்ச நேரம் நின்று தானாக யோசித்துப் பார்த்தான். “எஜமானோடுகூடப் போகத்தான் வேண்டும்” என்று தீர்மானித்துக் கொண்டு, தொடர்ந்து செல்லலானான். காசிநாதன் இதைக் கொஞ்சமும் கவனிக்கவில்லை. தன் இஷ்டப்படி நடந்து, தனது மாமாவின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். உள்ளே சென்று, துக்கத்தோடு தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டான். வெகுநேரம் வரையிலும் அப்படியே உட்கார்ந்து கொண்டிருந்தான். வெளியே உலாவக் கிளம்பிய ஹரி பாபு இவனைக் கண்டார். ஆனால், கொஞ்சம் இருட்டா யிருந்ததால், அவரால் இவனை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. கிட்ட வந்து, “யார்?” என்று கேட்டார்.

“நான் தான்” என்றான் காசிநாதன்.

ஹரி பாபுவுக்கு ரொம்ப ஆச்சரியமா யிருந்தது. “ஐ! சின்ன எஜமானர்! எங்கே இப்படி வந்தீர்கள்?” என்றார்.

காசிநாதன் மௌனம் சாதித்தான். அப்பொழுது ஹரி பாபு உரத்த குரலில், “அம்மா, பார்! இங்கே பார்! ஜமீன்தார் வீட்டுச் சின்ன எஜமானர் வந்திருக்கிறார்—அவர் உட்கார்வதற்கு யாரும் ஆசனம் கூடப் போடவில்லையே!” என்றார்.

ஹரியின் தாயார் ஓடிவந்தாள். “மகராஜனா யிரு, அப்பா! ஏழை மாமியின் நினைவு வந்ததா?” என்றாள்.

காசிநாதன் அப்பொழுதும் பேசாம லிருந்தான். பிறகு, மாமி தனது மகள் விந்து வாகினியைக் கூப்பிட்டு, “விந்து! ஜல்தியாக வா; பார், உன் காசி அண்ணா வந்திருக்கிறான். உட்கார்வதற்கு ஏதாவது கொண்டு வா—அதற்குள் நான் சாயங்கால ஜபம் செய்து விட்டு வருகிறேன்” என்றாள்.

விந்துவாகினி, மதுசூதன பட்டாசார்யாவின் கடைசிப் பெண். கட்டிக் கொடுத்ததற் கப்புறம் தாயார் வீட்டுக்கு அதிகமாக வருவதில்லை. இப்பொழுது அவள் வந்து ஒரு மாதம் ஆகிறது. ஆனால், இதுவரையிலும் காசி அண்ணாவை அவள் பார்க்கவில்லை. காசி அண்ணாவிடம் அவள் அதிக அன்புகொண்டிருந்தாள். ஆகையால், அண்ணாவின் பெயரைக் கேட்டதும், ஓட்டமாய் ஓடி வந்தாள். வந்து பார்க்கவே, காசி அண்ணாவைக் காணோம்—யாரோ ஒரு பாபு இருட்டிலே தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்! காசி அண்ணாவை இந்தக் கோலத்திலே அவள் ஒருபோதும் கண்டதில்லை! காசி அண்ணா இப்போது பெரிய மனிதர் வீட்டு மாப்பிள்ளையாகி யிருக்கிறார்; ‘பாபு’ ஆகி யிருக்கிறார். இதைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால், இருட்டில் உட்கார்ந்திருக்கும் அண்ணாவின் அருகில் சென்று அவரது தேங்கிய முகத்தைக் கண்டதும், அவளுடைய சிரிப்பு பறந்து விட்டது.

காசிநாதனின் முகம் கறுத்திருப்பதை, விந்துவைத் தவிர, வேறு யாரும் பார்க்கவில்லை. வீட்டிலேயே அவள் ஒருத்தி தான் காசியின் மனதைக் கொஞ்சம் அறிந்திருந்தவள். காசியின் அருகில் வந்து, அவனது முதுகை நீவிக் கொண்டு, மிகுந்த அன்புடன், “காசி அண்ணா! இங்கே ஏன் தனியாக உட்கார்ந்திருக்கிறாய்? வா, உள்ளே. வந்து உட்கார். எழுந்திரு” என்றாள் விந்து. காசிநாதன் பேசாமல் எழுந்து வீட்டுக்குள் சென்று, கட்டிலின்மேல் உட்கார்ந்து கொண்டான்.

“அண்ணா, நான் இங்கே வந்து எத்தனை நாளாகிறது! நீ ஒருநாள் கூட என்னைப் பார்க்க வரவில்லை, பார்த்தாயா?” என்றாள் விந்து.

“வர முடியவில்லை”

“ஏன், ஏன் வர முடியவில்லை?”

காசிநாதன் கொஞ்சம் அக்கம் பக்கம் பார்த்துவிட்டு, “என்னை அவர்கள் வர விடுவதில்லை” என்றான்.

“வர விடுவதில்லையா! ஏன்?”

காசிநாதன் எங்கேயோ ஞாபகமாக “அப்படித்தான்” என்றான்.

விந்து துக்கமடைந்து, “நீ போக விரும்பும் இடத்துக்கு உன்னை அவர்கள் போகவிடுவதில்லையா?” என்று கேட்டாள்.

“இல்லை, போக விடுவதில்லை. நான் எங்கேயாவது போனால் மாமனாருக்கு அவமானமா யிருக்கிறதாம்.”

அண்ணா சங்கடப்படுகிறான் என்று அறிந்துகொண்ட விந்து, பேச்சை மாற்றி, "அண்ணா, நீ நாட்டுப் பெண்ணைக் காட்டவில்லையே?" என்றாள்.

காசிநாதன் மௌனமாக இருந்தான்.

"நாட்டுப் பெண் எப்படி இருக்கிறாள்?" என்று விந்து மீண்டும் கேட்டாள்.

"நன்றாயிருக்கிறாள்."

"ஆனால், நான் ஒரு நாளைக்கு வந்து அவளைப் பார்த்துவிட்டு வரலாமா?"

காசிநாதன் தலையை உயர்த்தி, விந்துவின் முகத்தைப் பார்த்தான். பிறகு கொஞ்சம் சிரித்துவிட்டு, "பார்த்து வரலாம்" என்றான்.

இதற்குள் வெளியில் வண்டி வரும் சத்தம் கேட்டது.

விந்து "உனது வண்டி வந்துவிட்டது போலிருக்கிறது" என்றாள்.

"ஆம், அப்படித்தான் தோன்றுகிறது."

கொஞ்சநேரம் கழித்து, தான் திரும்பிப் போகிற சமயத்தில், காசி விந்துவை நோக்கி, "எப்போது வருகிறாய்?" என்று கேட்டான்.

"எங்கே?"

"நாட்டுப் பெண்ணைப் பார்க்க."

விந்து புன்சிரிப்புடன், "எப்போது உனக்குச் சமயம் கிடைக்கிறதோ அப்போது வந்து கூட்டிப் போ" என்றாள்.

"நாளைக்கு வரட்டுமா?"

"நிச்சயமாய் வரவேண்டும்."

தான் சொன்னபடியே காசிநாதன் அடுத்தநாள் வண்டி கொண்டு வந்தான். விந்து நல்ல சேலையுடுத்தி, அலங்காரம் செய்துகொண்டு புறப்படுகிற சமயத்தில், எங்கிருந்தோ ஹரி பாபு வந்து சேர்ந்தார். அவர் வரும்போதே, வாசலில் வண்டி நிற்பதைப் பார்த்தார். அதிலிருந்து காசிநாதன் வந்திருப்பான் என்று அனுமானித்துக்கொண்டார். உள்ளே வந்ததும், தமது மனைவியிடம் சென்று, "விந்து எங்கே போகப் போகிறாள்?" என்று கேட்டார்.

"நாட்டுப் பெண்ணைப் பார்க்கப் போகிறாள்" என்று அவள் சொன்னாள்.

"எந்த நாட்டுப் பெண்ணை? ஜமீன்தாரின் மகளையா?"

மனைவி ஒன்றும் பதில் அளிக்கவில்லை.

ஹரி பாபு மிகுந்த கம்பீரத்துடன், "விந்து அங்கே போவாளானால், நான் உயிருள்ள வரையிலும் அவள் முகத்தில் விழிக்கமாட்டேன்" என்றார்.

மனைவி ஆச்சரியத்துடன், "ஏன்? தன் அண்ணாவின் சம்சாரத்தைத் தானே பார்க்கப்போகிறாள். அதில் என்ன தப்பு?" என்று கேட்டாள்.

"தப்போ, சரியோ. அதையெல்லாம் விளக்கிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. விந்து என் பேச்சைக் கேட்கா விட்டால், அவள் அப்புறம் இந்த வீட்டுக்குள் ஒரு போதும் வரக் கூடாது. அவ்வளவுதான்."

ஹரி பாபுவின் சுபாவம் விந்துவுக்குத் தெரியாததல்ல. அவள் வாய் பேசாமல் துணிமணி அலங்காரங்களையெல்லாம் களைந்து வைத்து விட்டாள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த காசிநாதன் வாய் திறக்கவில்லை. பேசாமல் மௌனமாய் வண்டியில் போய் உட்கார்ந்து கொண்டான்.

தனியாய் வீடு திரும்பிய கணவனைப் பார்த்த கமலா, "ஏன்,நாத்தனார் வரவில்லை?" என்று கேட்டாள்.

காசிநாதன் தீனமான குரலில் "அவர்கள் அனுப்பவில்லை" என்றான்.

"ஏன்?"

"தெரியவில்லை; ஒருவேளை இங்கே அனுப்ப அவர்களுக்கு வெட்கமாயிருக்கலாம்."

இந்த வார்த்தைகள் கமலாவின் இதயத்தைச் 'சுரீல்' என்று துளைத்தன.

(தொடரும்.)

அவன் போகத் தொடங்கவும் கமலா அவன் கையைப் பிடித்துக்கொண்டாள்........

வேதாந்த விசாரணை :

சித்திரமும் சிறு கதையும்

—(சாது டி. எல். வாஸ்வானி)

வெளிச்சம் எப்படி உற்பத்தியாகிறது? யாரறிவார் அதன் ரகஸ்யத்தை? அணுவிலுள்ள பரமாணுக்கள், நிலைத்த தொரு நிலையினின்றும், சக்தியிலே தம்மினும் கீழான மற்றொரு நிலைக்குத் திடீரென்று மாறும் போது, ஒளிச் சக்தி அலையொன்று வெளியேறுகிறது. ஒளி யென்பது சக்தியின் ஓர் உருவம்; ஏதேனும் ஒரு பொருள் தன் சக்தியை இழப்பதனின்றும் ஒளி பிறக்கிறது. சக்தி நஷ்டமே ஒளியாகி விடுகிறது! தியாக தர்மத்தின் அதிசயம் இதுதான்! உங்கள் தியாகம்—சக்தி நஷ்டம்—பற்பல மக்களின் வாழ்க்கைப் பாதையிலே ஒளி வீசுகிறது.

* *

குலம், மதம், ஜாதி என்ற பந்தங்களை யெல்லாம், பிரேமை முறித்தெறிகிறது. சண்டிதாஸ் ஒரு பிராம்மணன்; ராமி ஒரு செம்படவச்சி. சண்டிதாஸ் ஒரு கவி; ராமி ஒரு கவி, படிப்பற்றவள். சண்டிதாஸ், ராமியைக் கண்டு பிரேமை கொள்ளுகிறான்; அவளை அடிக்கடி சந்திக்கிறான்; ஜாதிப் பிரஷ்டனாகிறான். அவனுடைய சகோதரன் அவனிடம் சொல்கிறான்: "ராமியைக் கைவிடு. பிராம்மண சமாராதனை செய். உன்னை ஜாதியிலே மீண்டும் சேர்த்துக்கொள்ள, ஏற்பாடு செய்கிறேன்." சண்டிதாஸ், பிராம்மண சமாராதனை நடத்துகிறான்; ராமியை நிக்ரகம் செய்து, ஜாதியிலே திரும்பவும் சேர முயல்கிறான். சமாராதனையிலே திடீரென்று ராமி தோன்றி விடுகிறாள். சண்டிதாஸ், மனம் வருந்திக் கண்ணீர் விடுகிறான்; அவளிடம் செல்கிறான்; மன்னிப்புக் கேட்கிறான்; "காயத்ரி தேவி! வேதங்களின் தாயே!" என்று அவளை அழைக்கிறான். அன்னை பராசக்தியாய், ராமியைச் சண்டிதாஸ் காண்கிறான். கூடியுள்ள வேதியர் முன்னிலையிலே, பிரேமை வணக்கத்தை அவளுக்கு அவன் செலுத்துகிறான்!

* *

"நவ நாகரிகம் எங்குதான் செல்கிறது? அதைக் காப்பாற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள்.

நான் சொன்னேன் :—"நவீன இயந்திரத் தொழிற் சாலைகளின் சக்கரங்கள் சுழன்று சுழன்று ஓடுகின்றன. பொன்னிலே காமங் கொண்ட நாட்டியம், ஆசை நாட்டியம், மரண நாட்டியத்திலே மக்கள் சுழன்று சுழன்று ஓடுகிறார்கள்."

எளிய வாழ்க்கையை ஏற்க வேண்டும்; பிருந்தாவன பாலகனை, பெத்லஹேம் குழந்தையைப் புது முறையிலே வணங்கவேண்டும்—இதையன்றி, நாகரிகத்தைக் காப்பாற்ற வேறு வழி ஏது?

* *

நாடோடிப் பறவைகள் எப்படித் தங்கள் லட்சிய ஸ்தலத்தை அடைகின்றன? அவை ஏதோ சில பூச்சிகளைத் தேடிச் செல்கின்றனவாம். குறிப்பிட்ட பருவ காலத்திலே, அந்தப் பூச்சிகளிடமிருந்து, மிகக் குறுகிய மின்ஸார அலைகள் வீசுகின்றனவாம். இந்த மின் அலைகளால் இழுக்கப்பட்டே, அந்த நாடோடிப் பறவைகள் தங்கள் லட்சிய இடத்தைச் சேர்கின்றனவாம்.

குருநாதன் உன்னைச் சந்திக்கவில்லையே என்று குறைப்படுகிறாய்! அவன் உன்னைத் தேடிக் கொண்டிருப்பதை நீ மறந்துவிடுகிறாய். ஆசை அலைகளை மட்டில் நீ அனுப்பினால் போதும். அவற்றால் இழுக்கப்பட்டு, குருநாதன் உன்னை வந்தடைந்து அருள் புரிவான். ஏன் எங்கெங்கோ அலைகிறாய்? ஆசை, ஆசை, ஆசை கொள்—உன் ஆசையை நீ அடைவாய்!

* *

"ஸ்தாபனங்களை மாற்றிவிட வேண்டும்" என்று எவ்வளவு அடிக்கடி சொல்லுகிறோம்; ஆனால், ஜனங்களை மறந்துவிடுகிறோம்! சர்க்காரை மாற்ற வேண்டும் என்கிறான் அரசியல் வாதி; சமூகத்தை மாற்றவேண்டும் என்கிறான் சீர்திருத்த வாதி. ஸ்தாபனங்கள், சட்டங்கள், சம்பிரதாயங்கள் எல்லாம் மாறுகின்றன. ஜனங்கள் மட்டில் முன்போலவே, சீரழிந்து நலிந்த வாழ்வே வாழ்கிறார்கள்; 'சமூகம்', 'சர்க்கார்' என்ற பெயர்களால், ஜனங்கள் துன்புறுத்தப்பட்டு, ஹிம்ஸிக்கப் படுகிறார்கள். ஆனால், தனி மனிதரை வைத்துக்கொண்டு தான் புதியதோர் ஏற்பாட்டை, புதியதொரு முறையை, நீங்கள் அமைக்கவேண்டி யிருக்கிறது.

தனி மனிதர்களை உண்மையிலே சந்தோஷ முடையவர்களாக்குங்கள்; சமூகத்தையும் தேசத்தையும் புனர்நிர்மாணம் செய்ய உதவியவராவீர்கள். உங்களோடு, உங்கள் அருகே—வீட்டிலே, தெருவிலே, பள்ளியிலே உள்ள ஒரு சில ஜனங்களுக்கு நீங்கள் சேவை புரியுங்கள்; ஜனங்கள் அனைவருக்கும் சேவை புரிந்தவராவீர்கள். உண்மைச் சுதந்திரம் அடையும் வழி, தனிப்பட்டவர்களின் ஆத்ம மாறுதலே யாகும்.

ஒரு பாம்புக் கதை

பாம்புகளைப்பற்றி எல்லா நாடுகளிலும் விதம்விதமான நிஜக் கதைகளும் கட்டுக் கதைகளும் உண்டு. இது ஒரு நிஜக் கதை.

பிரிஸ்பேனிலிருந்து ஒரு ஸைக்கிள் வண்டியில் ஒருவன் சென்று கொண்டிருந்தான். வழியிலே ஒரு பாம்பை அவன் கண்டான். ஸைக்கிளைவிட்டு இறங்கி ஒரு தடியைத் தேடிச் சென்றான். அதற்குள் பாம்பு இவனது ஸைக்கிள் ஹாண்டில்-பார் ஓட்டைக்குள் புகுந்து கொண்டது. இவன் உடனே ஹாண்டில்-பாரின் இரண்டு பக்கத் துவாரங்களிலும் பெரிய குச்சிகளை எடுத்துத் தக்கைபோட்டு மூடிவிட்டு, ஸைக்கிளோடு பாம்பையும் வீட்டுக்குக் கொண்டுவந்துவிட்டான். வீடு வந்து சேர்ந்தபின், நண்பர்களின் முன்னிலையில் பழையபடி பாம்பை வெளியே கிளப்பிக்கொன்றான்!

மாதம் ரூ. 675 சம்பாதிக்க

அதிர்ஷ்டம் உங்கள் வாயிலை மோதுகிறது

நீங்கள் மனமார மாதம் 675 ரூபாய் சம்பாதிக்க ஆசைப்பட்டால் நிஜமான அமெரிக்கன் புதிய தங்கத்தின் ஏஜென்ஸியைப் பெறுங்கள். இந்த தங்கம் உரை கல்லில் மெய்யான தங்கம் போலவே தோற்றுகிறது. அதனைத் தகடாக்கவோ, கம்பியிழுக்கவோ செய்யலாம். நிறம் ஒரு போதும் மாறுவதில்லை. இத் தங்கத்தில் செய்த எல்லாவித நகைகளும் எங்களிடம் உண்டு. இப்போதே ஏஜென்ஸிக்கு எழுதுங்கள். நகைகளின் ஜாபிதா முழுதும் அடங்கியுள்ள காட்லாக்கும், 4 தோலா அமெரிக்கன் புதிய தங்கமும், ஒரு ஜதை வளையலும், ஒரு ஜதை கடுக்கனும், பம்பாய் மாதிரியில் ஒரு மோதிரமும் மாதிரிகளாக அனுப்பப்படும். சுறுசுறுப்பும் செல்வாக்குமுள்ள ஏஜெண்டுகட்கு பலவித வசதிகள் கிடைக்கும். இப்போதே ஏஜென்ஸி நிபந்தனைக்கு எழுதுங்கள்.

AMERICAN NEW GOLD COMPANY,

POST BOX 61 (D. 1413) LAHORE, INDIA

உயர்ந்த வைரங்கள்

புதுமாதிரி வைர நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**உ. அ. அரு. அருணாசலம்
செட்டியார்**

வைர வியாபாரம்

கல்லுக்கட்டி, காரைக்குடி

ஆமண்டு ஜேம்ஸ் போமேட்

தலைக்குச் சிறந்தது



அழகிய, நவீன முறையிலுள்ள தங்க வெள்ளி
சாமான்கள் உங்களுக்கு வேண்டுமோ?

வாருங்கள்! **வந்து பாருங்கள்!**

ராதா ஜ்வல்லரி ஷோ ரூம்





குறிப்பிடத் தக்கவை, உத்திரவாத முள்ளவை,
உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை, நீண்டகாலம் உழைப்பவை

ஆண்களுக்கு :—தங்க மோதிரங்கள், கல்யாண மோதிரங்கள், இனுமல் மோதிரங்கள், நவீன கழுத்துச் சங்கிலிகள் பித்தான் கற்கள் முதலியன.

பெண்களுக்கு :—நவீன நெக்லஸ்கள், புதுமாதிரி தங்கச் சங்கிலிகள், ஒட்டியாணங்கள், வங்கி, வகைவகையான எனுமல் காப்புகள் முதலியன.

வெள்ளிச் சாமான்கள் :—டம்ளர்கள், டீ செட்டுகள், விளையாட்டுச் சாமான்கள், ஜாடிகள், அழகிய பட்டைக் கொலுசுகள், எனுமல் கொடுத்த பலவகை சாமான்கள்.

இன்னும் எது வேண்டும்? தயாராயிருக்கின்றன. ஆர்டர்களுக்கும் செய்து தரப்படும்.

G. ராதாகிருஷ்ண செட்டி
ஜ்வல்லர்,
பெரிய கடைத்தெரு, திருச்சி

டெலி { போன் **37.**
இராம் 'ராதா'

ஆர்டர் அனுப்பும்பொழுது "சக்தி" யில் கண்டது என்று குறிப்பிடவும்.

Your

EASTERN BUSINESS

is safe with us. We transact every description of Banking & Exchange business. We offer Special facilities for Collection on Malaya. Prompiness & Service are our watchwords.

INDIAN OVERSEAS BANK LTD

ஹெட் ஆபீஸ்:

மதராஸ்

பிராஞ்சுகள்:

கன்னனூர்	சிங்கப்பூர்
கோயம்புத்தூர்	புதுக்கோட்டை
தேவகோட்டை	ரங்கூன்
காரைக்குடி	சிவகங்கா
குலாலம்பூர்	மேட்டூர் டாம்
பினங்கு	தலைச்சேரி (சப் ஆபீஸ்)

மேல்நாட்டு ஏஜண்டுகள்

தி சேஸ் நேஷனல் பாங்க் ஆப்
தி ஸிடி ஆப் நியூயார்க்
லண்டன் & நியூயார்க்

உங்கள் விலை யுயர்ந்த சாமான்களை
Safe Deposit Vault-இல்
பத்திரப் படுத்துங்கள்

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கு

லிமிடெட்

எஸ்ப்ளனேட் :: மதராஸ்

Fashion Insists on-
Smartness !

FOR MODERN SAREES

SHOP AT

RANGOON HALL

RANGOON MERCHANT

THE FASHION SAREES HOUSE

அழகு செய்வது தற்கால நாகரீக ஆடைகளே !

உயர்தர ஜவுளிக்கு
உத்திரவாதமுள்ள இடம்

ரெங்கோன் - - - ஹால்

கு. அ. அங்கமுத்து முதலியார்

பட்டு ஜவுளி வியாபாரம்

அம்மன் சன்னதி :: காரைக்குடி

உடம்பும் மருந்தும்:

தொந்தி கரைப்பது எப்படி?

—[டி. வி. திருவேதி]

சரீர நாடிகள் சுத்தமாக இருந்தால், ரத்தம் சுத்தமடையும். நாடிகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமானால், ஆகார நியமத்தோடு, ஆசனப் பழக்கங்களும் பேருதவியாகும். 'ஆசனப் பழக்கம் அரும்பிணி அகற்றும்' என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். தேகத்தில் முதுகு, வயிறு என்ற இரண்டு பாகங்களையும் நன்றாய் வைத்திருப்பதற்கு மாத்திரம் சுமார் நூறுவித ஆசனங்கள் இருக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாய்ச் 'சக்தி'யில் வெளியிட்டு வர எண்ணியிருக்கிறேன். இந்த ஆசனங்களைத் தினம் மூன்று முறை செய்துவந்தால், அருமையான பலன்கள் விளையும்.



படம் 1. பஸ்சிமோத்தானாசனத்தை ஆரம்பிக்கும் மாதிரி

துர்வியாதி எதனாலும் பீடிக்கப்பட்டிராத பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகள், கொஞ்சம் தேகவலுக் குறைந்திருந்தாலும் பாதகமில்லை; உடலமைப்பு மட்டில் ஆரோக்கியமாகவே யிருக்கும். இது ஆண்டவன் படைப்பின் அதிசயமாகும். பிறக்கும்போது நமது வயிறு, பஞ்சுபோல் மிக்க மிருதுவாயிருக்கும். கண்ட கண்ட ஆகாரங்களைக் குழந்தைப் பருவத்தில் நமது பெற்றோர் செல்லமாய் ஊட்டி விடுவதாலும், பின்னால் நாமும் நியமமின்றிக் கண்டபடி ஆகாரத்தைத் தின்பதனாலுமே, விகாரமான தொந்தி விழுந்து விடுகிறது. ஆலிலைபோல் இருக்க வேண்டும் என்று கவிகள் வர்ணிக்கும் வயிறு, இப்படிக் குதிர்போல் ஆகிவிடுவதை எப்படிக் கரைப்பது?

பஸ்சிமோத்தானாசனம் என்ற ஆசனம் அதற்கு மிகவும் ஏற்றதாகும். இவ்வாசனம் இளந்தொந்தியையும், பெருந்தொந்தியையும் கரைத்து, அழகுபடுத்தி, மென்மையான இடையை அளிப்பதில் ஈடு இணையற்றதாகும். இவ்வாசனத்தால், இவ்வுள், முதுகு இவற்றின் சதைகள் வலிவடையும். குடல் சுத்தமாகும். நரம்புகளின் இழுப்பினால், ரத்த ஓட்டத்துக்குச் சுறுசுறுப்பு ஏற்படும். மூலக் கடுப்பு, நீரிழிவு இரு நோய்களுக்கும் இந்த ஆசனம் சிறந்த சிகிச்சையாகும். பெண்கள் இதை அப்பியாசம் செய்தால், இத்தனை குணங்களும் ஏற்படுவதோடு, பிரசவத்தில் அதிகச் சிரமப்படாமலிருக்கத்தக்க வலிவு, இடுப்புக்கு ஏற்படும்.



படம் 2. பஸ்சிமோத்தானாசன முதல் பயிற்சி

எந்த ஆசனமானாலும் முரட்டுத்தனமாகப் பயிலலாகாது; பயின்றால் விபரீதம் உண்டாகும். ஆகையால், கொஞ்சம் கொஞ்சமாக உடம்பை வளைத்து, காலக்கிரமத்தில்தான் பரிபூர்ணமாய்ச் செய்ய முடியும். இந்தப் பஸ்சிமோத்தானாசனம் செய்யும் அப்பியாசத்தை இரண்டு படிகளாகப் பிரிக்கலாம்.

முதல்படி: 1-ஆவது படத்தில் காண்பதுபோல், நேராக உட்காருங்கள். இரண்டு கால்களும் பூமியில் பதிந்து, நீட்டியிருக்க வேண்டும். இரண்டு கைகளையும் காதுகளுக்குச் சரியாய், ஆணியடித்தால்போல், நீட்டி உயர்த்திப் பிடியுங்கள். சுவாஸத்தை வெளிவிட்டு, வயிற்றை உள்ளுக்கிழுத்து, 2-ஆவது படத்தில் காண்பதுபோல் முன்புறமாய்க் குனியுங்கள். அப்போது, கால் மேலுக்கு வரக்கூடாது.

படம் 3. பஸ்சிமோத்தானாசனம்

இப்படிப் பயிலும்போது, இடுப்பு, முட்டி, குதிகால் ஆகிய அங்கங்களில் சற்று வலி உண்டாகும். வலியைப் பொறுத்துக்கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாய், தினம் 15 முதல் 20 தடவைகள் வரையில் ஆயாசமில்லாமல் திரும்பத் திரும்ப இப்படிக் குனிந்து நிமிரப் பழகவேண்டும். குனிந்து கால்கட்டை விரல்களை இரு கைகளாலும் நன்றாய்ப்

பிடிக்கக் கூடிய பழக்கம் வரும் வரையிலும், இதைப் புரிந்துவர வேண்டும்.

இரண்டாவது படி: முதல் அப்பியாசம் நன்ருய் வந்தபிறகு, கால் கட்டை விரல்களைக் கெட்டியாய்ப் பிடித்தபடியே, சுவாஸத்தை வெளிவிட்டு, இரண்டு முழங்கால் முட்டிகளிலும் மூக்கு படும்படியாக, தலையைக் குனியவேண்டும். முழங்கால மூக்கு, 3-ஆவது படத்திலுள்ளதுபோல், நன்ருய் எட்டிப் பிடிக்கத் தொடங்கிவிட்டால், அதுதான் பஸ்சிமோத்தானுசனம். இந்த ஆசனத்தின் நிலையில், மூன்று நிமிஷம் முதல் ஐந்து நிமிஷம் வரையில் அப்படியே கலையாமல் இருந்து வந்தால், பரிபூரணப் பலன் கிடைக்கும்.

"ஒருவனுடைய உடைமைக்கும் அவனுடைய வாழ்வுக்குமிடையே பிடித்திருக்கும் துலாக்கோல்தான் அவனது களிப்பாகும்" —ஓர் ஆங்கில ஆசிரியர்

* * *

"நாஜியிஸம் கம்யூனிஸம் பாஸிஸம் என்று பல 'இஸம்'கள் தற்காலத்தில் தோன்றி, நம்மைக் குழப்புகின்றன. ஆனால் அவையெல்லாம் ஒன்றையொன்று ரத்து செய்துவிடுகின்றன"—கனடாவின் கவர்னர் ஜெனரலான லார்டு ட்வீட்ஸ்மூர்.

* * *

மடீரா என்ற பிரபல தீவு ஒரு பசுந்தோட்டமாகும். அதன் அழகைக் காப்பாற்றுவதற்காக, அங்கே ஒரு சட்டம் இருந்து வருகிறது. அதாவது, ஒரு மரத்தை வெட்டுவோர், அந்த இடத்தில் மற்றொரு மரத்தைக் கட்டாயமாய் நட்டாக வேண்டும்.

* * *

அமெரிக்காவைக் கண்டுபிடித்தது யார் என்று கேட்டால், "கொலம்பஸ்" என்று பள்ளிக்கூடக் குழந்தைகள் அத்தனையும் சொல்லும். அப்படிப் போதிக்கப்பட்டிருக்கிறது இத்தனை காலமும். ஆனால், அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர் கொலம்பஸ் அல்லவாம்! பிரெண்டன் என்ற ஓர் ஐரிஷ்காரரே அதைக் கண்டுபிடித்தவராம். ஓர் அமெரிக்கப் பத்திரிகையில், பல பழைய தஸ்தாவேஜி ஆதாரங்களோடு, இதை ஒருவர் வெளியிட்டிருக்கிருர்.

கத்தி மழை — (உல்லாஸி)

குழந்தைகளின் உள்ளம் என்ன நிஷ்களங்கமானது! அதிலே தான் என்ன வசீகரம்! இதைச் சித்தரிக்கும் ஒரு சிறு கதை இது

நித்யானந்தம் அம்மாள், பர்த்தாவுக்கேற்ற பத்தினி. அவர் ஓர் உபதேசியார்; இவள் ஒரு மகா பக்தை. இந்தக் கிருஸ்தவக் குடும்பத்திலே வளரும் குழந்தை ரத்தினத்துக்கு, இந்தச் சிறு வயதிலிருந்தே, 'அஞ்ஞானி' வீட்டுப் பிள்ளைகளிடம், தங்கள் 'உண்மையான தேவ'னைக் காட்டித் தருவதில் ரொம்பவும் சிரத்தை ஏற்பட்டது. அதற் கேற்ருற்போல் ஒரு சந்தர்ப்பமும் வந்து சேர்ந்தது.

தாயார் தினந்தோறும் படுக்கப் போகும்போது, 'புதிய ஏற்பாட்'டைப் பிரித்து, தேவ வசனம் ஒன்றை எடுத்து, குழந்தை ரத்தினத்துக்கும் அவன் தம்பி அருமைநாதனுக்கும் படித்து விளக்கி விட்டுத்தான் செல்வாள்.

ஒரு நாள் ராத்திரி, இவ்வாறு அவள் படித்த பின்வரும் வாக்கியம் மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் உள்ளதாகும்:

"என் நாமத்தின் பேரால் எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் கூடுகிறர்களோ அவர்கள் நடுவே நான் இருப்பேன்..............."

இதை வியாக்கியானம் செய்கையில், பின்வரும் மலைப்பிரசங்க வாக்கியத்தையும் அம்மாள் எடுத்தாண்டாள்:

"கேள்; அது உனக்கு அளிக்கப்படும். தேடு; அது உனக்கு அகப்படும்."

இந்த நித்தியச் சடங்கு முடிந்ததும், குழந்தைகள் படுக்கச் சென்றர்கள்.

இருட்டிலே, 'கிசு, கிசு' என்று தம்பியின் குரல் கேட்டது: "அண்ணு! நீயும் நானும் கர்த்தரை ஏதாவது கேட்டு, வாங்கிக்கிடலாமா? என்னு சொல்றே?"

இந்த அபூர்வமான யோசனையைக் கேட்ட ரத்தினம் பரபரப்படைந்தான்: "அதெப்படித் தம்பி?" என்று விசாரித்தான்.

அருமை: "இரண்டு அல்லது மூணுபேர் சேர்ந்து, கர்த்தரை ஏதாவது கேட்டா, அது கிடைக்குமின்னு வேதம் சொல்லலே?"

ரத்தினம்: "நிசந்தான். இதைத் பரிட்சை பண்ணிப் பார்ப்பம். ஆனு, நாம்ப என்ன கேக்கறது?"

அருமை: "நான் அதை யோசிக்கல்லே. காலையிலே யோசிப்பம்."

மறுநாள் காலை பொழுது விடிந்தது. அண்ணனுக்கு முன்னே தம்பி எழுந்திருந்து, மொச்சைக் கொட்டை மாதிரி கண்ணைத் துப்புற விழித்துக்கொண்டு, அவனைத் தட்டி எழுப்பினன்.

ரத்தினம் எழுந்த உடனே கேட்ட முதல் கேள்வி இதுதான்: "என்ன கேக்கறது, தம்பி?"

தம்பி அதை ஏற்கனவே மிக நன்ருய் யோசித்து முடிவு செய்து வைத்திருந்தான். வெள்ளைப் பிடி போட்ட இரண்டு பேனுக்கத்திகள் கேட்கலாமென்று அவன் சொன்னன்.

ரத்தினம்: "அவைகள் எங்கேயிருந்து வரும்?"

அருமை: "மானத்திலேயிருந்துதான். சுவாமி அங்கேதானே இருக்காரு; சுலபமா மழைமாதிரி போட்டாருன்னு, தானு அது நம்பகிட்ட வந்து விளுது."

காலைச் சாப்பாடு முடிந்தது. பசங்கள் இருவரும் மெல்லக் கொல்லைத் தோட்டத்துக்கு நழுவினர்கள். ஏகாந்தமாய் ஓரிடத்தில் போய் நின்று கொண்டார்கள்.

தம்பி வானத்தை ஏறிட்டுப் பார்த்தான். மேகம் ஏதுவும் இன்றி அது நிஷ்களங்கமா யிருந்தது. ஆமாம், கடவுள் போடும் சாமான்கள் மேகத்திலே வந்து

மாட்டிக்கொண்டால், பிரயோசனமே யில்லாமல் போய்விடு மல்லவா? இப்போது அந்த மாதிரி தடங்கல் எதுவுமில்லை. ஆகையால், இருவரும் அண்ணாந்து, கைகளை உயர்த்தி, பிரார்த்திக்கத் தொடங்கினார்கள்:

"ஆண்டவனே! கிருபை கூர்ந்து, இரண்டு பேனாக்கத்திகளைப் போடும். ஆமென்!"

பையன்களின் குரலை ஆண்டவன் கேட்ட குறி எதையுமே வானத்தில் காணோம். மறுபடியும் இன்னும் சற்று உரத்து இருவரும் வேண்டலானார்கள்:

"ஆண்டவனே! கிருபை கூர்ந்து இரண்டு பேனாக்கத்திகளைப் போடும்"—தம்பி இதனோடு இந்த வார்த்தைகளையும் கூட்டிக்கொண்டான்: "தங்கள் விசுவாசமுள்ள ஊழியருக்கு. ஆமென்."

பலிக்கவில்லை.

அண்ணனும் தம்பியும் சிறிது நேரம் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தார்கள்.

கடைசியில் தம்பி சொல்லலானான்: "மானம் கிட்டவா இருக்குது? எவ்வளவோ தூரமில்லையா? நாம்பள் இ-றை-ஞ்-சு கத்தணும். அப்பதான் கர்த்தருக்குக் கேக்கும்."

வாஸ்தவம் என்று அண்ணனும் ஒப்புக்கொண்டான். பிறகு இருவரும் மேலே மேலே குரலை உயர்த்திக்கொண்டே தங்களால் முடிந்த வரையில் உரத்துக் கத்தினார்கள். இவர்களது சத்தம் கர்த்தருக்குக் கேட்கவில்லை; ஆனால், வீட்டுக்குள்ளே இருந்த உபதேசியாருக்குக் கேட்டுவிட்டது.

அவர் ஜன்னல் வழியாகப் பார்த்தார். பையன்களின் பிரார்த்தனை அவஸ்தையைக் கண்டார். பிரமித்துப் போனார்.

விஷயம் என்னவென்று அவர் ஊகித்துவிட்டார். தம்முடைய சொந்தக் குழந்தைகளின் தெய்வ நம்பிக்கைக்கு இதோ சைத்தானின் சோதனை வந்திருக்கிறது என்று அவருக்குப் பயமுண்டாயிற்று. "அப்பாலே போ சைத்தானே!" என்ற ஏசு பிரானின் மொழிகளைத் தமக்குள்ளே முணுமுணுத்தார். ஆனாலும், சைத்தான் சும்மாப் போவானா?

கடைசியிலே அவருக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. துணியை உதறிப் போட்டுக்கொண்டு புறப்பட்டார் கடைத்தெருவை நோக்கி.

இதற்குள் பையன்களுக்குக் களைப்பு வந்துவிட்டது. இருந்தாலும் அவர்களுடைய ஊக்கம் மட்டில் இன்னும் குறையவில்லை.

"அண்ணா! வேதத்திலே எத்தனை பேர்னு போட்டிருக்கு? இரண்டு பேர் அல்லது மூணு பேர்னு இல்லையா? நாம் சிறுபசங்கதானே; சுவாமிக்கு இரண்டு பசங்கள் போரலையின்னு நினைக்கறேன். வேறே யாரையாவது பிடிக்கலாமா?" என்றான் தம்பி.

அண்ணா ரத்தினத்துக்கு அது சரியென்றே பட்டது. யாரைத் துணைக்குக் கூப்பிடுவது? இருவரும் யோசித்தார்கள். அடுத்த தெருச் சுந்தாவைப் பிடிப்பது என்று, இருவருமாக, கடைசியிலே முடிவு கட்டினார்கள்.

சுந்தாவை அழைத்து வந்தாயிற்று. மூவருமாய்ச் சேர்ந்து, பரமண்டலத்தை நோக்கி, பிரார்த்தனையைத் தொடங்கினார்கள்: "ஆண்டவனே! கிருபைகூர்ந்து இரண்டு பேனாக்கத்திகளைப் போடும் தங்கள் விசுவாசமுள்ள ஊழியருக்கு. ஆமென்!"

இரண்டாவது முறை திரும்பவும் அதை உச்சரிக்கு முன்னேயே, 'விர்'ரென்று அருமைநாதனின் மண்டையைப் பார்த்துக் குறி வைத்து இரண்டு பேனாக்கத்திகள் வந்து விழுந்தன.

பையன்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள்; குதித்தார்கள்.

"பார்த்தாயா, சுந்தா! எங்கள் சாமியின் மகிமையை!" என்று கத்தினான் ரத்தினம்.

அந்தப் பரபரப்பு அடங்கிய பின்னேதான், ஒரு பெரிய பிசகு பையன்களுக்குத் தெரிய வந்தது. இரண்டு கத்திகளை மூன்று பேர் எப்படிப் பங்கிட்டுக் கொள்வது? பிரார்த்தனையில் ஒரு சிறிய திருத்தத்தைச் செய்ய மறந்தது, இந்தச் சங்கடத்தில் கொண்டு வந்துவிட்டது.

தான் வேலை செய்த கூலியில்லாமல் போக, சுந்தா தயாரில்லை. தனக்கு ஒரு கத்தி அவசியம் வேண்டுமென்று அவன் பங்கு கேட்டான். யோசனைக்கு மூல காரணனான அருமைக்குப் பங்கில்லாமல் முடியாது. மூவரிலும் தலைவனான ரத்தினம் வெறுங்கையாய்ச் செல்வதோ நடக்கக் கூடிய காரியமல்ல.

கொஞ்சம் தர்க்கம், வாதப்பிரதிவாதங்களெல்லாம் நடந்த பிறகு, சுந்தாவை ரத்தினம் ஒருவிதமாகத் தாஜா செய்தான்: "சுந்தா! கத்தி நாங்க ஆசைப்பட்டுக் கேட்டது. ஏதாவது வேணுமின்னா, மறுபடி சுவாமியை வேண்டிக்கிடுவோம். இதுக்குச் சண்டை போடாதே."

"அப்படியானா, எனக்கு இப்ப ஒரு அரிவாள் வேணும். வாங்க, பிரார்த்தனை பண்ணுவோம்" என்றான் சுந்தா.

"ஓ நான் மாட்டேன், நான் மாட்டேன். அரிவாள், கிரிவாளெல்லாம் கேப்பது ரொம்ப ஆபத்து" என்று சொல்லி, தலையைத் தடவிக்கொண்டான் அருமை. ஏனெனில், அவன் தலையில்தானே வந்து விழுந்தன அந்தக் கத்திகள்?

"உன் தலைக்கு நான் சவாப்தாரி. அரிவாள் வந்தால், உன் தலைமேலே விழாமெ, நான் ஏந்திக்கிறேன்" என்று சுந்தா சமாதானம் சொன்னான்.

வேறு வழியே யில்லாமல், சுந்தாவின் பிடிவாதத்துக்கு மற்ற இருவரும் இசைந்தார்கள். அரிவாள் பிரார்த்தனையும் ஆரம்பமாயிற்று.

பார்த்தார் உபதேசியார். "என்னடா ஒன்றுக்கு மேலே மற்றொரு உபத்திரவம்! இது எங்கேதான் போய் நிற்கப் போகிறதோ!" என்று சற்றுப் பயந்தார். பிறகு, என்ன ஆனாலும், ஆரம்பித்த நாடகத்தை முடிந்தவரையில் தொடர்ந்து நடத்துவோம்" என்று தீர்மானித்தவராய், மறுபடியும் வெளியே புறப்பட்டார்.

சிறுவர்கள் வெகுநேரம் பிரார்த்தித்தார்கள். பலன் ஏற்படவில்லை. கடைக்குப் போனவர் திரும்பி வந்தால்தானே பலன் ஏற்படும்? ஆனால், சிறுவர்கள் ரொம்பக் களைத்துவிட்டார்கள். பிரார்த்தனையை இப்போது இதோடு நிறுத்திக்கொண்டு, சாயங்காலம் மறுபடியும் ஆரம்பிப்பதென்று தீர்மானித்தார்கள். அரிவாள் வரு

கிறவரையில், கத்திகளை யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாதென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டான் சுந்தா. ஆகையால், அவைகளை அங்கேயே ஒரு குழி தோண்டிப் புதைத்து விட்டு, அகன்றார்கள் குழந்தைகள்.

அவர்கள் வாய் மூடு முன்னே, "அட பாவிப் பசங்களா! உங்களுக்குக் கத்தி, அரிவாள் இதெல்லாம் வேலை மெனக்கட்டு வாங்கி வந்து போட்டேனே; அதுக்கு என் தோட்டத்தையா நாசம் பண்றிய" என்று கர்ஜித்துக்கொண்டே ஓடி வந்தார் உபதேசியார். ஆனால், இரண்டே எட்டில் மூன்று பயல்களும் மூன்று திசையில் சிட்டுக் குருவிகள்போல் பறந்தோடிவிட்டார்கள்; கண்ணுக் கெட்டியவரையில் காணவே காணோம்.

சாயங்காலம் குறிப்பிட்ட நேரத்தில் மூவரும் தோட்டத்திலே பழையபடி ஆஜரானார்கள். பலே! அந்தப் பழைய இடத்திலே ரொம்பக் கணக்காய் ஒரு அரிவாள் 'பளபள' வென்று பிரகாசித்துக் கொண்டு கிடந்தது. அதன் ஜொலிப்பைக் கண்டபோது, அருமை, ரத்தினம் இருவருக்கும் சுந்தாவிடம் கொஞ்சம் பொறுமைகூட உண்டாயிற்று.

மொத்தத்தில் தகராறில்லாமல் காரியம் முடிந்ததில் மாத்திரம் எல்லாருக்கும் திருப்திதான்.

கத்திகளைத் தோண்டி யெடுத்து, சகோதரர் இருவரும் கைக் கொண்டார்கள்.

அரிவாளைக் கையில் பிடித்து, திருப்பித் திருப்பி அழகு பார்த்தான் சுந்தா. அப்போது அவன் கண்ணிலே, அரிவாளில் உள்ள சில எழுத்துக்கள் தென்பட்டன. "அடேடே! இதென்னடா? ஜோதி கம்பெனியையே ஆதரியுங்கள் என்று இதில் போட்டிருக்குதே! நம்ப ஊர் ஜோதி கம்பெனியா? தேவலோகத்து அரிவாள் இல்லியா இது!" என்றான்.

"அதுக்கென்ன? எங்க சாமி எப்பவும் நம்ப ஊர் ஜோதி கம்பெனியிலேயே சாமான் வாங்கற வழக்கம் வெச்சுக்கிட்டிருக்காரோ, என்னவோ. நமக்கென்ன அதைப் பத்தி? அரிவாள்தானே நமக்கு முக்கியம்" என்றான் ரத்தினம்.

"அது சரிதான்" என்று அரிவாளைப் பட்டாக்கத்திபோல் ஏந்திப் பிடித்த சுந்தா "எங்க சாமிக்கு எப்பிடித் தெரியுமா பலி கொடுப்பாங்க? இங்கே பாரு, இப்படித்தான்" என்று சொல்லி, எதிரேயிருந்த அரளிச் செடியை ஒரே வெட்டாய் வெட்டித் தள்ளிவிட்டான்.

"ஐயையோ! எங்கப்பா கண்டாருன்னா......" என்று, அருமையும் ரத்தினமும் ஏககாலத்தில் ஏதோ புலம்ப ஆரம்பித்தார்கள்.

பார்த்ததைப் படித்தால்—

"தங்களுக்கு ஏற்கனவே பூரணமாய்த் தெரிந்த நிகழ்ச்சிகளைப் பற்றிப் படிக்கும்போது, ஜனங்கள் சந்தோஷிக்கிறார்கள். புதிய விளையாட்டு ஒன்று ஆரம்பமான காட்சியைப் பார்த்துவந்த ஒரு மனிதன், அடுத்த நாள் காலைப் பத்திரிகையில் அதன் விமரிசனத்தைப் படிக்கையில், அந்தக் காட்சியைப் பார்த்திராதவனைவிட அதிக சிரத்தை காட்டுகிறான். நாம் ஏற்கனவே பார்த்த ஒன்றைப் பற்றியோ அறிந்த ஒன்றைப்பற்றியோ படிக்கும்பொழுது, அந்தச் சம்பவத்திலே நேரே கலந்து கொள்வதுபோன்ற ஓர் உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது. அநேகமாய் நம்மைப்பற்றியே நாம் படிப்பது போன்ற ஓர் பாவம் உண்டாகி விடுகிறது!"

—பிரெட் ஸி. கெல்லி.

* * *

பீகிங்கிலுள்ள ஒரு புத்தச் சிலை

புத்தக உலகம்

மனிதன் கடமை: மாஜினி-ஜீவிய சரித்திரம்: ஆசிரியர்: வெ. சாமிநாத சர்மா. வெளியிட்டோர்: புதுமலர்ச்சி நூற்பதிப்புக் கழகம், இரங்கூன். விலை ரூ. 2-0-0

இணையற்ற இதாலிய தேச பக்தர் மாஜினி. அவர் எழுதிய அற்புத நூலான 'மனிதன் கடமை' என்பதன் மொழிபெயர்ப்பும், மாஜினியின் ஜீவிய சரித்திரமும் இந்தப் புத்தகத்தில் அடங்கி யிருக்கின்றன. தேசம், சட்டம், சமுதாயம் என்பவற்றைக் குறித்து, உலகின் சிந்தனைகளையே கலக்கிய ஆதர்ச புருஷன் மாஜினி. கவிதை அழகும், கற்பனை லட்சியமும் அவருடைய எழுத்துக்களிலே உருக்கொண்டுள்ளன. மூலத்தின் விறுவிறுப்புச் சிறிதும் குன்றாமல், மாஜினியின் 'மனிதன் கடமை'யை ஸ்ரீ. சர்மா மொழிபெயர்த்திருக்கிறார். மாஜினியின் உத்தம வீரத் தியாக வாழ்க்கையை, இதாலிய சுதந்திரப் போர்ப் பகைப் புலனோடு பொருத்தி, அழகான முறையிலும் நடையிலும் ஆசிரியர் எழுதியுள்ளார்.

* *

அவன் அமரன்: ஆசிரியர்: அ. சீனிவாசராகவன், எம். ஏ. வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம், ஜி. டி., சென்னை. விலை: அணா 4.

மகா கவி கம்பனைப்பற்றிய ஒரு நாடகம் இது. இதை ஓர் ஆச்சர்யமான நூல் என்று சொல்லவேண்டும். கவிகளின் பெருமையை விளக்க, குணதோஷ விமர்சனமான பெரிய பெரிய நூல்களைத் தான் எழுதுவது வழக்கம். கம்பனின் கலை நுட்பத்தை, குறிப்பாய், ஆனால் ஆணித்தரமாய், காட்டும் ஒரு நாடகம் இது. கம்பனின் பாடல்களே இடையிடையே பாடுவதற்கு ஆளப்பட்டிருக்கின்றன. நாடகத்தின் பேச்சுக்கள் தெளிந்த மதுரமான நடையில் அமைந்திருக்கின்றன. நடிப்பதற்கு எப்படியோ, படிப்பதற்கு மிக்க இனிமையா யிருக்கிறது இந்த நூல்.

* *

Naked Shingles: ஆசிரியர்: மஞ்சேரி ஈசுவரன். வெளியிட்டோர்: சித்ரபானு புக் ஹவுஸ், சென்னை. விலை: ரூ. 1-8-0.

சிறு கதைகள் எழுதுவதில் சிறந்த மஞ்சேரி ஈசுவரனின் பத்து ஆங்கிலச் சிறு கதைகள் இதில் அடங்கியிருக்கின்றன. ஸ்ரீ. கே. எஸ். வெங்கட்ரமணி இதற்கோர் அற்புதமான முன்னுரை எழுதியிருக்கிறார். ஈசுவரனின் கதைகளிலே, கவிதை யழகு பொலிகிறது. அவருடைய பாத்திரங்கள், ஜீவ உருவங்களாகும்; ஆனால், கனவின் கனி சொரிபவை. ஒவ்வொரு கதையும் ஓர் உணர்ச்சிச் சித்திரம். அவருடைய 'யுத்த ஞாபகச் சின்னம்' கதை உருவம் பெற்ற கவிதையாகும். உயிரற்ற தொட்டில், ஈசுவரனது 'தொட்டி'லிலே, என்ன கோர ஜீவன் பெற்றுவிடுகிறது! 'கொலு' குழந்தை யுள்ளத்தின் சோகப்படம். இவ்வாறே மற்ற ஒவ்வொரு கதையும் நம் உள்ளத்திலே உணர்ச்சியைப் பொழிந்து விடுகிறது.

* *

அற்புத உலகம்: ஆசிரியர்: பெ. நா. அப்புஸ்வாமி. வெளியிட்டோர்: நவயுகப்பிரசுராலயம், ஜி. டி., சென்னை. விலை ரூ. 1-0-0.

விஞ்ஞான நூல்கள் எல்லாம் தமிழில் அப்படியப்படியே வந்துவிடவேண்டுமென்று ஏங்குகிறோம். அதற்காக, என்னென்னவோ புதிய சொற்களை யெல்லாம் சிருஷ்டித்து, சில தமிழன்பர்கள் கஷ்டப்படுகிறார்கள். அந்த முயற்சி, குதிரைக்கு முன்னே வண்டியைக் கட்டுவது போல, நிறைந்த பலன் அளிக்கவில்லையென்றால், ஆச்சர்யமில்லை. கருத்தைத் தொடர்ந்தோடி வரும் வார்த்தை. பூதத்துவம், விஞ்ஞானம், உயிர்த் தத்துவம், தாவர தத்துவம், ரசாயனம் முதலிய பல்வேறு துறைகளிலும், சில ரசமான பொருள்களை, எளிய நடையில், பாமரரும் ரஞ்சிக்கத்தக்க விதமாய், ஆசிரியர் எழுதியுள்ள பல கட்டுரைகளின் தொகுதி இது. இந்நூலைத் தமிழுக்கு ஒரு பெரிய தொண்டு என்றே சொல்ல வேண்டும்.

* *

ஆரம்பப் பாடசாலை விளையாட்டுக்கள்: ஆசிரியர்: இ. எஸ். ஆறுமுகம். கிடைக்குமிடம்: இ. எஸ். ஆறுமுகம், தேகப் பயிற்சி ஆசிரியர், லண்டன் மிஷன் கம்யூனிட்டி டிரெயினிங் ஸ்கூல், ஈரோடு. விலை ரூ. 1-0-0.

குழந்தைகளின் கல்விப் பயிற்சி எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியம் தேகப்பயிற்சி. தேகப் பயிற்சியால், உடல் உரம் பெறுவது மட்டிலும் அல்ல, மனமும் சுறுசுறுப்படைகிறது. பெயர் குறிக்கிறவாறே ஆரம்பப் பாடசாலைகளுக்கு மிக உபயோகமான ஏராளமான விளையாட்டுக்கள் இந்தப் புஸ்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலானவை மேல் நாட்டு விளையாட்டுக்கள். பலீன் சடுகுடு, கிளிக்கோடு போன்ற நமது பழம் விளையாட்டுக்கள் சிலவற்றையும் ஆசிரியர் சேர்த்திருப்பது பாராட்டத் தக்கது. ஆரம்பப் பாடசாலைகளுக்கெல்லாம் இன்றியமையாததொரு நூல் இது.

* *

டால்ஸ்டாய் கதைகள்: (இரண்டு பாகங்கள்.) ஆசிரியர்கள்: கு. ப. ராஜகோபாலன், ரா. விசுவநாதன். வெளியிட்டோர்: சக்தி காரியாலயம்,

ஜி. டி., சென்னை. ஒவ்வொரு பாகமும் தனித்தனி விலை ரூ. 1-0-0.

கவுண்ட் லியோ டால்ஸ்டாய் ஒரு பரிபூர்ண புருஷர்; பரிபூர்ண ஆசிரியர். கலை கலைக்காகவே என்ற கொள்கையை அவர் ஆதரிக்க வில்லை; ஆனால், அவர் எழுதிய கதைகளிலெல்லாம் கலை யழகு நிரம்பி யிருக்கிறது. அவர் சிருஷ்டிக்கும் கதா பாத்திரங்கள், ஜீவ சொரூபம் பெற்று, நம்முடன்—நமது உள்ளத்துடன்—சல்லாபம் செய்கின்றன. அவருடைய சிறு கதைகள், இணையற்றவை யாகும்; விதம் விதமானவையுமாகும். மொழிபெயர்த்திருக்கும் ஸ்ரீ. கு. ப. ரா. தமிழ் நாட்டின் மறுமலர்ச்சி எழுத்தாளர்களில் முன்னணியில் நிற்கும் ஒருவர். மற்றொரு மொழிபெயர்ப்பாசிரியரான ஸ்ரீ. ரா. விசுவநாதன், தெள்ளத் தெளிந்த தமிழில் எழுதுபவர். ஆகவே, மூலத்தின் முழு உணர்ச்சியும் மொழிபெயர்ப்பிலே பிரதிபலிக்கின்றன.

* *

இளந் தென்றல்: (சிறுவர்க்கான பாடல்கள்) ஆசிரியர்: சி. தேசிகவிநாயகம் பிள்ளை. வெளியிட்டோர்: புதுமைப் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை. விலை அணா 8.

'கல்லைப் பிசைந்து
கனியாக்குஞ் செந்தமிழின்
சொல்லை மணியாகத்
தொடுத்தவனும் நீதானோ'

என்று பாடும் ஸ்ரீ. தேசிகவிநாயகம் பிள்ளை, தமது பல பாடல்களில் அப்படித்தான் செய்கிறார். அவரது பாடல்களின் எளிமையே ஓர் இனிமையாகும். குழந்தையும் கவிஞனும், உள்ள உணர்ச்சியும் வியப்பும் சம்பந்தப்பட்ட மட்டில், ஒரே நிலையில் இருக்கிறார்கள். ஸ்ரீ. பிள்ளையவர்கள் அவ்விஷயத்தில், பூர்ண பக்குவம் பெற்றிருக்கிறார். குழந்தைகள் மட்டிலுமல்ல, பெரியவர்களும் தமிழறிந்த அனைவரும் படித்து, பாட முடிந்தால் பாடி, இன்பமடையத் தக்கன அவருடைய பாடல்கள்.

* *

தமிழ்ச் சுருக்கெழுத்துத் தற்போதினி: ஆசிரியர்: பி. ஜி. சுப்பிரமணிய ஐயர், பி. ஏ. கிடைக்குமிடம்: பி. ஜி. சுப்பிரமணிய ஐயர், 2636, ராஜகோபால ஸ்வாமி கோயில் தெரு, தஞ்சாவூர். விலை ரூபா 3-8-0.

ஆங்கிலத்தில் யாராவது பிரசங்கம் செய்தால், பேசிய வார்த்தைகள் அப்படியப்படியே பத்திரிகைகளில் பிரசுரமாகி விடுகின்றன. தமிழிலோ, பேசியவரின் வார்த்தைகள் அப்படி யப்படியே பிரசுரமாவதில்லை. ஆங்கிலத்தில் சுருக்கெழுத்து முறைகள் பல இருப்பது போல், தமிழில் இல்லாததுதான் இந்தக் குறைக்குக் காரணம். ஆங்கிலச் சுருக்கெழுத்து முறைகள் பலவற்றை 47-வருஷங்களாய் ஆராய்ந்து, இந்த நூலைத் தாம் தயாரித்திருப்பதாக, ஆசிரியர் கூறுகிறார். ஆசிரியர் தயாரித்திருக்கும் சில ஒலிக் குறிகள் அநாவசியம் என்று நமக்குத் தோன்றுகிறது. உதாரணமாக, முதன் முதலிலேயே 'ப' என்ற எழுத்துக்கு, 'பணம்,' 'இயல்பு,' 'பம்பாய்' என்ற பதங்களில் வருகிறபடி மூன்று ஒலிகள் இருப்பதாக, மூன்று ஒலிக்குறிகள் தயாரித்திருக்கிறார். இம்மாதிரியே 'த,' 'ச' முதலிய வேறு பல எழுத்துக்களின் பல ஒலிகளுக்கும் பல்வேறு குறிகளைச் சேர்த்திருக்கிறார். என்னதான் இவ்வளவு வித்தியாசங்களையும் புகுத்திச் சுருக்கெழுத்துக் குறிப்புக்களை எடுத்தாலும், மீண்டும் அவற்றைத் தமிழ் நெடுக்கெழுத்தில் தானே பெயர்த்து எழுதியாக வேண்டும்? அப்போது இந்த வித்தியாசங்களுக்கு எங்கே போவது? அவற்றைக் குறைத்திருந்தால், இவரது முறையைப் பயில்வது இன்னும் சுலபமாகியிருக்கும். ஆனால், விஸ்தாரமான ஒரு சுருக்கெழுத்து முறையைத் தமிழுக்கென்று இவர் தயாரித்திருப்பதைப் பாராட்டாதிருக்க முடியாது.

* *

In Memorium (தாகூரின் ஞாபகார்த்தம்): தயாரித்தோர்: சக்தி ஔஷதாலயம், டாக்கா. விலை குறிக்கப்படவில்லை.

கவி திலகர் ரவீந்திரநாத தாகூர் காலமானவுடன் மகாத்மா காந்தி முதல் பற்பல தலைவர்களும் பிரபலஸ்தரும் கூறிய புகழுரைகளில் முக்கியமானவற்றை யெல்லாம் திரட்டி, இவர்கள் ஒரு துண்டுப் பிரசுரமாக வெளியிட்டிருப்பது, நல்ல சேவையாகும்.

தம்பதிகள் கடமை

[தமது மகனுடைய விவாகத்தின் போது அவனுக்கு மகாத்மா காந்தி செய்த உபதேசம் பின் வருமாறு:]

“உன் குற்றங்களை நீ ஒன்றும் ஒளிக்காமல், என்னிடம் ஒப்புக்கொண்டு விட்டபடியால், என்னைப் பற்றிய வரையில் உனக்குப் பிராயச்சித்தம் ஏற்பட்டு விட்டது. உலகம் உன்னை ஏமாற்றிய போதிலும், நீ அதை மோசம் செய்ய மாட்டாய் எனும் நம்பிக்கை எனக்குப் பரம ஆனந்தத்தைக் கொடுக்கிறது.

“உன் மனைவியின் கௌரவத்தை நீ காப்பாற்றுவாயாக.

“அவளை அதிகாரம் பண்ணாமல் அவளுக்கு அன்பனாயிரு. நீங்கள் பரஸ்பரம் உடலையும் உள்ளத்தையும் புனிதமாய்ப் பராமரியுங்கள். மனதை யடக்கி, பகவத் தியானத்துடன் உங்கள் கடமையைச் செய்யுங்கள். ஒருவரை யொருவர் அவரவர் இச்சையை நிறைவேற்றும் கருவியாய்க் கருதாதீர்கள்.

“உங்கள் வாழ்க்கையைத் தாய் நாட்டுக்கு அர்ப்பணம் செய்யுங்கள். அதன் சார்பாய் உங்கள் உடல் தேய உழையுங்கள். நாம் ஏழ்மைக்கே பிறந்தவர். ஆகையால் ஏழைகள் பாடுபடுவதுபோல், நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உங்கள் ஊதியத்தைச் சம்பாதியுங்கள். தினசரி வாழ்க்கையின் கஷ்டங்களில் ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து அதில் ஆனந்த முறுங்கள்.

“உங்களுக்கு வழங்க என்னிடம் பரிசுகள் ஒன்றுமில்லை. ஒரு ஜோடி தக்ளியும், நான் அன்புடன் பூஜிக்கும் பகவத் கீதையும், பஜனாவளியும் தான் நான் கொடுக்க இயலும். இப் பருத்தி மாலைகளே உங்களுக்குக் கவசமாகும்.

“கீதை ஒரு பெரிய வைரச்சுரங்கமாய் உங்களுக்கு விளங்க வேணும். வாழ்க்கையின் பாதையை அதுதான் விளக்கி, உங்கள் உழைப்பை உன்னதப் படுத்தும். கடவுள் கிருபையால், பரோபகாரம் நிறைந்த நீண்ட ஆயுள் உங்களுக்கு விளங்குக............”

பாலர் கதை :

திருட்டும் துக்கமும்

ரொம்ப நாளைக்கு முன்னே, வீரமான ஒரு நாய் இருந்தது. அது மிக நாணயமுள்ளது. எல்லா மிருகங்களும் அதனிடம் நம்பிக்கையும் அன்பும் காட்டின.

மிருகங்களின் ராஜாவான சிங்கமும் இந்த வீர நாயை ரொம்ப மதித்தது. அதற்கு அடையாளமாக, தங்கச் சங்கிலி யொன்றையும் பரிசளித்தது. நாய் அந்தச் சங்கிலியை எப்போதும் மிகப் பெருமையோடு கழுத்திலே அணிந்திருந்தது.

நாயின் இருப்பிடத்துக்குக் கொஞ்ச தூரத்துக்குஅப்பால், ஓர் அண்டங்காக்கை வசித்தது. அது மிகவும் முட்டாள். நாயிடம் அதற்கு ரொம்பப் பொறாமை உண்டாயிற்று. நாயின் தங்கச் சங்கிலியை எப்படியாவது திருடிவிட வேண்டுமென்று அது நினைத்தது. அதற்காக வெகுநாள் வரையில், சமயம் பார்த்துக் கொண்டிருந்தது.

நாய் ஒரு நாள் ஆற்றிலே குளிக்க விரும்பியது. சங்கிலி தண்ணீரிலே விழுந்துவிடக் கூடாதல்லவா? ஆகையால, அதைக் கழற்றிக் கரையிலே வைத்து விட்டு, நீரிலே நாய் இறங்கியது. இது தான் சமயம் என்று எண்ணியது அண்டங் காக்கை. திடீரென்று பறந்து வந்து, சங்கிலியைக் கொத்திக் கொண்டு போய் விட்டது.

நாய் இதைப் பார்த்தது. கூடவே காக்கையைத் துரத்திக்கொண்டு ஓடிற்று. ஆனால், மரத்திலே காக்கை தன் கூட்டுக்குள் சென்று பதுங்கிக்கொண்டது. நாய்க்கு மரமேறத் தெரியாது. அது வருத்தத்தோடு மரத்தடியிலேயே உட்கார்ந்திருந்தது.

(நீலா)

காக்கையோ அந்தத் தங்கச் சங்கிலியைத் தன் மனைவியிடம் காட்டி, பெருமை அடித்துக்கொண்டது.

"ஏது இது?" என்று கேட்டது பெண் காக்கை.

தன் திருட்டைச் சொல்ல, ஆண் காக்கைக்கு வெட்கமாயிருந்தது. ஆகையால், என்னவோ புளுகியது.

ஆனால், ஆண் காக்கைக்கு மனசு 'விதுக்கு விதுக்கு' என்று அடித்துக்கொண்டது. "பட்சி ராஜாவுக்கு என் திருட்டுத் தெரிந்தால் என்ன செய்வது? அது என்னைத் தண்டிக்குமே. நாயோ குரைத்துக் கூச்சல் போடுகிறது. இந்தக் கூச்சல் பட்சி ராஜாவுக்குக் கேட்டுவிடுமே" என்றெல்லாம் அது கவலைப் பட்டது.

"இருந்தாலும் இந்த அழகான சங்கிலியை விடுவதா? நான் போட்டுக்கொள்ளத் தான் போகிறேன்" என்று தனக்குத்தானே திடப்படுத்திக்கொண்டது. சங்கிலியையும் அணிந்தது. ஆனால், அது அந்தக் காக்கையின் கழுத்திலே தரிக்க வில்லை; நழுவியது. தவிரவும், சங்கிலியைப் போட்டுக்கொண்டு அதனால் பறக்க முடியவில்லை. பறந்தால், இறக்கையில் சங்கிலி மாட்டிக் கொண்டு, காலில் சிக்கி முறுக்கியது.

"ஐயோ! இது வேண்டாமே! இதனால் தொல்லை தான் மிச்சம். சந்தோஷமே இல்லையே" என்றது பெண் காக்கை.

ஆண் காக்கை, தலையை மட்டில் வருத்தத்தோடு சும்மா ஆட்டியது.

"அதை எறிந்து விடுங்கள்" என்று மறுபடியும்சொல்லியது பெண் காக்கை.

சங்கிலியால் தொந்தரவு தான் வந்தது. கவலையும் சங்கடமும்

உண்டாயின? எதற்கு இந்தச் சங்கிலி? இதை நாயிடமே கொடுத்துவிடலாம் என்று ஆண் காக்கை தீர்மானித்தது.

அப்படியே அதை நாயின் முன்னே கொண்டுபோய்ப் போட்டது. போட்டுவிட்டு, ஆண் காக்கை சொன்னதாவது: "அண்ணு! இனி மேல் நான் திருடவே மாட்டேன். திருடுவது ரொம்பத் தப்பு. திருட்டுச் சொத்தால் சந்தோஷமே உண்டாகாது என்று இப்போது நான் அறிந்துகொண்டேன்."

"இந்தச் சாதாரண விஷயம் இத்தனை நாளாய் உனக்குத் தெரியவில்லையா? நாணயமும் ஒழுக்கமும்தான் சந்தோஷம் தரும். திருட்டும் புரட்டும் ஒரு நாளும் சந்தோஷம் தராது; சங்கடமே தரும்" என்று நாய் பதிலளித்தது.

பிறகு, சங்கிலியைக் கழுத்திலே அணிந்து கொண்டு, ஆனந்தமாய்த் தன் இருப்பிடத்துக்கு ஓடியது.

"மூலதனம், தொழில், மூளை இந்த மூன்றில், கைத்தொழிலுக்கு மிக முக்கியமான அம்சம் எது?" என்று ஆண்ட்ரூ கார்னீஜி என்ற மிகப் பிரசித்தமான கொடையாளியை ஒருவர் கேட்டார்.

"மூன்று கால்கள் உள்ள ஒரு முக்காலியில், எந்தக் கால் மிக முக்கியமாகும்?" என்று, அவர் பதில் கேள்வி கேட்டார்.

* * *

சிப்பாய்களுக்கு ஒரு ராணுவ அதிகாரி செய்த பிரசங்கம்: "உனது கைத்துப்பாக்கியே உனது சிறந்த நண்பன். அதை நீ உன் மனைவியைப்போல் நடத்து. தினம் எண்ணெயில் தோய்த்த ஒரு கந்தைத் துணியால் அதைத் துடைத்து வா..."

* * *

லண்டன் கடைவாசல் ஒன்றில் இந்த விளம்பரம் தொங்குகிறதாம்: "இந்த ஜன்னலில் சாயாதே. இது இங்கே யில்லை."

பாலர் பாட்டு:



மழைக்குப் பின்

'பெ. தூரன்'

வானிலிருந்து தண்மழை வீழ்ந்தது
வாருங்கள் ஓடி விளையாடுவோம்.
மேனிகுளிரவே நீரினில் ஆடிநம்
மானில அன்னை சிரித்து நின்ருள்.

வீதியிலே வெள்ளம் ஓடிவருகுது
வேகமாய்க் கட்டித் தடுத்திடுவோம்.
நூதனமாகவோர் சின்னக் குளம்வெட்டி
நீரினைத் தேக்கி நிறுத்திடுவோம்.

புத்தம்புதியதோர் பச்சைநிறம் போர்த்துப்
பூவரசமரம் தோன்றுது பார்.
முத்துத்துளி கோத்துச் சிங்காரித்தாடியே
மின்னுமிலைகளின் கோலமென்னே!

மாலைக்கதிரோனும் பொற்கிரணக் கையால்
மோகன ஜோதியைத் தூவுகிருன்.
சீலமாயெங்கும் இளமை தளிர்த்தது
சேர்ந்துமே ஆடிட வாருங்களே.

ஒலியும் நிழலும்

இரு குயில்கள்

நந்தவனத்திலே பூக்கள் மலர்ந்து மணத்தை அள்ளி வீசிக்கொண்டிருக்கின்றன. தென்றல், கீதம் இசைத்துச் செல்லுகிறது. மாந்தளிர்களிடையே யிருந்து 'குக்கூகூ' என்று குயில் இனிமையை வாரி விட்டுக் கொண்டிருக்கிறது. எதிர்ப் புறத்து நிலவை அணைத்துச் செல்லும் ஆற்று நீரைத் தாண்டி ஒரு மதுர கானம் வருகிறது. எங்கிருந்து வருகிறது இந்த மதுரகானம்? அதுவும் ஒரு மாங்தோப்பிலிருந்து தான் வருகிறது. இந்த இரண்டு கோகிலங்களும் வெட்கும்படி இரு இன்னிசைகள் எழுந்து குதூகலத்திலே நம்மை மெய்மறக்கச் செய்கின்றன. அந்தக் குயில்கள் எவை? ஒன்று வடநாட்டுக் கோகிலம் ஷாந்தா ஆப்தே. இன்னொன்று தென்னாட்டுக் கோகிலமாகிய எம். எஸ். சுப்புலக்ஷிமி. இந்த இரு குயில்களையும் சாவித்திரியில் கண்டு மகிழாதவரும் உண்டோ? இதற்குத் தனிப் பாக்கியம் வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

* * *

அசோக் - குமார்

கொஞ்ச நாளாக சென்னையில் ஒரு பரபரப்பு இருந்து கொண்டே யிருந்தது. இரண்டு சினிமா ரஸிகர் சந்திக்கும் போது, "அசோக்குமார் எப்போ விஜயம் செய்வார்?" என்ற பேச்சு எழாமல் இருக்காது. "இதோ வருகிறேன், அதோ வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டிருந்த அசோக்-குமாரும் வந்து சேர்ந்தார். எதிர் பார்த்த படியே கூட்டம் ரொம்ப அசாத்தியம்தான். கண்ணம்பா தெலுங்குப் படங்களில் சிறப்பாய் நடித்து வெற்றி பெற்றிருப்பது நமக் கெல்லாம் தெரியும். ஆனால் தமிழில் எப்படியோ சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தோம். அதை கண்ணம்பாவும் நாகையாவும் இதில் மிக நன்றாய் நடித்திருக்கிறார்கள். பாகவதர் பாடும்போது சாதாரணமாக உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விடுவதுண்டு. அந்தக் காரியத்தை இதிலும் செய்துதானிருக்கிறார். 'இளக்கோவ'னின் வசனம் மிக நேர்த்தியாயிருக்கிறது.

* * *

புதிய விநியோகிகள்:

தென்னிந்தியப் படத் தொழிலுக்கு நல்ல காலம் பிறந்து கொண்டே வருகிறது. முற்போக்குள்ளவர்கள் இதில் கவனம் செலுத்தத் தொடங்கி யிருக்கிறார்கள். உதாரணமாக, காரைக்குடி மாஜி நகரசபைத் தலைவரும், பிரபல தனவந்தருமான ஸ்ரீ எம். எஸ். எம். எம். மெய்யப்ப செட்டியாரும், படத் தொழிலில் அனுபவம் மிக்க ஸ்ரீ எம். எஸ். ராமஸ்வாமி செட்டியாரும் சேர்ந்து, **ஸவுத் இந்தியா பிக்சர்ஸ்** என்ற மகத்தான விநியோகக் கம்பெனியை ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். இவர்களுடன் காரைக்குடி நகரசபைக் மாஜி கமிஷனர் ஸ்ரீ டி. புருஷோத்தமனும் சேர்ந்து உழைக்கிறார். மவுண்ட்ரோடிலுள்ள பாரத் பில்டிங்ஸில் செப்டம்பர் 4-ஆம் தேதி யன்று கம்பெனி திறந்து வைக்கப்பட்டது. அன்றைய வைபவத்தில் நகரத்தார் பிரபுக்களில் பலரும், பட விற்பன்னர்களும், சினிமா நட்சத்திரங்களும் விஜயம் செய்து விழாவைச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். இக்கம்பெனியார் உன்னதமான படங்களை வினியோகிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

* *

பந்தனுக்குப் பிறகு:

பந்தன் வந்தது. பெரிய போடு போட்டது. நமக்கும் அதற்கும்

டாக்குமெண்டரி பிலிம்ஸாரின் 'சங்கமாலா' படத்தில் ஒரு காட்சி

ஒரு பந்தத்தையே ஏற்படுத்திவிட்டுப் போய்விட்டது. அடுத்தபடியாக, **நயா ஸம்ஸார்** வந்திருக்கிறது. இதுவும் பம்பாய் டாக்கீஸ் படம் தான். இதன் சிறப்பைப் பற்றிப் பேசப் போனால் அத்தியாயம் அத்தியாயமாக நீளும்போல் இருக்கிறது. வடக்கே இதற்கு வெள்ளி விழாக் கொண்டாடிவிட்டார்கள். மிர்ரர் பத்திரிகை அபாரமாகப் புகழ்கிறது. சரோஜினி தேவியும் ஒரு பாமாலை தொடுத்திருப்பதாகக் கேள்வி. இப்படத்திலே ஒரு பத்திரிகாலயம் இடம் பெற்றிருப்பது குறிப்பிட வேண்டிய அம்சமாகும். ரேணுகா தேவியின் நடிப்பு பிரமாதமாம். அதெல்லாம் எதற்கு? நாமே பார்த்துவிட்டால் போகிறது!

* *

'ஆனந்தன்' தயாராகிறது:

யோகி பிலிம்ஸாரின் **ஆனந்தன்** ஆனந்தமாக வளர்ந்து வருகிறானாம். பூர்ணச் சந்திரன்போல் பொலிவுடன் விளங்கட்டும். ஏனெனில் அதற்காக முயற்சிகள் வெகு தீவிரமாக நடந்து வருகின்றன. வெளிக் காட்சிகள் எடுப்பதிலே மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். இதை ஒரு உயிர்ச் சித்திரமாகக் கொண்டுவந்து கண் எதிரே நிறுத்தவேண்டும் என்பது அவர்களுடைய ஆசை. ராணியின் அந்தப்புரக் காட்சி எடுக்கப்பட்டிருக்கிறது. மற்றக் காட்சிகளும் முதல் தரமாயிருக்குமென்று நம்புவோம்.

* *

புதிய படத்தில் பேபி ஜயா

கூடிய சீக்கிரம் பக்த நாரதர் காட்சி அளிக்கப் புறப்பட்டு விடுவாராம். இந்தப் படத்தில் ஜொலிக்கும் நட்சத்திரங்கள் தங்கள் முழுத் திறமையையும் காட்டியிருக்கிறார்களாம். குமாரி ருக்மணியின் நாட்டியம் அற்புதமாக அமைந்திருக்கிறதாம். இதற்காக 'ஸ்பெஷல்' வாத்தியாரெல்லாம் வைத்து 'நாட்டியராணி' யாக்க, காரியங்கள் நடந்திருக்கின்றனவாம். பேபிஜயாவின் நடிப்பு பார்த்துக் களிக்க வேண்டிய கட்டமாம். குழந்தை சின்னதாக இருந்தாலும், 'அடேயப்பா' என்று ஆச்சரியப் படும்படியாக நடித்திருக்கிறாளாம்.

'சாவித்ரி'யில் நடித்துள்ள சாந்தா ஆப்தே

'சுபத்ரா - அர்ஜுனா'

வெகு ஜோராக வெளி ஊர்களிலே ஓடிக் கொண்டிருக்கிறதாம். கூட்டம் அசாத்தியமாகிக் கொண்டு வருகிறதாம். இதிலிருந்தே ஜி. சுப்புலக்ஷ்மி, மணி, சாமா முதலியோர் படத்தை எப்படி சோபிக்கச் செய்கிறார்களென்பது தெரிகிறது. சென்னைக்கு வரும் நாளை எதிர் பார்ப்போம்.

* *

இழந்த காதல்

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக 'இழந்த காதல்' படம் வளர்ந்து வருகிறதாம். காதலோடு கண்கவர் காட்சிகளும் ஏதேஷ்டமாக உண்டு என்று கேள்வி. ஆமாம், காதலோடு அழகும் வேண்டியது தானே?

* *

ராஜ குமாரி

ஒரு படத்திலே, ராஜகுமாரி ஆண் வேடம் தாங்குவதாகச் செய்தி எட்டுகிறது. ஏற்கனவே சுந்தராம்பாளையும், எம். எஸ். சுப்புலட்சுமியையும் ஆண் வேடத்தில் பார்த்தோம். இனி ராஜகுமாரியையும் பார்க்கப் போகிறோம். ஒவ்வொரு பெண் நடிகையும் ஆண் வேடம் பூண்டுவிட்டால், யாருக்கு முதல் பரிசு கொடுக்கலாம் என்பதையும் முடிவு கட்டி விடலாம் அல்லவா?

பிரமாதமான எம். ஜி. எம். படம்

'ஜீக்பீல்டு' பெண் என்ற ஒரு படத்தைப் பிரமாதமான செலவில், எம். ஜி. எம். கம்பெனியார் இவ் வருஷம் எடுத்திருக்கிறார்கள். ஏராளமான அழகிகளின் பாட்டும் கூத்தும் நிறைந்தது. சென்ற பத்து வருஷங்களில் இம்மாதிரி ஆடம்பரமும் கோலாகலமும் நிறைந்த வேறொரு படம் வந்ததேயில்லையென்று அமெரிக்கா வெங்கும் பிரமாதப்படுகிறதாம். இதை டைரக்ட் செய்தவர் ராபேர்ட் இஸட் லியோனார்டு.

* * *

விசித்திரப் பிறவி

பிராங்க் ராஸ் என்ற ஒரு புரொட்யூஸர், கிராஸ்னா என்ற சினிமாக் கதாசிரியரை, ஹாலிவுட் டென்னிஸ் கிளப்பில் ஒரு நாள் சந்தித்தார். "நான் தனியாக ஒரு பட உற்பத்திக் கம்பெனி ஆரம்பிக்க ஆசையாயிருக்கிறது" என்றார் ராஸ். "நான் கதை எழுதித் தருகிறேன்" என்றார் கிராஸ்னா. உடனே இருவர் பெயராலும் ஒரு கம்பெனி ஆரம்பிக்கப்பட்டது. ராஸின் மனைவியான ஜீன் ஆர்த்தர் "நான் இதில் நடிக்கிறேன்" என்றாள். கதையும், ஸ்கிரிப்டும் தயாராயின. ஆர். கே. ஓ. கம்பெனியார், "நாங்கள் அதை வாங்கிக் கொள்ளுகிறோம்" என்றார்கள். 6 லட்சம் டாலரில் படம் தயாராயிற்று. லாபத்திலே, ஆர். கே. ஓ. வுக்கும் ராஸ்-கிராஸ்னா கம்பெனிக்கும் ஆளுக்குப் பாதி என்று ஒப்பந்தம். இந்தப் படத்துக்குப் பெயர் 'சைத்தானும் கன்னி ஜோன்ஸூம்' என்பதாகும்.

* * *

'குன்றுகளின் ஆயன்'

ஹேரால்டு பெல் ரைட் என்ற எழுபது வயதுக் கிழவர் 17-நாவல்கள் வரை எழுதியிருக்கிறார். ஒவ்வொன்றும் லட்சத்துக்குமேல் செலவழிந்திருக்கிறது. அவருடைய 17-நாவல்களில் எட்டுக் கதைகள் ஏற்கனவே சினிமாவுக்கு வந்துள்ளன. 'குன்றுகளின் ஆயன்' என்ற கதையை இப்போது பாரமவுண்ட் கம்பெனியார் டெக்னி கலர் படமாகப் பிடித்திருக்கிறார்கள். 34-வருஷத்துக்கு முந்திய இந்தக் கதை, இப்போது, அற்புத மலைக் காட்சிகள் நிறைந்த பலவர்ணப் படமாய்ப் புதுப் பிறவியடைந்திருக்கிறது.

4 வது வாரம்
செப்டம்பர் 25உ முதல்
சாவித்திரி
நடிகர்கள்:
சாந்தா ஆப்தே
M.S. சுப்புலக்ஷ்மி
ராவ்·செல்லப்பா
K. சாரங்கபாணி
T.S. துரைராஜ்
கிருஷ்ணவேணி
சாரதாம்பாள்
பாட்டுகள்:
பாபநாசம் சிவன்
ஒளிப்பதிவு: யூசுப் முல்ஜி
ஒலிப்பதிவு· அத்துல் சட்டர்ஜி
ஸ்டுடியோ நியூ தியேட்டர்ஸ்
டைரக்ஷன்: Y.V. ராவ்
சிந்தாமணி டாக்கீஸ்
மதுரை
வெலிங்டன் டாக்கீஸ்
திருச்சி
எடிசன் தியேட்டர்
கோயம்பத்தூர்
3 வது வாரம் வள்ளாள டாக்கீஸ்
மாயவரம்.
சென்னை
பிரபாத்தில்
எதிர்பாருங்கள்
சாந்தா ஆப்தே.
M.S.S. பாட்டுகளை
H.M.V. ரிகார்டுகளில்
கேளுங்கள்!
RAYAL TALKIE
DISTRIBUTORS
MADURA
W. A. Menon

ரொக்க இனும் ரூ. 10,000

லக்ஷ்மி, சித்த வசீகரன் கவசங்கள்

இந்தக் கவசங்களைப்பற்றி பொது ஜனங்கள் கொண்டிருக்கும் முடிவை வாசகர்கள் அறியவேண்டும். 15-4-41.ல் பிரேம் என்பவர் டில்லியிலிருந்து எழுதுகிறர்: "உங்களுடைய தாயத்து எனக்கு பல நன்மைகளைத் தந்திருக்கிறது, நிரம்ப திருப்தி. இப்போது 7 ரூ. 5 அணு விலையுள்ள உங்கள் உயர்ந்த 5-ம் நெம்பர் கவசத்தை பரீட்சிக்க விரும்புகிறேன். அதில் ஒரு அபேக்ஷையால் நான்கு காரியங்கள் சித்திக்குமென்று சொல்லப் படுகிறது. தயவு செய்து சீக்கிரம் ஒன்று அனுப்பி வையுங்கள்."

சித்த வசீகரன் கவசம்: ஆணே பெண்ணே, நண்பரோ, பகைவரோ, நீங்கள் காதலிப்பவர் உங்களிடம் எவ்வளவு பிடிவாதமாக அல்லது உபேக்ஷையாக விருந்தாலும் உங்கட்கு கீழ்ப்பட்டு மனமார நேசிப்பார்கள். விலை தங்கக்கூடு ரூ. 5-15-0, வெள்ளி ரூ. 2-12. செம்பு ரூ. 1-15. (3-க்கு 5 ரூபா).

லக்ஷ்மி கவசம்: செல்வத்தை வேண்டுபவர்க்கு இந்தக் கவசத்தை சிபார்சு செய்கிறேம். இது கெட்ட கிரகங்களின் பார்வையைத் தடைப்படுத்தி அதிர்ஷ்டத்தைத்தரும். வியாபாரம், லாட்டரி, பரீட்சை, வழக்கு ஆகியவற்றில் வெற்றிதந்து, பகைவர்களை வென்று, வேலை கொடுத்து உதவும். இன்னும் வரும் நன்மைகள் பல. குழந்தைப் பேறு வேண்டுவோர் புருஷனும் பெண்ணும் ஒவ்வொன்றை அணிக.

விலை செம்புக்கூடு ரூ.1-15 (3-க்கு ரூ.5) வெள்ளி ரூ.2-12. தங்கம் ரூ.5-15.

ஒரே கவசத்தில் 4 காரியம் வெற்றி வேண்டுவோர் ரூ. 7-5-க்கு எங்கள் 5-ம் நம்பர் அதி சக்தி கவசத்தை வாங்குக.

அடிக்கடி கருவழிந்துவிடும் பெண்களுடைய புருஷர்களும் சிறு பிராயத்தில் குழந்தைகள் இறக்கும் தந்தையரும் 3-ம் நம்பர் கவசம் வாங்குக. விலை ரூ. 11.

குறிப்பு: (1) மேற்குறித்த கவசங்கள் பொய்யானவை என்று நிரூபிப்பவர்கட்கு 10 ஆயிரம் ரூபாய் இனும். கவசம் பொய்யானல் பணம் வாபஸ்.

(2) இந்த கவசங்களை அணிய எவ்வித தயாரிப்பும் வேண்டியதில்லை; கஷ்டமும் கிடையாது.

ANAND SWAMI, ANAND KUTI,
P. B. 61, (D. 1413) LAHORE (India.)

அனுபவ ஜோதிஷர்

திறமைக்கு தங்க மெடல்களும் நற்சாட்சிகளும் பெற்றவர், எதிர்காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. மாதவாரி ஒரு வருஷ பலன் ரூ 5. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரொபஸர் காழியூர் கோவிந்தாச்சாரி
3/2, பிரடீஸ் ரோட், மயிலாப்பூர்
மதராஸ்

நல்ல

பழங்களுக்கு

FANCY FRUIT STALL

Corporation Fruit Market

Madras

சென்னை-600 008.
134190

அகஸ்தியர் அமிர்தம்

(18 வித குஷ்டரோக நிவாரணி)

இந்த அமிர்தம், ஹிமாலய பர்வதத்திலும், திபெத்திலும் இன்னும் அநேக மலைப் பிரதேசங்களிலு முள்ள அபூர்வ மூலிகைகளைக் கொண்டு இந்து, சீன, புத்த சாஸ்திர முறைப்படியும் மகா யோகீஸ்வராள் அருளிய படியும் மிக்க கவனத்துடன் அதிக பொருட் செலவில் தயாரிக்கப்பட்ட ஒப்பற்ற மருந்து.

எப்பேர்ப்பட்ட நாளான வியாதியாக இருந்தபோதிலும், சரீர முழுதும் அழுகி ஜலம் சொட்டிக் கொண்டிருந்தாலும் ஐந்து மாதத்தில் கண்டிப்பாய் பூர்ண சுகம் தந்து பழைய திரேகம் போலாக்கும். ரத்த பரீக்ஷையும் செய்து கொள்ளலாம்.

தயாரிப்பவர்கள்:

அம்பிகா ஔஷதாலயம் லிமிடெட்
17, அரிசிக்காரத் தெரு, மைலாப்பூர், மதராஸ்.

நெருங்கிவிட்டது முந்துங்கள்

தீபாவளிப் பண்டிகைக்கு நேர்த்தியான உடைகள்

இங்கே சரசமாய் வாங்கக் கூடிய இடம்

மாடர்ன் ஷாப்

கிஷின்சண்டு செல்லாராம்

181, மவுண்டுரோட்
மதராஸ்

பல ரகங்களில் ஆயிரக் கணக்கான, பட்டு சேலைகள், நூல் சேலைகள், ஜார்ஜெட் சேலைகள், வாயில் சேலைகள், தாவணிகள், ஜாகெட்டுகள் தனி பட்டுக் கரைகள், ஜரிகைக் கரைகள்.

ஜிகினு வேலைகள்.

ஸ்திரீ புருஷர்களுக்கும், மற்றும் சிறியோர்களுக்கும் ஏற்ற உடைவகைகள்.

நாள், கிழமைகளில் வழங்கத்தக்க அழகிய நூதன வஸ்துக்கள்.

தையல் வேலைகளும்.

அமெரிக்கன் புதுமாடல்

அலாரம் டைம்பீஸ்



ஹஸ்லர் ரூ. 10-8-0

ரோல்ஸ்

பிரிசிஷன் கடியாரங்கள்



முற்றிலும் ஜூவல் உள்ள உயர்தர கடியாரங்கள்

ஸ்டீல்	ரூ.	60
ரோல்டுகோல்டு	,,	65
9 காரட்கோல்டு	,,	90
18 காரட் கேஸ்	,,	120

பேபி பென்



(புதுமாடல்) ரூ. 16 8

GANI & SONS

55-57, RATTAN BAZAAR, MADRAS

Edited, Printed and Published by V. Govindan at Shakti Press Limited
(Shanti Press), 46, Muthumari Chetti Street, G.T., Madras. Joint Editor: T. J. Ranganathan.